## மேனிலை முதலாம் ஆண்டு

# சிறப்புத்தமிழ்

## வகுப்பு

## XI

**HIGHER SECONDARY COURSE**

**TAMIL - OPTIONAL**

**First Year**

கேரளஅரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

*Prepared by* State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala.
*Website* www.scert.kerala.gov.in *e-mail* scertkerala@gmail.com

*Typeset and design by* SCERT Computer Lab
*To be printed in quality paper - 80gsm map litho (snow-white)*

© Government of Kerala • Department of Education • 2014

***மாணவச் செல்வங்களே!***

**மொழி** என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டுமன்றி நமது வாழ்வின் ஒரு பகுதியாகவும் விளங்கு கின்றது. உலகில் உள்ள எத்தனையோ மொழிகளில் மிகவும் வளமிக்க மொழியாகத் திகழ்வது தமிழ் மொழி யாகும். மொழிக்கல்வி நமது பண்பாடு, கலை, இலக்கியங் களை அறிந்துகொள்ள துணைபுரியும் வகையில் அமைய வேண்டும். மாணவர்கள் இப்பாடநூல் வாயிலாகப் பல்வேறு இலக்கியப் பகுதிகளைக் கற்றுத் திறன் பெறும் வகையில் செயல்பாடுகளும் மொழிப் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கற்கும் மாணவன் மொழித்திறனுடன் கற்பனைத் திறனையும் இலக்கிய ஆற்றலையும் பெற வேண்டும். மட்டுமன்றி, கால கட்டத்திற்கு ஏற்ப மொழியைப் பயன்படுத்தவும் இந்நூல் உறுதுணை புரியும் என்பதில் ஐயமில்லை. மொழித் தொடர்பான பல்வேறு துறைகளில் வல்லமை பெற்றுத் திகழ்வதற்கும் இந்நூல் வழிவகுக்கும். இதனை முறையாகக் கற்றுப் பயன் அடைய வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகள்,

**பேராசிரியர் கே.ஏ. ஹாஷிம்**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Team

## STD XI TAMIL - OPTIONAL

### *Members*

Jasmine J., HSST,Govt.Tamil V & HSS & TTI ,Chalai, Tvpm.

Dr. Jeyakrishnan, HOD,Dept.of Tamil, .University of Kerala,Tvpm.

Dr. Karunanithi M., HSST, Govt.Tamil V & HSS & TTI ,Chalai, Tvpm.

Dr. Manickaraj , Asst.Prof,University College,Palayam, Tvpm.

Singh M. B., HSA (Rtd), Govt.Tamil V & HSS & TTI ,Chalai, Tvpm.

Dr.Santhi P., Asst.Prof,University College,Tvpm.

Dr. Vijayalakshmi T., Asst.Prof. ,Dept.of Tamil ,University of Kerala,Tvpm.

### *Experts*

Dr. Doctor Nazeemdeen, Prof.,(Rtd.), Kerala University, Thiruvananthapuram.

Dr. Gomathy nayagam, E., Guest Lecturer. University of Madras, Chennai.

Dr. Kanchana, Prof. & Head, (Rtd.), University of Kerala, Thiruvananthapuram.

Dr. Nainar. M., Reader., (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Prof., PILC, Pondicherry.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.

Dr. Sethupandian Prof., M.K. University Madurai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

### *Artists*

Muthuraj, Artist ,Kozhinjampara,Palakkad

Siva Kumar, Artist, Kozhinjampara, Palakkad.

### *Academic Co-ordinator*

Dr. Sahaya Dhas D., Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


அலகு 1. கவிதைச் சிமிழ் .................................... 7 - 23
- மானுடம் .................................... 8
- அறிவு .................................... 15
- குருவிக்கு வேண்டுகோள் .................................... 17
- அறிமுக நோக்கில் ஹைகூ .................................... 20

அலகு 2. விரல் நுனியில் உலகம் .................................... 24 - 55
- இணையமும் இலக்கியமும் .................................... 25
- பச்சை வயல் .................................... 32
- பரிசுத்த அன்பில் நீந்தும் மீன்கள் .................................... 39
- பாலுமகேந்திராவுடன் சிலநொடிகள் .................................... 44

அலகு 3. தொன்மை .................................... 56 - 71
- மொழி .................................... 57
- தமிழ்விடு தூது .................................... 64
- எது தமிழ்ச் செல்வம் .................................... 65
- எங்கள் தமிழ் .................................... 67
- மொழியியலில் ஒலியியல் .................................... 69

அலகு 4. மண்ணின் மணம் .................................... 78 - 113
- தன்னன்னானே .................................... 79
- பொன்னிறத்தாள் கதை .................................... 88
- ஐவர் ராசாக்கள் கதை .................................... 90
- பழமொழியும் நகைச்சுவையும் .................................... 93
- தோல்பாவைக் கலைஞருடன் ஒருநாள் .................................... 98
- பாம்பு! பாம்பு! .................................... 110

அலகு 5. பழமையும் இனிமையும் .................................... 114 - 131
- எட்டும் பத்தும் .................................... 115
- சுடரொளி .................................... 128

அகரமுதலி .................................... 132

## அலகு 1

# கவிதைச் சிமிழ்

இன்ன வடிவில் இத்தனை வரிகளில் இப்படித்தான் இருக்கவேண்டுமென்ற இலக்கண மரபை உடைத்தெறிந்து வலுவான கருத்தாழமான வரிகளில் வடிப்பதே புதுக்கவிதை. கட்டுப்பாட்டுக்குள் அகப்படாமல் வாசகனின் வாசிப்புக் கேற்றவாறு கருத்துகள் அமைந்திருப்பதே புதுக்கவிதை. துள்ளல் நடையில் சொற்சிலம்பாட்டம் ஆடுவது மரபுக்கவிதை; படிமம், குறியீடு, பன்முக வாசிப்பில் அகவிழி திறக்க வழிகாட்டுவது புதுக்கவிதை.

**கற்றல் அடைவுகள்.**

- படைப்புகளில் கையாளப்படும் உத்திகளை ஆழமாகப் புரிந்துகொண்டு, பகுப்பாய்வு செய்து, மதிப்பீடு செய்தல்.
- கவிதைகளைத் திறனாய்வு செய்தல்.


# மானுடம்

## பற்று வரவு

வாழ்க்கையெல்லாம் பற்று எழுதியவனே!
உன் பங்குக்கு ஒரு வரவாவது
வைத்துவிட்டுப் போ!

இந்தப் பூமிக்கு
ஒரு பிச்சைக்காரனாகவே வந்தாய்
ஒரு கடனாளியாகவே
சாகப் போகிறாயா?

என்னுடையது என்று
நீ உரிமை கொண்டாடும் எதுவும்
உன்னுடையதல்ல
உன் உடல்
உன் பெற்றோர் இட்ட பிச்சை
உன் சுவாசம்
நீ காற்றிடம் வாங்கிய கடன்



நீ சுவைத்த வாழ்க்கை
பல தேனீக்கள் திரட்டி வைத்த
தேன் என்பதை அறிவாயா?

பசித்த போதெல்லாம்
பூமியின் மார்பில் பால் குடித்தாயே!

ஆயுள் முழுதும்
ஐந்து பிச்சைப் பாத்திரங்களில்
வாங்கி உண்டாயே!

எதற்காவது விலை கொடுத்தாயா?
வாடகையாவது தந்ததுண்டா?
நன்றியாவது செலுத்தினாயா?

மேகத்தின் நீரையும்
சந்திர சூரிய விளக்குகளையும்
பயன்படுத்தினாயே!
கட்டணம் கட்டியதுண்டா?

அனுபவங்களின்
திருமணங்களுக்கு வந்து
விருந்துண்டாயே!
மொய் எழுதினாயா?

சமூகம் கட்டிய
கூரைகளின் அடியில்
குடியிருந்தவனே!
'தீ' விபத்து நடந்தபோது
உன் பங்குக்கு ஒரு வாளி நீராவது
வீசினாயா?

உன் முன்னோரின் நதிகளிலிருந்து
உன் வயல்களுக்கு
நீர் பாய்ச்சிக் கொண்டவனே!
'வெள்ளம்' கரையுடைத்தபோது
ஒரு தட்டாவது
மண் சுமந்தாயா?
அறிமுகம் இல்லாத கைகளால்
கண்ணீர் துடைக்கப்பட்டவனே!
சக மனிதனின்
ஒரு கண்ணீர்த் துளியையாவது
நீ துடைத்திருக்கிறாயா?

யாரோ ஊற்றிய நீரால்
புன்னகை பூத்தவனே!
ஒரு காய்ந்த உதட்டிலாவது
நீ புன்னகையை மலர்த்தியிருக்கிறாயா?

என்ன உறவு உன் உறவு?

வாங்கலை மட்டும் செய்தாயே!
கொடுக்கலைச் செய்தாயா?

எந்தக் கையாலோ
சுடர் ஏற்றப்பட்டவனே!
ஒரு விளக்கையாவது

### எது புதுக்கவிதை?

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தென்றல்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவை எதுவுமில்லாத
கருத்துக்கள்
தம்மைத்தாமே
ஆளக்கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே புதுக்கவிதை

**மு. மேத்தா**

நீ ஏற்றிவிட்டுப் போக வேண்டாமா?
மொத்தமாகச் செத்துப் போகிறாய்
கொஞ்சம் சில்லறையாகவாவது
நீ இங்கே இருக்க வேண்டாமா?

மரணக் காற்றில்
ஒரு விளக்கைப் போல்
அணைந்து போகாதே!
ஓர் ஊதுவத்தியைப் போல்
கொஞ்சம் நறுமணமாவது
விட்டு விட்டுப் போ!

உன் சாவில் சாம்பலை அல்ல
நெருப்பை விட்டுச் செல்!
மண்ணில் ஒரு காயத்தை அல்ல
ஒரு மருந்தை விட்டுச் செல்!

ஒரு தடயமும் இல்லாமல்
மறைவதற்கு வெட்கப் படு!
குற்றவாளிதான் அப்படிச் செய்வான்

ஆறாவது அறிவு என்பது
கிறுக்குத்தனமா?

உயிரினங்களில் மனிதன் மட்டும்தான்
அரசியல் கலையைக் கண்டுபிடித்த
வன்
ஆறாவது அறிவு என்பது வஞ்சக வலையா?

உயிரினங்களில் மனிதன் மட்டும்தான்
சகமனிதனின்
காலில் விழுந்து வணங்குபவன்
ஆறாவது அறிவு என்பது
சுயமரியாதையின் கல்லறையா?
உயிரினங்களில்
மனிதனைத் திருத்தத்தான்
தூதர்களும்
அவதாரங்களும்

**புதுக்கவிதையின் தோற்றம்**

வசன கவிதை, இலகு கவிதை, உரைவீச்சு, கட்டற்ற கவிதை (Verse Libra), புதுக்கவிதை (New poetry) எனப் பலப்பல பெயர்களில் வெளிவரும் புதுக்கவிதை என்கின்ற இலக்கிய வகையைத் தோற்றுவித்தவர் அமெரிக்கக் கவிஞர் வால்ட்விட்மன் (1819 – 1892).

1910 இல் அமெரிக்காவில் இவர் ஆங்கில யாப்புக் கட்டுக்கோப்புக்கு எதிராகக் குரலெழுப்பினார். இதன் காரணமாக ஆங்கிலத்தில் புதுக்கவிதை (New poetry) என்றும் பிரெஞ்சு இலக்கியத்தைப் பின்பற்றிக் கட்டற்ற கவிதை (Verse Libra) என்றும் புதிய கவிதை முயற்சிகள் தோன்றின. ஆங்கில இலக்கியத்தில் வால்ட் விட்மன் படைத்த புல்லின் இதழ்கள் (Leaves of grass) யாப்புத் தளைகளைத் துண்டித்துச் சுதந்திரமாக வந்து பலருடைய கவனத்தை ஈர்த்தது. இவருடைய கவிதை முயற்சிகள் எஸ்ரா பவுண்ட். டி. எஸ். எலியட் ஆகியோரால் தொடரப்பட்டன.

உலகைப் பார்த்து விரக்தியும் அவலமும் கொண்ட நிலையில் மனிதனை வெற்றுக் கூடாகவும் உலகைப் பாழ் நிலமாகவும் கண்டனர். தனித்தனிச் சுதந்திரத்தில் நாட்டம் கொண்டனர். இந்தப் பின்னணியில் தோன்றியதுதான் டி. எஸ். எலியட்டின் பாழ்நிலம் (Waste Land). அதற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதன்பின்புதுக்கவிதைக்கு ஆதரவு பெருகிற்று. வால்ட்விட்மனால் ஈர்க்கப்பட்ட பாரதியார்.

வேதங்களும்
நீதி நூல்களும்
தேவைப்படுகின்றன
ஆறாவது அறிவு என்பது
நோயா?

உயிரினங்களில்
மனிதன் மட்டும்தான்
ஆறாவது அறிவைப்
பெற்றிருக் கிறான்
அதற்காக அவன் பெருமைப்படுகிறான்.

## மானுடத்தின் திருவிழா

கோலத்திற்காக வைக்கும்
புள்ளிகளைப் போல்
வானத்து நட்சத்திரங்களில்
ஒழுங்கு இல்லை
ஆனால்
நட்சத்திரங்களின் அழகு
கோலப் புள்ளிகளில் இல்லை

நாம் வெட்டும் வாய்க்கால்களைப் போல்
நதிகள் நேராக ஓடுவதில்லை
ஆனால்
நதிகளின் சௌந்தர்யம்
நம் வாய்க்கால்களில் இல்லை

நாம் வளர்க்கும் பூங்கா மரங்களைப் போல்
காட்டு மரங்களில்
கட்டுப்பாடு இல்லை
ஆனால்
காட்டின் கம்பீரம்
நம் பூங்காவில் இல்லை

நாம் பாடும் சங்கீதத்தைப் போல்
குயிலின் பாட்டில்
இலக்கணம் இல்லை
ஆனால்

**புதுக்கவிதை இயல்புகள்**

1912 இல் எஸ்ரா பவுண்ட் டின்டன் என்பவருடன் இணைந்து புதுக்கவிதைக்கென சில கொள்கைகளை உருவாக்கினார்.

❖ பொருளை நேரடியாக அணுகவேண்டும்.

❖ கவிதையின் வெளிப்பாட்டிற்குத் தேவையில்லாத எந்த ஒரு சிறு சொல்லையும் சேர்க்கக் கூடாது.

❖ இறுக்கமான யாப்பு முறைகளை விலக்கி விட்டு இசை லயத்தைப் பின்பற்ற வேண்டும்.

இம்மூன்று கொள்கைகளும் புதுக்கவிதை வகைக்குரிய குறிப்பிடத்தக்க இயல்புகள்.

புதுக்கவிதையின் இன்னொரு சிறப்பியல்பாக வலியுறுத்தப்படுவது படிமம். எஸ்ரா பவுண்ட் இதில் மிகுந்த கவனம் செலுத்தினார். .

தனி மனித அனுபவங்கள் புதுக்கவிதைகளில் பல கோணங்களில் வெளிவந்தன. குறியீடு, தொனி, படிமம் போன்றவை புதுக்கவிதைகளில் புதிய பண்புகளாக வெளிப்பட்டன.

பல பக்கங்கள் கொண்ட வைரக்கல் போன்றது புதுக்கவிதை. ஒரு பக்கம் அழகு; புதுமாதிரியான அழகு, வியக்கும் அழகு. ஒரு பக்கம் ஏக்கம், மனமுறிவு, பெருமூச்சு, காதல், தத்துவம், கோபம், சந்தேகம், அறைகூவல் தன் மனத்தையே குடைந்தெடுத்து ஆராயும் நேர்மை பாலுணர்ச்சி இப்படிப் பல பக்கங்கள் உண்டு. சுருங்கச் சொன்னால் இன்று நம்மிடையே இருக்கும் உணர்ச்சிகள் அனைத்தின் பிரதிபலிப்பையும் நாம் புதுக்கவிதையில் காண்கிறோம் என்ற சார்வாகனின் விளக்கம் புதுக்கவிதையின் உள்ளடக்கத்தை எடுத்துரைப்பதாக உள்ளது.

குயில் பாட்டின் குதூகலம்
நம் சங்கீதத்தில் இல்லை

நாம் ஆடும் பரதம் போல்
மயிலின் நடனத்தில்
தாள லயம் இல்லை
ஆனால்
மயில் நடனத்தின் பரவசம்
நம் பரதத்தில் இல்லை
படைகளின் நடையைப் போல்
கடல் அலைகளில் அணிவகுப்பு இல்லை
ஆனால்
அலைகளின் உல்லாசம்
படைகளில் இல்லை

நாம் எழுதும் வாக்கியம் போல்
மின்னலில் மரபு இல்லை
ஆனால்
மின்னலின் அர்த்த ஆழம்
நம் வாக்கியங்களில் இல்லை

நமக்கிருப்பது போல்
பறவைகளுக்கு
நாடுகளும்
எல்லைகளும் இல்லை
ஆனால்
பறவைகளின் சுதந்திரம்
நம்மிடம் இல்லை

நமக்கிருப்பது போல்
மேகங்களுக்குப்
பாதைகளும்
பயண லட்சியங்களும் இல்லை
ஆனால்

### குறியீட்டியல் (Symbolism)

குறியீட்டியல் என்பது குறியீடு (Symbol) என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். ஒரு சொல் அதன் பொருளைக் குறிப்பதோடு அதன்கண் காண முடியாத அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைக் குறிப்பதாகும். நம் வாழ்வில் சகல துறைகளிலும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. தராசு நீதியின் குறியீடு, நரி தந்திரத்தின் குறியீடு. கவிஞர்களின் சிறப்பான உணர்வுகளை வெளியிடும் கருவியாகக் குறியீட்டியல் அமைந்தது.

சொல்லில் அர்த்தத்தை நேரடியாகத் தரும் முயற்சிக்குப் பதிலாகக் குறியீடுகளைப் பயன்படுத்துவதன் வாயிலாக அர்த்தத்தை வாசகன் மனதில் விரியச் செய்யும் முயற்சியே குறியீட்டியல். சொற்களின் கைகாட்டலுக்குக் காத்திராமல் கவிஞன் வெளிப்படுத்தும் அர்த்தத்தை வாசகன் நேரடியாகச் சென்று அடையும் முயற்சியே குறியீட்டியல் என்னும் இலக்கிய முயற்சி. அவன் பயன்படுத்தும் குறியீடு வெறும் சொல்லாக இல்லாமல் அதுவே பொருளாகி விடுகிறது என்கிறார் பாலா.

வெற்றுச் சொற்களையும் அலங்காரச் சொற்களையும் தவிர்த்துக் கொண்டு கவிதை இறுக்கமும் செறிவும் பெற்றுத்திகழக் குறியீடுகள் பெரிதும் பயன்படுகின்றன. உணர்ச்சியையும் எண்ணங்களையும் அவை துல்லியமாக வெளிச்சம் பாய்ச்சிக் காட்டுகின்றன.

மேகங்களின் ஆனந்தம்
நம்மிடம் இல்லை

நமக்கிருப்பது போல்
மலர்களுக்கு அரசியல் இல்லை
ஆனால்
மலர்களின் கொண்டாட்டம்
நம்மிடமில்லை
நமக்கிருப்பது போல்
மிருகங்களிடம் மதம் இல்லை
ஆனால்
மிருகங்களின்
கள்ளம் கபடமில்லாத குணம்
நம்மிடமில்லை

நாம் அடைப்புக் குறிகளுக்குள்
அடைக்கப்பட்டவர்கள்

விற்பனைக்காகச்
சந்தையில் கூறு கட்டிக் கிடப்பவர்கள்

சட்டத்தின் கைதிகள்
சம்பிரதாயத்தின் கொத்தடிமைகள்
அட்டவணைகளுக்குப் பிறந்தவர்கள்
செயற்கையின் பலி பீடத்திற்காக
வளர்க்கப்படும் ஆடுகள்

இலக்கணங்களுக்கு அப்பால்
இருக்கிறது அழகு
செயற்கைக்கு அப்பால்
இருக்கிறது சுதந்திரம்
எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ
அங்கேதான்
மானுடம் திருவிழாக் கொண்டாடுகிறது

**– அப்துல் ரகுமான்**



**அப்துல் ரகுமான்**

இவர் 02.11.1937இல் மதுரையில் பிறந்தார். பால்வீதி, நேயர் விருப்பம், சுட்டுவிரல், பித்தன், ஆலாபனை போன்றவை இவரது கவிதைத் தொகுப்புகள். ‘ஆலாபனை’ என்னும் கவிதைத் தொகுதிக்கு மத்திய சாகித்ய அகாதமியின் விருது பெற்றார். வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் பணிபுரிந்தவர்.





## செயல்பாடுகள்

- “நமக்கிருப்பது போல்
  பறவைகளுக்கு
  நாடுகளும்
  எல்லைகளும் இல்லை
  ஆனால்
  பறவைகளின் சுதந்திரம்
  நம்மிடம் இல்லை”

  இக்கவிதை வரிகள் குறித்துக் கலந்துரையாடுக.

- **மானுடத்தின் திருவிழா** என்ற கவிதையை வாசித்து விமர்சனக்குறிப்பு தயார் செய்க.

- மனிதனும் இயற்கையும் என்ற தலைப்பில் கலந்துரையாடிக் குறிப்பு தயார் செய்க.

# அறிவு

புல்லுக்குப் போட்டியாக
மண்டும் கிருமி குண்டைச் செய்வோம்.
மாட்டுக்குக் கன்றைக் காட்டி
பாலினைச் சுரக்கச் செய்யும்
மடமையை.
கலையின் குறைவை,
காட்டுவதற்காக வென்றே
வைக்கோலும் தோலும் ஆன
தந்திரம் ஒன்றைச் செய்வோம்.
பாலை யாம் வரவழைப்போம்
உழைப்புக்கு ஓய்வை அளிக்கும்
உணவு சத்துக்கள் செய்வோம்
ஆண் பெண்ணின் கலவியின்றி
உயிரை உற்பத்தி செய்யும்
உயிரியல் மர்மம் தேடி
உழைக்கின்றோம்.
வெற்றி காண்போம்.
நோக்கின்றி சாட்டையின்றி
தானாக விரையும் கிரகமாம்
சந்திரன், செவ்வாய், சுக்ரன்
மீதினில் குதிரை ஏறி
தளங்களை அமைத்து விடுவோம்.
அருளெனும் ஜாலவித்தை
செலாவணி ஆகாதய்யா.
மடமையால் உலகைச் செய்தால்
அறிவினால் களைதல் தவறா?


**– ந. பிச்சமூர்த்தி**

**படிமவியல் (Imagism)**

படிமம் என்பது அறிவாலும், உணர்ச்சியாலும் ஆன ஒரு மனப்பாவனையை ஒரு நொடிப்பொழுதில் தெரியக் காட்டுவது. கண்ணால் காணக்கூடிய பருப்பொருட்களையோ, மனதால் உணரக் கூடிய நுண்பொருள்களையோ கவிதை நயத்தோடு ஆள்வதும் அவ்வுணர்வைப் படிப்போரிடத்து உணரச் செய்வதும் படிமத்தின் செயற்பாடு எனலாம். இப்படிமத்தைக் காட்சி உரு என்றும் உருக்காட்சி என்றும் அழைப்பர்.

தமிழிலக்கியத்தில் உவமை, உருவகம், முற்றுருவகம் என்றெல்லாம் வழங்கப்பட்ட அணிகள் இன்று படிமம் என்று அழைக்கப்படுகின்றன. உளவியல் நோக்கில் நின்ற படிமம், மனப்படிமம் (Mental Image) என்றும் கலையியல் நோக்கில் நின்ற படிமம் அணிப்படிமம் (Figurative image) என்றும் குறியீடாக நிற்கும் படிமம் குறியீட்டுப் படிமம் (Symbolic image) என்றும் படிமங்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

**ந. பிச்சமூர்த்தி** (1900 - 1976)



கும்பகோணத்தில் பிறந்தார். வழக்கறிஞர், இதழாசிரியர் என்று பல நிலைகளில் பணியாற்றியவர். சிறுகதைத் துறையிலும் புதுக் கவிதையிலும் முதல்வராக இடம் பெற்றவர். ஆறு சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்பு, சிறுவர் கதைத் தொகுப்பு ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நூல்கள்.

## செயல்பாடுகள்

- "நோக்கின்றி சாட்டையின்றி (அறிவு)
  தானாக விரையும் கிரகமாம்"
  சந்திரன், செவ்வாய், சுக்ரன்
  மீதினில் குதிரை ஏறி
  தளங்களை அமைத்துவிடுவோம்

  இப்பாடலடிகளை இன்றைய அறிவியல் வளர்ச்சியோடு ஒப்பீடு செய்து **அறிவியலும் தமிழும்** என்ற தலைப்பில் சிறுகட்டுரை தயார் செய்க.

- அறிவியல் தொடர்பான புதுக்கவிதைகளைத் திரட்டுக.

# குருவிக்கு வேண்டுகோள்



**கூ**டு கட்ட விடமாட்டேன்
சின்னக் குருவியே! என் வீட்டு
சன்னல்கள் திறந்திருக்கக் காரணம்
பருவக் காற்றுகள் உள்ளே வர.

எஞ்சிய உணவின் வாசம் மறையவும்
துவைக்கப் படாத
துணிகளின் வாடை போகவும்
இன்னும் ஏதோ ஒன்று என்னவென்று
தெரியாத ஒன்றின் சிறு நெடி போகவும்
பருவக் காற்றுகள் உள்ளே வீசத்
திறந்துள்ளன எனது சன்னல்கள்.

எனது வீட்டுக்குள் வருவோர்
தமது வாசத்தோடு வந்து போகிறார்
திரும்பிப் போகும்போது அதிலே கொஞ்சம்
விட்டு விட்டே போகிறார் தெரியுமா?

சன்னல் வழியே சிறகை மடக்கி
வர முயலாதே சின்னக் குருவியே!
கூடு கட்டப் பொருந்திய இடங்கள்
இல்லை குருவியே எனது வீட்டில்.

நாட்டின் வளர்ந்த மரங்கள் எல்லாம்
என்ன ஆயின? நீயேன் கூட்டை என்
வீட்டுக்குள் கட்ட வளைய வருகிறாய்?

வெள்ளிக்கிழமை விஜயம் செய்யும்

**ஒலியும் எழுத்தும்**

மொழி என்பது பல்வேறு ஒலிகளால் ஆனது. அ, க, ம, ழ என்பன வேறுபட்ட ஒலிகள்.

ஒருமொழியில் அடிப்படையாகப் பயன் படுத்தப்படும் ஒலிகளை உயிரொலிகள், மெய்யொலிகள் என வகைப்படுத்தலாம். அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டும் தமிழ் மொழியின் உயிரொலிகள்.

மொழிக்குத் தேவைப்படும் பிற ஒலிகளான க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ள், ழ், ற், ன் ஆகிய பதினெட்டும் தமிழ் மொழியின் மெய்யொலிகள்.

உயிரொலியும் மெய்யொலியும் இணைந்து ஒலிப்பதை உயிர்மெய் ஒலி என்பர். பன்னிரண்டு உயிரொலிகளும் பதினெட்டு மெய்யொலிகளுடன் சேர்ந்து வரும்போது 216 உயிர்மெய் ஒலிகள் தோன்றும். (க, கா, கி, கீ ............... என வரும்)


ஆய்தம் (ஃ) என்ற ஒலியும் தமிழில் உண்டு.

| | |
|---|---|
| உயிரொலி | - 12, |
| மெய்யொலி | - 18, |
| உயிர்மெய் ஒலி | - 12 × 18 = 216 |
| ஆய்தம் | - 1 |
| **மொத்தம்** | **- 247** |

சாம்பல் பூனையா? கண்ணெதிரில்
ஆள் இருக்கவும் உள்ளே நுழையும்
கிழமை பாராட்டாத பெரிய எலியா?
புறப்படும் போது தோள் மேல் குதிக்கும்
செவ்வாய்ப் பல்லியா? எது உனக்குப்
பரிந்துரை செய்தது எனது வீட்டை?
வீட்டில் மனைவியோ தாயோ கட்டிக்
கொடுத்த
பொட்டலத்து மதிய உணவை
ஓட்டலில் வைத்து சாப்பிடும் நடுத்தர
வர்க்கத்து உழைப்பாளி போல எனது
வீட்டுக்குள் புழு பூச்சிகளைக்
கொணர முயல்கிறாய் சின்னக் குருவியே!
வெளியிடத்து உணவுக்கு அனுமதி
இல்லையென
பலகையில் எழுதிப் போடவா குருவியே!

கூடு கட்ட விடமாட்டேன்
சின்னக் குருவியே! என் வீட்டு
சன்னல்கள் திறந்திருக்கக் காரணம்
பருவக்காற்றுகள் உள்ளே வர.


**– ஞானக்கூத்தன்**



ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு குறியீடு கொடுத்து வரைவதை எழுத்து என்பர். ஒலிகளை எழுப்பிப் பேசாமலேயே ஒலியின் குறியீடுகளை எழுதிக்காட்டி கருத்துகளை உணர்த்த முடியும். கருத்துகளைப் பரிமாறும் நிலைக்கு மேலாகக் கருத்துகளைப் பதிவு செய்யும் நிலைக்கு வந்தபோது எழுத்துகள் தோன்றின எனலாம்.
வேறுபட்ட மொழிகளாக இருந்தாலும் ஒலிகள் பெரும்பாலும் ஒரே போலவே அமையும். ஆனால் ஒலிக் குறியீடுகளான எழுத்து பலமொழிகளிலும் பலவாறு அமைகின்றன.

**ஞானக்கூத்தன்**

தஞ்சையில் 07.10.1938 இல் பிறந்தார். மரபின் விருத்தப் பாடல் ஓசையோடு புதுக்கவிதைகள் படைத்தவர். நடை இதழால் இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர். கசடதபறவிலும் கவிதை படைத்தார். இவர் கவிதைகள் ஞானக்கூத்தன் கவிதைகள் என்ற பெயரில் வெளிவந்துள்ளன.



## செயல்பாடுகள்


- குருவிக்கு வேண்டுகோள் என்ற கவிதை சுட்டிக்காட்டும் நகரமய மாதலின் விளைவுகளைத் திரட்டி நகரமயமாதலின் நன்மை தீமைகள் குறித்து விவாதித்துக் குறிப்பு தயாரிக்க.
- படிமம், குறியீடு குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு தயார் செய்க.
- புதுக்கவிதையின் கூறுகளைப் (படிமம், குறியீடு) பகுப்பாய்வு செய்து 'புதுக் கவிதையின் தனித்தன்மைகள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தயார் செய்க.
- ஏதேனும் சமூகப் பிரச்சினை குறித்த புதுக்கவிதைகள் எழுதிக் கவியரங்கத்தில் வெளியிடுக.

# அறிமுகநோக்கில் ஹைகூ கவிதை

மனித குலம் மேன்மை அடைய அடைய இலக்கியத்திற்கும் வாழ்வுக்கும் இடையேயுள்ள இடைவெளி குறைந்து வருவதை உணரலாம். இயற்கையோடு இரண்டறக் கலந்த ஜப்பானிய வாழ்க்கை முறையின் இலக்கிய வெளிப்பாடே ஹைகூ கவிதைகள். கிழக்கத்திய பண்பாட்டின் சிறப்பைத் திசையெங்கும் பரப்பிவரும் இக்கவிதைகள் தனித்தன்மை வாய்ந்த வடிவ வளத்தோடும் கருத்துச்செறிவோடும் அமைந்துள்ள பாங்கு இங்கே ஓர் அறிமுகப் பார்வையுடன் அணுகப்படுகிறது.

**வடிவப் பின்னணி**

ஹைகூ கவிதை பதினைந்தாம் நூற்றாண்டளவில் தோற்றம் கொண்டாலும் அது பழைமை வாய்ந்த – பரப்பு நிறைந்த வரலாற்றுப் பின்னணியை உடையது. ஜப்பானிய கவிதை வரலாறே சிறிய வடிவத்தோடுதான் தொடங்குகிறது. ஹைகூவுக்கு முன்னோடியாக ஐந்துவகைக் கவிதை வடிவங்கள் அமைந்தன என ஆய்வாளர்கள் கருதுவர். அவை:




## ஜப்பானிய ஹைகூ

✶ ஒய்வாய்க் கால்நீட்டிச்
சாய்ந்திருக்கும் என்னைத் தொட்டு,
மேலேறும் முகிலினம்.

**– இஸ்ஸா**

✶ கசப்பான உலகம்,
எதற்காகும் எனக்கினி? உருண்டு
சிதைந்திட்ட பனித்துளி.

**– இஸ்ஸா**

✶ கண்முன்னே அலைகடல் –
விம்மும் கடல்பார்க்கும் போதெலாம்
அம்மா, என்அம்மா!

**– இஸ்ஸா**

✶ கல்லறைக்குப் பூசை,
எல்லோர்க்கும் முன்னே கிழட்டுநாய்
சொல்லிச்செலும் பாதை.

**– இஸ்ஸா**

சுருங்கிய அளவிலாவது இக்கவிதைகளின் வரலாற்றை அறிவது ஹைகூவை அறிந்துகொள்ள அவசியமாகும்.

**கட்டவ்டா**

இது ஜப்பானின் மிகப் பழமை வாய்ந்த கவிதை வடிவமாகும். உண்மையில் இவ்வகைக் கவிதைகள் பாடப்பெறுவதற்காக எழுதப்பெற்றவை அல்ல. மனிதனும் தேவதைகளும் வினா விடை அமைப்பில் பேசிக்கொள்வதாகவே இக்கவிதைகள் அமைந்திருக்கும். சில நேரங்களில் விடைகளைச் சிந்திக்க வைக்கும் வினாக்கள் மட்டுமே கூடக் கவிதைகளாக அமையும். கட்டவ்டா மூன்று அடிகளை உடையது. முதலிரண்டு அடிகளில் ஒன்று நீளமாகவும் மற்றொன்று குறுகியதாகவும் அமையும். மூன்றாவது அடி இரண்டாவது அடியின் அளவைப்போல அமைந்திருக்கும்.

**செடோகா**

ஏறத்தாழ கட்டவ்டாவும் செடோகாவும் நெருக்கமானவை. இரண்டு கட்டவ்டாக்கள் இணைந்தால் ஒரு செடோகா கவிதை வடிவம் உருவாகும். அதாவது இவ்வடிவம் 5-7-7 5-7-7 என்னும் அசையமைப்பைப் பெற்றிருக்கும். ஆனால் கட்டவ்டா போல இக்கவிதைகள் வினா விடை அமைப்பில் மட்டுமே இருக்கவேண்டும் என்பதில்லை.

**சோகா**

இது நீளமான கவிதை வடிவமாகும். 5-7 என்ற அசையமைப்புடன் கவிஞர் விரும்பும் அளவில் எத்தனை அடிகள் வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம்.

✱ பிளம்பூ எங்கெங்கும்
கிளம்பணும் வடக்குத் திக்கினிலே
கிளம்பலாமே தென்திசை!

**- பூசன்**

✱ ஹையா, ஒரே மகிழ்ச்சி
பைய வேனில் நதிகடப்பேன்
கையில் இருசெருப்பு.

**- பூசன்**

✱ கையில் சிறைபிடிப்பேன்
மெய்யோ பொய்யோ சிறுமேனி
ஹை, பட்டாம்பூச்சி!

**- பூசன்**

✱ குன்றின் வழிகாட்டி
கண்டு கொள்வதே யில்லை, எங்
கெங்கோ செரிமலர்கள்!

**- பூசன்**

**தமிழில் - அமரன்**

**அமரன்**

1947இல் மதுரையில் பிறந்த இவர் சிறந்த மரபுக்கவிஞர் மட்டுமன்றி ஹைகூ கவிஞரும் ஆவார். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஹைகூ கவிதைகள் எழுதும் கவிஞர் மட்டுமல்லாது இரு மொழிகளிலும் ஹைகூ கவிதைகளை மொழிபெயர்ப்பு செய்யும் சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார்.

**தான்கா**

இது ஐந்து அடிகளால் ஆன கவிதை வடிவமாகும். 5-7-5-7-7 என்ற அசையமைப்பைக் கொண்டிருக்கும். முதலிரண்டு அடிகள் ஒரு கருத்தையும் பின்னிரண்டு அடிகள் ஒரு கருத்தையும் இறுதியடி மேற்கூறியவற்றை வற்புறுத்திக் கூறும் வகையிலும் அமைந்திருக்கும்.

| | |
|---|---|
| **வினா** | சுகுபா என்னும் புதிய பூமியை<br>நாம் கடந்துவர<br>தூங்கிய இரவுகள்தான் எத்தனை? |
| **விடை** | விரல்விட்டு எண்ணுகிறேன்<br>இன்று இரவோடு ஒன்பது<br>பகற்பொழுதில் அது பத்தாகிவிடும்! |

**இரெங்கா**

இரெங்கா அல்லது இணைப்புக் கவிதை என வழங்கப்படும். இது இருவர் இணைந்து ஒரு பாடலை எழுதும் முறையாகும். பாடலின் முதல் பாதியை ஒருவரும் அடுத்த பாதியை மற்றவரும் எழுதி முடிப்பர். 5-7-5-7-7 என்ற அசைகளை இவ்வகைப் பாடல்கள் பெற்றிருக்கும். அடி வரையறை இல்லை.

இவ்வாறு ஹைகூ கவிதைக்கு முன்னர் ஜப்பானிய கவிதை வடிவம் வளர்ந்து வந்தது. ஹைகூ கவிதைக்கு முன்னர்த் தோன்றிய கவிதை வடிவங்களுக்கெல்லாம் கட்டவ்டா எவ்வாறு அடிப்படையாக அமைந்ததோ அவ்வாறு ஹைகூவுக்குப் பின்னர்த் தோன்றிய கவிதை வடிவங்களுக்கெல்லாம் ஹைகூ வடிவம் அடிப்படையாக அமைந்தது.

**- முனைவர் சா. உதயசூரியன்**

**முனைவர் சா. உதயசூரியன்**

இவர் 1957 இல் பிறந்தார். பெருஞ்சித்திரனார் தமிழ்த் தேசியம், அக்கரையில் பூத்த ஹைகூ ஆகியவை இவரது படைப்புகள். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

## செயல்பாடுகள்

- ஹைகூ கவிதைகளின் தனித்தன்மைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு தயார் செய்க.
- ஹைகூ கவிதைகளில் பிரதிபலிக்கும் சமுதாயப் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடி ஹைகூ கவிதைகளில் சமுதாயப் பிரச்சினைகள் என்ற தலைப்பில் குறிப்பு தயாரிக்க.
- மரபுக் கவிதையும் புதுக்கவிதையும் என்ற தலைப்பில் நடத்தப்படும் கருத்தரங்கில் வழங்குவதற்காகத் தமிழ்க் கவிதைகளில் வடிவ மாற்றம் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க.

# அலகு 2
# விரல் நுனியில் உலகம்

இணையம் மக்கள் தொடர்பில் கருத்துப் பரிமாற்றத்தைத் துல்லியமாக்குகின்றது; மக்கள் மத்தியில் வலுவான ஊடகமாகத் திகழ்கின்றது; விரல்நுனியில் உலகச் செய்திகளை அறிந்துகொள்ள உதவுகிறது. பல்லூடகங்களில் மின்னியல் ஊடகங்களும், திரைப்படமும் ஜனரஞ்சகமாக உள்ளன. மின்னியல் ஊடகங்கள் மனிதனை அதிகப் பாதிப்புக்குள்ளாக்கியது. இணையத்தின் மூலம், நொடிப்பொழுதில் தகவல்களைப் பரப்பவோ பெறவோ முடியும். இவ்வலகு தகவல்தொடர்பியலின் பல்வேறு கருத்துகளையும் திரைப்படம் பற்றிய செய்திகளையும் மாணவர்களுக்கு எடுத்துரைப்பதுடன் அவற்றின் நன்மை தீமைகளையும் விளக்குகின்றது.

**கற்றல் அடைவுகள்**

- ❖ ஊடகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தவும் அதற்கேற்பச் செயல்படவும் அறிதல்.
- ❖ நாடகம், திரைப்படம் ஆகியவற்றை விமர்சனக் கண்ணோட்டத்தில் அணுகுதல்.
- ❖ தொழிலின் மேன்மை, வாழ்வியல் மதிப்புகள், கலை, பண்பாடு ஆகியவற்றை இலக்கியங்கள் வாயிலாகப் புரிந்து, அவற்றைப் பல்வேறு படைப்புகளாக வெளியிடுதல்.

# இணையமும் இலக்கியமும்



வெகுஜனப் படைப்பிலிருந்து வெகுதூரம் தள்ளியிருப்பதே இலக்கியப் படைப்பு. இரண்டும் ஒரே மொழியில்தான் எழுதப்பட்டிருக்கின்றன என்றபோதிலும் படைப்பைப் போலவே வாசிப் பும் இரண்டு வகைப்பட்டதாகவே இருக்கிறது.

இலக்கியத்தின் மொழி கடினமாகவோ எளிமை யாகவோ வார்த்தைகளில் நுட்பங்களை வெளிப் படுத்துவதாகவோ விளங்குகிறது. ஆனால் வெகு ஜனப் பத்திரிகைகளின் மொழி ஜனநாயகப் பொதுமை கொண்டது. அதன் எழுத்தாளர்களிடம் வெளிப் பாட்டில் தனித்துவம் இருந்தாலும் மெனக்கெடலே தேவைப் படாத மேலோட்ட வாசிப்பை மட்டுமே பொதுமையாகக் கொண்டது. காரணம் பெரும்பான்மையினரின் தேர்வு அது தான் என்னும் நம்பிக்கை. பெரும்பாலும் அது உண்மை.

நுட்பமே விற்கும் சரக்காக ஆகிப்போகும் எதிர்காலக் கற்பனை உலகில், வெகுஜன வணிகப் பத்திரிகைகளின் பொருளடக்கமும் நுட்பமாகவே அமையும். அதன் நோக்கம் வியாபாரம் மட்டுமே. வியாபாரம் அதனளவில் கீழ்மையானதும் அல்ல. தேவை என்று இருந்தால் அதை நிறைவேற்றும் அவசியமும் அனிச்சையாய்த் தோன்றி விடுவதே இயற்கை.

கலை இலக்கியத்திற்கான தேவையை இலக்கியப் பத்திரி கைகள் நிறைவுசெய்ய முயன்று குறுங்குழுக்களில் இருந்து நாளடைவில் மீண்டும் ஓரளவு விரிவாக்கம் நடந்திருப்பதற் குப் புத்தகக் கண்காட்சி சிறந்த சாட்சியம். அன்றைய, இன் றைய மக்கள்தொகை மற்றும் கல்வி விரிவாக்கத்துடன் புத் தக விற்பனையை ஒப்பிட்டு நம் ரத்தக் கொதிப்பை ஏற்றிக் கொண்டு மகிழ்ச்சியைக் கெடுத்துக்கொள்ளாதிருப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது. எனவே அதைத் தவிர்ப்பதே புத்திசாலித்தனம்.

இந்தப் பரவலாக்கத்தில், கல்வி மட்டுமன்றித் தொழில்நுட்பத்தின் – குறிப்பாக இணையத்தின் – தாக்கமும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

எப்படிச் சிறுபத்திரிகைகள் வணிகத்திற்கு எதிராய் சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் சுவாசிக்கத் தலைப்பட்டனவோ அதேபோல இன்று இணையத்தைச் சொல்லலாம். இணையத்தின் அவலங்களைப் பட்டியலிட்டு மாளாத அளவிற்கு அநேகம் என்ற போதிலும், சுதந்திர எழுத்துக்கு அது தரும் களத்தை எந்தப் பத்திரிகையும் எந்தக் காலத்திலும் கொடுத்துவிட முடியாது. பக்க நெருக்கடியோ ஆசாமிகளின் பக்கவாட்டு நெருக்கடியோ கால நெருக்கடியோ இல்லாமல் எழுத ஒரே இடம் இணையம் மட்டுமே.

இணையத்தின் முக்கியப் பிரச்சினையும் சுதந்திர வெளிப்பாடுதான். தனக்குப் பட்ட கருத்தை அப்பட்டமாக வெளியிட்டால் அடுத்த கணமே விவாதமென்னும் போர்வையில் பக்கச் சார்புகொண்ட ரசிக ரௌடிகளின் அர்த்தமற்ற கொலை வெறிக் கூப்பாடு அலைக்கழிக்கத் தொடங்கிவிடும். அதற்கு முகம் கொடுப்பது நேரவிரயம். ஆனால் பெரும்பாலும் உண்மையான கருத்தை வெளிப்படுத்தாத சமாதானச் சகோதரத்துவச் சுகவாழ்வில் முக்தியடைவதை லட்சியமாய்க் கொண்டோரே பெரும்பான்மை என்பதால் தமிழ் எழுத்தாளர்களுக்கு இது பிரச்சினையே அல்ல.

வலைப்பூவைப் பிரத்தியேக நாட்குறிப்பாய் வைத்துக் கொள்வதில் இருந்து தனது நம்பிக்கையின் பிரச்சாரத்திற்கு உபயோகித்துக் கொள்வதுவரை எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளும் சுதந்திரத்தை எழுத்தாளனுக்கு அளிப்பதாய் இணையமே இருக்கிறது. தெரு நாடகத்தின் உடனடி எதிர்வினை போல எல்லைகளற்ற இணையத்தின் எதிரொலிப்பு பிரமிக்கவைப்பது.

கைத்தட்டலுக்கு மயங்காத கர்மயோகியால் மட்டுமே கலையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு இணையத்தில் தப்பித்து நிற்கவும் முடியும். கொஞ்சம் அசந்தாலும் ஆரவார வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு நீர்த்துப்போ

### இணையம்

இணையம் ஒரு விசித்திரம். ஒரு பக்கம் எண்ணற்ற வசதிகள் மூலம் இனிய முகங்களைக் காட்டி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. இன்னொரு பக்கம் ஹேக்கிங், ஸ்பாம், ஆபாசம் போன்ற வக்கிர முகங்களைக் காட்டி நம்மைத் துன்பத்தில் ஆழ்த்துகின்றன. சைபர் க்ரைம் எனப்படும் இணைய குற்றங்களைப் பற்றியும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் சிறிதளவு இங்குப் பார்ப்போம்.

- கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு மூலம் இணையத்தில் பணப் பரிமாற்றங்கள் நடக்கும் பொழுது கடவுச் சொல் உள்பட கணக்கு விவரங்களைத் திருடுகின்றனர்.
- பாலியல் ரீதியான தொல்லைகள். இணைய நட்புகள் வழி ஏற்படுகின்றன. பெண்களை ஆபாசமாகப் படம்பிடித்து அதனை இணையத்தில் வெளியிட்டு. பெண்களை மிரட்டி வருகிறார்கள்.
- தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்களை விற்பனை செய்வதற்கும் இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள்.
- இவற்றைவிடக் கொடியது, குழந்தைகள் மீதான பாலியல் தாக்குதல்கள். சிறுவர், சிறுமிகள் உரையாடும் அரட்டை அறைகளுக்குச் (Chatting) சென்று தங்களைக் குழந்தைகளாகவே அறிமுகம் செய்கின்றனர். பிறகு அவர்களின் புகைப்படங்கள், வீட்டு முகவரி, பள்ளி முகவரி என தகவல்களைப் பகிர்கின்றனர்.

கவைக்கும் அபாயச் சுழிப்புகளே அதிகம்.

இணையத்தில் முக்காலுக்கும் மேற்பட்டோர் வயது மற்றும் அனுபவம் காரணமாய், முதிராநிலை வாசகர்களே. அனுபவ மூளையைவிடவும் வாழ்வின் தட்ப வெப்பங்களைக் கண்ட அனுபவ மனம் கிடைப்பதும் வாசித்து அனுபவிக்கும் மனம் கிடைப்பதும் அல்லவா அபூர்வம். தீவிர நுட்ப வாசிப்புக்குப் பழக்கப்படாதவர்களும் அப்படியே கிடைத்தாலும் அதை வாசித்துப் பயிலவியலாத வேலைச் சூழலின் அழுத்தம் காரணமாய், அதிலிருந்து தப்பிக்க இணையத்தைக் கேளிக்கை வடிகாலாய்ப் பார்ப்பவர்களுமே ஏராளம்.

இன்னும் கொஞ்சம் முன்னேறி, வாசிப்பைப் பழக்கமாக்கிக் கொண்டவர்களில் பெரும்பாலோருக்கு, இலக்கியம் பற்றிய பிரமை பீடித்த துலாக்கோல் கொண்டு பார்க்கையில், எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் எல்லாம் ஒன்றாகவும் நன்றாகவும் இருப்பதான கானல் தோற்றமே தெரிகிறது. தரம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருப்பது கண்ணுக்குத் தப்பிவிடுகிறது. ஆகவே விமர்சன எழுத்து விதண்டாவாதத்தையே எதிரொலியாய் எழுப்புகிறது. இந்தத் தீவிர மிதவாதிகளுக்கு அரிச்சுவடியிலிருந்து ஆரம்பித்து விளக்குவதற்குள் ஆயுளே முடிந்துவிடும். ஆனால் கண்ணிமைக்காது வெல்ல முடியாக் கர்வத்துடன் காலத்துக்கும் தம் பிரிய எழுத்தாளர்களுக்குச் சிறப்புக் கமாண்டோக்களாய் இணையத்தில் இவர்கள் காவலுக்கு நின்றுகொண்டே இருப்பார்கள்.

ரசிகர் மன்றத் தற்கொலைப்படையைக் காட்டிலும் பலமானது திராவிடக் காவற்படை. இடம் வலம் தீவிர இடது எனக் கட்சி சார் கமாண்டோக்களின் திண்டோள் திறம் சொல்லி மாளாது. ஒரே ஆள் ஒன்பது ஐடியை வைத்துக் கொண்டு முற்போக்குக் கதிர்வீச்சைத் தேச எல்லைகளையெல்லாம் தாண்டிக் கண்டம் விட்டுக் கண்டம் பரப்பிக்கொண்டிருப்பார். இதே போல் ஒன்பது நபர்கள் குழுவாய் ஒன்றிணைந்தால் அதுவே இணையத்தின் அதிதீவிர இயக்கமாகிவிடும்.

என்றாலும் சவரக்கடைக் காத்திருப்பின் பத்திரிகைப் புரட்டலாய்த் தினந்தோறும் தளத்திற்கு வந்துபோவோரின்

### பாதுகாப்பு வழிகள்

- எந்த நிலையிலும் முகம் தெரியாத நபர்களிடம் உங்கள் தொலைபேசி எண், வீட்டு முகவரி, பள்ளி முகவரி போன்றவற்றைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.
- ஃபேஸ்புக் போன்ற சமூகத் தளங்களில் அறிமுகம் இல்லாதவர்களை நண்பர்களாகச் சேர்க்க வேண்டாம்.
- அறிமுகம் இல்லாத நபர்கள் உங்களை நேரில் சந்திக்க அழைத்தால் மறுத்துவிடுங்கள்.
- நீங்கள் மற்றவர்களுடன் அரட்டை அடிப்பதை அவர்கள் பதிவு செய்யக்கூடும் என்பதை மறவாதீர்கள்.
- அறிமுகம் இல்லாதவர்களுடன் முகம் பார்த்து அரட்டை அடிக்கும் பழக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- குழந்தைகள், பெண்கள் புகைப்படங்களை இணையத்தில் பகிர்வதைத் தவிர்க்கவும். தற்போது உள்ள தொழில்நுட்பங்கள் மூலம் அந்தப் புகைப்படங்களை ஆபாசமாக மாற்றலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
- உங்கள் கடவுச் சொல்லைப் (password-I) பெற்றோர்களைத் தவிர வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்.
- பணப் பரிமாற்றங்கள் செய்யும் பொழுது அந்தப் பக்கத்தின் முகவரியைப் பாருங்கள். http:// என இருந்தால் உங்கள் கார்ட் விவரங்களைக் கொடுக்காதீர்கள். http:// என்று இருந்தால் மட்டுமே பணப் பரிமாற்றம் செய்யுங்கள். http:// என்பது பாதுகாப்பான வழியாகும்.

எண்ணிக்கையை எல்லாம் தீவிரமாக எடுத்துக்கொண்டு புள கிப்பது கடைசியில் கழிவிரக்கத்திலேயே கொண்டுவிடும். இன்னமும் ஆழ்ந்த வாசிப்பிற்கானது அச்சுவடிவமே.

டுவிட்டரில் அக்கப்போரே அதிகம் எனினும், 140 தட்டல்க ளுக்குள் உயர் நகைச்சுவையையும் கவித்துவ வெளிப்பாடு களையும் காணலாம். 140 கேரெக்டர்களுக்குள் எழுத்தின் கேரெக்டரை வெளிப்படுத்துவது என்பது ஆகப்பெரிய சவால். பல்லுடைப்புக் கட்டுரை ட்விட்டரில் எழுதப் பணிக்கப்பட் டால் மொழி வெளிப்பாட்டில் கூர்மை வர வாய்ப்புண்டு. டுவிட்டரின் பயன்பாடு தனிநபரின் வெளிப்பாட்டைத் தாண் டிப் பொது அக்கறைகள் சார்ந்து இயங்கவும் இடம் கொடுக் கவல்லது. குறிப்பிட்ட நிகழ்வு அல்லது பொருள் குறித்த முனைப்பைத் தீவிரப்படுத்திப் போராட்ட வடிவமாக்கி உல கின் கவனத்தை ஈர்க்கவும் வழியுள்ளது. 140 தட்டல்களுக் குள் ஏதேனும் ஓர் இடத்தில் – பெரும்பாலும் இறுதியில் – ஒரே வார்த்தையைக் குறிப்பிடும் டுவிட்டுகள் ட்ரெண்டிங் என்னும் அளவீட்டின்படி எண்ணிக்கையில் உச்சத்தை எட்டு வதைச் சுட்டிக் காட்டலாம். டுவிட்டர் உலகம் எதைப் பற்றி அதிகம் பேசுகிறது என்பதன் மூலம் ஊடகங்களின் கவனத் தைக் கவர வாய்ப்புள்ளது. இந்த வகையில் சமீபத்திய எடுத் துக்காட்டாகத் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உலக அள வில் எதிரொலித்த டுவிட்டர் குரலைக் கூறலாம்.

இதைவிடவும் அதிகமாய் எழுத முகநூலின் கவரும் அதை விடவும் நீளமாய் எழுத அதன் குறிப்பேடும் இடம்கொடுக் கின்றன. எனினும் இரண்டு ஊடகங்களில் பிந்தையதன் வீச்சே அதிகம். ஆனால் டுவிட்டரை ஒப்பிட்டால் முகநூலின் தீவிர வெளிப்பாடு குறைவு என்றே தோன்றுகிறது. இணை யத்தின் வாசகர்கள் பெரும்பாலும் ஒற்றை வரி இரட்டை வரி யோடு நிறுத்திக்கொள்பவர்கள் என்னும் குற்றச்சாட்டுக்குப் பொருத்த உதாரணமாய் முகநூலையே கூற வேண்டும். நிலைச் செய்தி என்னும் குறுஞ்செய்திகளைப் படிப்போரே அதிகம். ஆனால் குறைந்த அளவில்தான் என்றாலும் தீவிர விவாதங்கள் முகநூலில் நடப்பதையும் சுட்டாமல் போவது

### சைபர் க்ரைமில் ஏற்றுக் கொள்ளப்படும் புகார்கள்

- இண்டர்நெட் கடவுச்சொல் திருட்டு.
- அச்சுறுத்தும் மின்னஞ்சல்கள்.
- இணையப் பின்தொடர்தல் (Cyber Stalking) (பாலியல் ரீதியிலான தொல்லைகள், வேறொருவர் உங் களைப் போல இணையத்தில் உல வுவது, மிரட்டல்கள் ஆகியவைக ளும் அடங்கும்).
- குழந்தைகள் வன்கொடுமை/ ஆபாசத் தளங்கள்.
- கடன் அட்டை எண் திருட்டு.
- வலைத்தளத்தில் அனுமதியின்றி உட்புகுதல்.

நியாயமல்ல. எல்லாவற்றிலும் கடைசியில் எஞ்சுவது தனிந பரே என்பது போல் விவாதிக்கும் பொருளும் நபர்களை யும் சார்ந்தே விவாதத்தின் தீவிரமும் விளங்குகிறது.

கிட்டத்தட்ட இறுதி மூச்சை இழுத்தபடி இருக்கும் கூகுள் பிளஸ் என்பது கூடி விவாதிக்க ஆகச் சிறந்த இடம் என்றா லும் இரண்டாம் மூன்றாம் உரைக் கீற்றிலேயே விவாதத்தின் தீவிரத்தை இழக்கவைக்க உற்சாகத்துடன் கிண்டலும் கேலி யுமாய் ஓடிவருவோரே ஏராளம். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. வேலை அழுத்தத்தில் இருந்து தப்பிக்க இடை யிடையில் இளைப்பாற எட்டிப் பார்ப்போரே அநேகர். அவர்களிடம் தீவிரத்தை எதிர்பார்ப்பது அறிவார்ந்த மடத் தனம்.

இவையனைத்தையும் கபளீகரம்செய்து ஓரிடத்தில் கொண்டு வர கூகுள் பிளஸ் முயல்கிறது. வியாபாரப் போட்டியின் கார ணமாய் எழுத்தோடு சேர்ந்து டுவிட்டர் புகைப்படம் போட வழிசெய்கிறது. பிளாகை தூக்கிச் சாப்பிடக் கட்டற்ற இடம் கொடுத்து எவ்வளவும் எழுதிக்கொள் என்கிறது முகநூல்.

ஆனால் இவையனைத்தும் வலைத்தளத்தில் எழுதி வெளி யிடப்பட்டிருப்பதைச் சுட்டியின் மூலம் அறிவிக்க இவை பேருதவியாய் இருக்கின்றன.

ஒழுங்கமைதியை மேற்பார்வையிட ஆசிரியர்குழு இருப் பதன் காரணத்தால் அச்சுப் பத்திரிகைகளில் பக்கச் சார்பு கள் இருப்பினும் அடிப்படைத் தரம் பேண இருக்கும் வாய்ப்பு இணையத்தில் இல்லாத பெரும் குறை.

அச்சுப் பிரதி, எழுதப்பட்டிருப்பதைப் பற்றி ஆரம்ப வாசக னிடம் ஏற்படுத்தும் ஆழ்மன அங்கீகாரம் அளப்பரியது. இணைய எழுத்து அறிமுகமில்லாத தொடக்கத்தில் இளக் காரத்தையே எதிர்கொண்டாட வேண்டியிருக்கிறது. எது வுமே தொடர்ந்த இயக்கத்திலும் இருத்தலிலும் மட்டுமே வலுப்பெறும் என்பது விதியாக இருக்கையில் இணையம் மட் டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா?

## வலைப்பூக்கள்

இந்த நூற்றாண்டை இணைய நூற் றாண்டாகக் கொண்டாடலாம். இணைய அகராதி, இணையக் குழு மம், இணைய வணிகம் என்று எல்லா மே இணையவழி இணைவுகளாகப் பரிணமித்து வருகின்றன. இவ்வரிசை யில் வைத்து எண்ணத்தக்க அளவிற்கு வலைப்பூக்கள் இணையத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

### வலைப்பூவும் இணையதளமும்

ஆங்கிலத்தில் Blogger என்பதைத் தமிழில் வலைப்பூ என்று குறிப்பிடு கின்றனர். இது இணையதளம் போன்றே செயல்படக் கூடியது. எனி னும் இணையதளத்தைக் காட்டிலும் சிறப்புடையதாகவே இதனைக் கருத வேண்டும்.

இணையதளத்தை வெற்றிகரமாக இயக்குதல் எளிதன்று. ஆனால் இவர்களால் வலைப்பூக்களை எளி தாக உருவாக்கி நிர்வகிக்க முடியும். இணையதளத்தில் பதிவேற்றம் செய் யக்கூடிய அனைத்தையும் வலைப்பூ விலும் பதிவேற்றம் செய்யமுடியும்.

இணையதளத்தை உருவாக்கவும் நிர் வகிக்கவும் அதிகப் பொருட்செலவு ஏற்படும். ஆனால் வலைப்பூவை உருவாக்கவோ, நிர்வகிக்கவோ பொருட்செலவு ஏதுமில்லை.

பொருட்செலவு இல்லாமலேயே ஒரு வர் தம் சிந்தனைகளை இணையத் தில் வலைப்பூ வடிவில் உலவவிட முடியும். அச்சிந்தனைகள் குறித்த பின்னூட்டங்களைப் (feed back) பெற இயலும்.

விரலெண்ணிக்கையிலான எழுத்தாளர்களைத் தவிர, பெயராக நிலைத்துவிட்ட பெரும்பான்மைப் படைப்பாளிகள் தளங்கள் வெளிப்பாடுகளாக இல்லாமல் வெறும் பிரதிபலிப்புகளாய் எஞ்சி நிற்பது ஏமாற்றமே.

இணையத்தின் இலவச வாசிப்பு புத்தக விற்பனையைப் பாதிக்கும் என்பது ஓரளவிற்கு உண்மைதான். அதற்காக வெள்ளெழுத்துக் கண்ணாடிகளின் விற்பனை அமோகமாகட்டும் என்று மந்திரித்துத் தாயத்து கட்டிக்கொள்ள முடியுமா என்ன? வருங் காலத்தில் கருவிலிருக்கும் உருவம் சுருண்டு தட்டச்சுப்படியே வெளியில் வந்தாலும் வியப்பல்ல.

இன்னும் இன்னும் என்று இணைய வாசிப்பு எதிர்காலத்தில் பல்கிப்பெருகுவதற்கான வாய்ப்பு அது இலவசமாய்க் கிடைக்கிறது என்பதால் மட்டுமே அன்று. அந்நியப் பணத்தைச் சதா உரு மாற்றிக் கணக்கிட்டுக் கொண்டிருக்கும் சொந்த வீட்டார் போலவே பதிப்பகங்களும் ஏதோ வெள்ளைக்காரனுக்கு விற்பது போன்ற பாவனையில் பன்மடங்கு விலையேற்றி விற்பதும் ஒரு காரணம். அப்பித்தப்பி வாங்கிய அச்சுப் பிரதிகளை விமானத்தில் எடுத்துச்செல்வதற்கும் திரும்பக் கொண்டுவருவதற்கும் சுக்கு காப்பணம் சுமை கூலி முக்காப்பணம் என்று தண்டம் அழ வேண்டியிருப்பதைக் கணினிக்குள் எப்போதும் விழித்த படி பார்த்திருக்கும் இணையத்தின் இளிப்பு இன்னொரு காரணம்.

அந்நிய மண்ணில் ஆயிரம் வசதிகள் கிடைத்தாலும் வயிற்றைக் கடந்த மனம் தன் அடையாளத்தைத் தன் மண்ணிலேயே தக்க வைத்துக் கொள்ளப் பார்ப்பது இணைய வாசிப்பிற்கான அதி முக்கியக் காரணமாகும்.

அச்சுப் பத்திரிகையில் வெளியாகிப் புத்தகமானால் தான் அங்கீகாரம் என்னும் தற்கால யதார்த்தத்தை முற்காலத் தலைமுறையின் மூட நம்பிக்கையாய் ஆக்கப் போகும் எதிர்காலம் தொலைதூரத்தில் இல்லை.

**– விமலாதித்த மாமல்லன்**

## உருவாக்கம்

வலைப்பூக்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதற்கான கருவிகளையும் இடவசதியினையும் யாகூ, எம்.எஸ்.என்., ரீடிஃப்மெயில் போன்ற பல நிறுவனங்கள் வழங்குகின்றன. எனினும் கூகுள் நிறுவனத்தின் பிளாக்கர் (Blogger) என்பதே பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது.

புதியதாக வலைப்பூவை உருவாக்க விரும்புகின்றவர்கள் மூன்று படிநிலைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். அவை:

1) Create an account
2) Name your blog
3) Choose a template

இப்படிநிலைகளைப் பயன்படுத்தி வலைப்பூக்கள் வேண்டியவாறு வடிவமைத்துக் கொள்ளலாம்.

## குறிப்பிடத்தக்க வலைப்பூக்கள்

தமிழில் ஆயிரக்கணக்கான வலைப்பூக்கள் இருந்தாலும் அவற்றில் குறிப்பிடத்தக்க சில:

தமிழ்ப் பூக்கள்
tamilpukkal.blogspot.com

மானிடன்
manidal.blogspot.com

திருமன்றில்
thirumandril.blogspot.com

மலையருவி
nailango.blogspot.com.
malaiaruvikavithai.blogspot.com

## விமலாதித்த மாமல்லன்



1960 இல் சென்னையில் பிறந்தார். மத்திய அரசின் கலால்துறையில் பணி புரிந்தவர். விமலாதித்த மாமல்லன் கவிதைகள், அறியாத முகங்கள், உயிர்த் தெழுதல், முடவன் வளர்த்த வெள்ளைப் புறாக்கள் ஆகியவை இவரது சிறுகதைத் தொகுதிகளாகும். இணையமும் இலக்கியமும் என்ற இவரது கட்டுரை காலச்சுவடு இதழில் வெளியான கட்டுரையாகும்.

## செயல்பாடுகள்

- இணையதளத்தினால் விளைவது நன்மையா? தீமையா? என்பது குறித்துப் பட்டிமன்றம் நடத்துக.
- கீழ்வரும் பத்திரிகைச்செய்தி பற்றிய உங்கள் கருத்துகளை டுவிட்டரில் வெளியிடும் படியாக எழுதவும்.

### பாகிஸ்தான், சீனாவைவிட

புதுடெல்லி, செ, 24: இன்டர்நெட் பயன்படுத்துவதில் சீனா, பாகிஸ்தானைவிட இந்தியாவில் இணைய தள சுதந்திரம் அதிகம் என்று உலக வலை இணைய நிறுவனம் கூறியுள்ளது.

உலக வலை இணைய நிறுவனம் 2009 ஆம் ஆண்டு சர் டிம் பெர்னர்ஸ் லீயால் துவக்கப்பட்டது. இந்த நிறுவனம் உலகம் முழுவதும் இணையதள உபயோகம் பற்றி ஆய்வு செய்து ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. வெப் இண்டக்ஸ் எனப்படும் ஆய்வில் உலக நாடுகளில் இணையத்தை பயன்படுத்துவது, இணைய சுதந்திரம், வெளிப்படைத் தன்மை, இணையம் பயன்படுத்த கட்டுப்பாடுகள், தேடலுக்கு பொருத்தமான புள்ளிவிபரங்கள், அரசு அனுமதி போன்ற பிரிவுகளின் கீழ் ஆய்வு செய்யப்பட்டது.

இதில் 81 நாடுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில் 100 புள்ளிகளுடன் சுவீடன்நாடு முதல்இடத்தைப் பிடித்தது. நார்வே 2 ஆம் இடத்தையும்பிரிட்டன்3ஆம் இடத்தையும் பிடித்துள்ளன. அமெரிக்கா 4 ஆம் இடத்தில் உள்ளது. இந்தியா 56வது இடத்தில் உள்ளது. சீனாவுக்கு 57வது இடமும் பாகிஸ்தானுக்கு 77ஆம் இடமும் கிடைத்துள்ளது. இந்தியாவில் இணையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 20 கோடி சீனா மற்றும் அமெரிக்காவில் இணையம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை முறையே 30 கோடி மற்றும் 20.7 கோடி இந்தியாவில் இணையம் பயன்படுத்துவோர் 32.4 சதவீதமாகவும், சீனாவில் 31.1, பாகிஸ்தானில் 10.4 சதவீதமாக உள்ளது.



இந்தியாவில் இணையதள பயன்பாட்டில் சுதந்திரம் மற்றும் வெளிப்படைத் தன்மை 49.5 சதவீதம், அனுமதி 31.2 சதவீதம். புள்ளி விபரங்கள் கிடைப்பது 22.6 சதவீதம் ஆக உள்ளது. சீனாவில் இணையதள பயன்பாட்டில் சுதந்திரம் மற்றும் வெளிப் படைத் தன்மை 5.3 சதவீதம், அனுமதி 31.2, புள்ளி விப ரங்கள் கிடைப்பது 46.8 சதவீதமாக உள்ளது. பாகிஸ்தானில் நுழைவு 21.3, புள்ளி விபரங்கள் கிடைப்பது 12.4, இணைய சுதந்திரம் 9.8 சதவீதமாக உள்ளது என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.




- இணையதளம், வலைப்பூக்கள் இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை விவாதித்துக் குறிப்பு தயாரிக்க.
- **இணையதளமும் இளந்தலைமுறையினரும்** என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க. கட்டுரையை வலைப்பூவில் வெளியிடுக.

# பச்சை வயல்

**(திரைக்கதை – வசனம்)**

## காட்சி – 1

**(காலை நேரம் : தர்முவின் வீடு வெளிப்புறம்)**

(கதாபாத்திரங்கள் : தர்மு, சீதா மாமி, ராஜாராம்)

*(தர்முவின் வீடு, தர்மு கிணற்றடியில் துணிகளைத் துவைத்து உலர்த்திக் கொண்டு இருக்கிறாள். சீதாமாமி சிந்தனையுடன் வெளிப்படலைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து தூரமாக நின்று தர்முவைப் பார்க்கிறாள். தர்மு, வேறுபுறம் திரும்பிப் புடைவையைக் கொடியில் பிரித்து விட்டபடி...)*

தர்மு : *வாங்கோ, ஏன் அங்கேயே நிக்கறேள்?*

சீதா மாமி தயங்கியபடி அங்கே அருகில் வந்து துணி துவைக்கும் கல்லில் உட்காருகிறாள். தர்மு தொடர்ந்து துணிகளை உதறி உலர்த்தியபடி சீதா மாமியுடன் பேசுகிறாள்.

சீதா : கிருஷ்ணா ரொம்ப மனவருத்தத்தோட திரும்பிப் போயிட்டாண்டி.

தர்மு : *நான் கூட ரொம்ப அதிகமான மனவருத்தத்தோட தான் மாமி திரும்பி வந்துட்டேன்.*

சீதா : அவன் கேட்டதிலே என்னடியம்மா தவறு? கட்டிலோட கட்டிலா கிடக்கிற ஒரு பெண்ணையும் கூடவே கூட்டிண்டுதான் வருவேன்னு சொன்னா இந்தக் காலத்திலே கல்யாணம் பண்ணிக்கிற பையன்கள் சம்மதிப்பானாடியம்மா?

தர்மு : *அன்னத்தை என்ன பண்ணலாம்? இதோ இந்தக் கிணத்திலே பிடிச்சுத் தள்ளி விட்டு அவருக்கு கழுத்தை காட்டட்டுமா? அப்ப அவர் என்னை சந்தோஷமா ஏத்துப்பாரா?*

சீதா : அன்னத்தை என்னதான் பண்ணச் சொல்றேள்? அவளோட இந்த நிலை உங்களுக்கும் தெரியும்தானே? அவள் தொட்டிலில் படுத்துக்கலையே தவிர அவ ஒரு குழந்தை. பாட்டில் பால் குடிக்கறதோ இல்லையோ ராத்திரிபூரா தாய்மடியிலே தலையை வச்சுண்டு தூங்குமே குழந்தை, அதுமாதிரி, என்னோட ஸ்பரிசம் அவ மேலே பட்டுண்டே இருக்கணும்னு அவ எதிர்பார்த்து ஏங்கிண்டு

கிடக்கிற ஒரு நோயாளி. அவளை விட்டுட்டு வாடி உன்னை கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்ன அதை எப்படி ஏத்துக்க முடியும்? மனதிலே ஒரு மனிதாபிமான உணர்வு வேண்டாமா?

*(இந்த உரையாடலை ஜன்னல் அருகில் படுத்திருக்கும் அன்னம் கேட்டபடி அழுகிறாள்.)*

சீதா : அவன் தன்னோட முடிவைச் சொல்லிவிட்டுப் போயிட்டான். அன்னத்தை எங்காவது நிரந்தரமா அநாதை ஆசிரமத்திலே சேர்த்துட்டு . . .

தர்மு : *வேண்டாம். இந்த மாதிரி மோசமான யோசனைகளையெல்லாம் பேசிண்டு தயவு செய்து இங்கே வர வேண்டாம்.*

சீதா : உன் பிடிவாதத்தை விடமாட்டியே. வேற என்னதாண்டி பண்றதா உத்தேசம்?

தர்மு : *கஷ்டங்களோட எதிர்த்துப் போராடப் போறேன். உடம்பிலே வலு இருக்கற வரையிலே போராடுவேன்.*

சீதா : நீ எக்கேடு கெட்டோ போ. இனிமே இந்த விஷயத்திலே நான் எதுக்குத் தலையிடப் போறேன்? உன் தலையெழுத்து எதுவோ அதன்படிதான் நடக்கும். ரொம்ப கஷ்டப்படறியே உபகாரம் பண்ணலாம்னு பார்த்தேன்.

தர்மு : *தேன் கூடு ஓரமா போகவேண்டாம். அன்னிக்கு ஓரமா போய் தேனீ துரத்தி ஓடினேளே? கீழே விழுந்து காயம்பட்டுக் கொண்டு உடம்பு பூரா தர்மு வளர்க்கும் தேனீ கொட்டிடுத்துன்னு சொன்னேள்.*

சீதா : என்னை என்ன வீடு வீடா போய் வம்பு பேசறவள்னு சொல்லாம சொல்றியா?



தர்மு : *ஐயோ, உங்கள வம்பு பேசறேன்னு சொல்லிவிட்டு நான் இந்த ஊர்ல இருக்க முடியுமா?*

சீதா : நீ பேசுவேடியம்மா...

*(சீதாமாமி வெளியேறுகிறாள். தர்மு மீதி துணிகளை வாளியில் போட்டு அல சிக் கொண்டே தனக்குள் பேசிக் கொள்கிறாள்.)*

தர்மு : *கை, கால் விளங்காம வயது வந்த பொண்ணு ஒருத்தி கட்டிலோட கிடக்கா. அவள் அப்படியே போட்டுட்டு இவனுக்குக் கழுத்த நீட்டினா நல்ல பொண்ணு, இல்லைன்னா பொல்லாதவ. அவளுக்கு என்ன வழி பண்ணுதுங்கறத்துக்கு மனிதாபிமானத்தோட ஒரு யோசனை சொல்ல முடியல. பையனை அழைச் சுண்டு வராளாம் பையனை . . .*

*(தர்மு தானே பேசிக்கொண்டு இருப்பதைக் கேட்டுக்கொண்டே ராஜாராம் அங்கே வந்து நிற்கிறான். ஒரு துணியை உதறி கொடியில் உலர்த்தும் போது அவனைப் பார்த்துவிட்டு பரபரப்படைகிறாள். நெகிழ்ந்த ஆடையைச் சரி செய்து கொண்டு அவனை வரவேற்கிறாள்.*

*ராஜாராம் உள்ளே நுழைவதை சீதா மாமி ஒரு மாதிரியாகப் பார்த்தபடியே வெளியேறுகிறாள்.)*

தர்மு : *வாங்க . . . வாங்க . . .*

ராஜா : என்ன தர்மு! நீ பாட்ல உனக்கு நீயே பேசிக்கொண்டு நிக்கறே?

தர்மு : *அது ஒண்ணுமில்லை. உள்ளே வாங்க.*

*(ராஜாராம் பின் தொடர்ந்து உள்ளே வருகிறான். அங்கே கிடந்த ஸ்டூல் ஒன்றை நகர்த்திப் போடுகிறாள் தர்மு. அக்காவின் பரபரப்பையும் உற்சாகத்தையும் கட்டிலில் உட்கார்ந்தபடியே அன்னம் கவனிக்கிறாள்.)*

ராஜா : நேற்று செக்ஷன்ல பார்த்தேன். லீவுன்னு சொன்னாங்க. இன்னிக்கு செக்ஷன் பக்கமே வரமுடியலை. அதான் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். என்ன விசேஷம்?

தர்மு : *உங்களுக்குத் தெரியாதா என்ன விசேஷம் . . .*

*பேசிக்கொண்டே உள்ளே வந்த ராஜாராம், அன்னத்தின் அருகில் வந்து நின்று கலைந்து போயிருந்த அவள் கேசத்தை சரி செய்து விட்டு .*

ராஜா : என்னம்மா எப்படி இருக்கே?

ராஜாராம் இப்படிக் கேட்டவுடன் அன்னம் அழுகிறாள். அவளை அவன் சமா தானம் செய்கிறான்.

ராஜா : ஏன் அழறே? அழக்கூடாது.

தர்மு : இப்படித்தான் சார், எப்பப் பார்த்தாலும் எதையாவது நினைச்சுண்டு அழறா, ஆனா, ஏன் அழறா, எதுக்கு அழறாங்கறதே தெரியமாட்டேங்குது. அவ மனசுக்குள்ளே புகுந்தா பார்க்க முடியும்? அலுத்து சலித்து வீட்டுக்கு வந்தா இவ அழறதப் பார்க்கும்போது வாழ்க்கையே வெறுத்துப் போயிடறது.

ராஜா : அழக்கூடாது அன்னம்! நீ அழறதுனால உன்னைச் சுற்றி இருக்கறவாளுக்கும் சங்கடம்தானே?

*(தர்மு உள்ளே சென்று ஒரு டம்ளரில் டீ தயாரித்துக்கொண்டு வருகிறாள். அதை ராஜா ராமனிடம் கொடுத்துவிட்டு மற்றொரு டம்ளரில் அன்னத்துக்குத் தருகிறாள். அதை அவள் இடக்கையினால் வாங்கிக் குடிக்கும்போதே கை நடுங்குகிறது. டீ மேலே சிந்துகிறது. தர்மு அருகில் வந்து உட்கார்ந்து அதை அவளுக்குப் புகட்டுகிறாள்.*

*அதை அவளுக்குப் புகட்டிக் கொண்டே கரகரப்பான தொனியில் பேசுகிறாள்.)*

தர்மு : இவள எங்காவது அநாதை ஆசிரமத்திலே விட்டுட்டு வந்தா என்னை கல்யாணம் பண்ணிக்கறதா சொன்ன சத்புத்ரன் ஒருத்தன் மெட்ராஸ்லேருந்து நேத்திக்கு என்னைப் பெண் பார்க்க வந்தான். மாதுசிரோன்மணி சீதா மாமியின் சிபாரிசு.

ராஜா : கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதான். ஆனால் மனிதாபிமானமில்லாத அந்த நிபந்தனை அத்தனை சரியாப்படலையே!

தர்மு : நான் சரியான பதில் சொல்லலைன்னு சீதாமாமிக்கு என் மேல கோபம். நான் இப்படி இதுக்கு முன்னால இரண்டு வரன்களையும் வேண்டாம் என்று சொல்லியிருக்கேன்.

## காட்சி – 2

(பகல் : மார்க்கெட்
வெளிப்புறம்)

(கதாபாத்திரங்கள் : தர்மு, ராஜாராம், அன்னம்)

*(தர்முவும், ராஜாராமும் மார்க்கெட்டில் காய்கறி வாங்குகிறார்கள். பைகளில் அதை எடுத்துக்கொண்டு நடக்கிறார்கள். சாலையோரமாக நடைபாதையில் பேசியபடி நடக்கிறார்கள்.)*

தர்மு : ஒரு வருஷத்துக்கு மேலே சேலத்திலே டீச்சரா இருந்தபோது ஒரு பணக்கார வாலிபன் என்னையே சுத்திச்சுத்தி வந்தான். ரொம்ப நல்ல பையன்தான். அவனோட காதல் ஆர்வத்தைப் பார்க்கும்போது இவன் எப்படியும் என் கழுத்தில் தாலி கட்டாம விடமாட்டான் போலத் தோன்றுகிறதே என்று என் மனசு கூட மெதுவா அவனை விரும்ப ஆரம்பித்தது.

*(ஓர் இடத்தில் தர்முவும், ராஜாராமும் பேசிக் கொண்டு போவதை சீதா மாமி பார்க்கி றாள். பார்த்துவிட்டு ஒரு மாதிரியாகத் தலையை ஆட்டுகிறாள்.)*

ஒரு நாளைக்கு இப்படித்தான், என் மன்மத ராஜாவே உன்னுடைய காதல் ஆர் வத்தைக் கண்டு மெச்சினேன். உன்னை இனி சோதிக்கும் எண்ணம் எனக்கு இல்லை. சாயங்காலம் வீட்டுப்பக்கம் வா. விரிவாகப் பேசலாம் என்று கூறி னேன். மோட்டார் சைக்கிளில் வந்தான். பார்த்தான். பேசினான். கூடத்திலே கட்டில்ல இருந்த அன்னத்தைப் பார்த்துவிட்டு அதிர்ச்சியோட கேட்டான். இது யார் என்று. என் தங்கை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தா இவ நம்ம கூடத்தான் இருப்பா என்று சொன்னேன். அவ்வளவுதான், உள்ளே போயிட்டு வர்றதுக்குள்ள ஆள் அம்பேல்.

சப்தமிட்டு சிரித்துக் கொண்டே கூறுகிறாள். திடீரென்று அவள் கண்கள் கலங்கு கின்றன. நடந்து வந்தவர்கள் சாலையோர நடைபாதை சிமெண்ட் பெஞ்சில் இடைவெளிவிட்டு உட்காருகின்றனர். தர்மு தோளில் தொங்கும் காய்கறிப் பையை பெஞ்சில் வைத்துவிட்டு கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். மனத்தில் துயர அழுத்தம் தாளாமல் சற்று நேரம் உதட்டைக் கடித்து துக்கத்தை அடக்கிக் கொள்கிறாள்.

தர்மு : *நல்ல சந்தர்ப்பங்கள் வருகின்றன. நல்ல பையன்களாக வருகிறார்கள் என்று நான் பிற்கால வாழ்க்கையை மட்டும் பார்த்துண்டு போயிட்டா அன்னத்தை யார் பார்த்துப்பா சார்? அவ நிலை தனியா விட்டுட்டுப் போறமாதிரியா இருக்கு?*

ராஜா : தர்மு! ஒரு பொதுவான அக்கறையினால கேட்கறேன். உனக்கொரு மூத்த சகோ தரன் இருக்கான் இல்லையா?

தர்மு : *இருக்கான் கல்யாணம் பண்ணிண்டு நாலு குழந்தைகளோடு சௌக்கியமா இருக்கான்.*

ராஜா : பெற்றோருக்குப் பிறகு உடன்பிறப்புகளைப் பாதுகாக்க வேண்டியது குடும் பத்தில் மூத்தவனோட பொறுப்பு இல்லையா?

தர்மு : *பொறுப்புதான். இந்தப் பொறுப்பை அவன் தானா முன்வந்து ஏற்றுக்கொண் டால் அதற்குப் பேர் பெருந்தன்மை. பிறர் சொல்லி ஏற்றுக்கொண்டால் நிர்ப் பந்தம். இவை இரண்டையும் புறக்கணித்தா யார் என்ன செய்ய முடியும்? கூட்டுக் குடும்ப வாழ்க்கை தத்துவமே சிதைந்து சின்னாபின்னமாகிப் போச்சு சார். யாரும், யாரையும் கண்டிக்க முடியாமல் ஒவ்வொருவரும் ஒரு மூட்டை ஒழுங்கீனங்களைத் தங்கள் முதுகில் சுமந்துகொண்டு வாழ்கிறார்கள். வாழ்க் கைப் போராட்டத்தில் வெறும் ஓட்டமிருக்கிறதே தவிர, ஜீவனே இல்லை. உயி*

*ரோட்டமில்லை. ஜொலிப்பு இல்லை. நான் இப்படி கத்தி மேலே நடக்கற மாதிரி நடந்துண்டிருக்கேன். ஆனால் அன்னமோ எனக்குக் கல்யாணம் என்று பேச்சை எடுத்தாலே ரொம்ப அப்செட் ஆயிடறா.*

ராஜா : காரணம்?

தர்மு : *பயம். நான் திடீர்னு கல்யாணம் பண்ணிண்டு போயிட்டா அவளை அநாதையா விட்டுடுவேனோ என்கிற பயம். சில நேரங்களில் அவளை எப்படி சமாதானம் செய்யறதுன்னே தெரியாம தவிச்சுப் போயிடறேன். அந்த நேரத்திலே எனக்கு ஆத்திரமே கூட வந்துடுது. சத்தம் போட்டுடறேன். நானும் மனுஷிதானே? எத்தனை கஷ்டங்களைத்தான் அடக்கி வச்சுக்க முடியும்? ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்கிறபோது அணை உடைந்த மாதிரி கோபம் வந்துவிடுகிறது. எனக்கு வருகிற கெட்டபேர் எல்லாம் இந்த மாதிரி சூழ்நிலையிலேதான் சார். தர்மு பொல்லாதவ, கொடுமைக்காரி, அன்னத்தை கொடுமைப்படுத்தறா, இப்படிக் கெட்ட பேர் எடுக்கறேன்.*

ராஜா : இப்படியெல்லாம் கூட கெட்ட பேரா?

தர்மு : *எல்லாம் அந்த சீதா மாமியோட கைங்கர்யம் தான். அன்னத்தின் வாயைக் கிளற வேண்டியது. இந்த மாதிரி ஊனப்பட்டவர்களுக்கே எப்போதும் மனசிலே ஒரு குறையிருக்கும். உன்ன தர்மு திட்டினாளாடி? சத்தம் போட்டாளாடி? சாதத்தையெல்லாம் எடுத்து வெச்சுட்டு வேலைக்குப் போயிட்டாளா? கட்டிலோட கட்டிலா கிடக்கற ஒரு நோயாளி ஜீவனுக்கு சோறு போடகூட நேரமில்லையாக்கும் என்று தூண்டிவிடுவா. அவ ஓர் அப்பாவி. வீட்டுக்கு வந்த மூஞ்சிய தூக்கி வச்சுண்டு பேசவே மாட்டா.*

ராஜா : தர்மு! உன்னிடம் நான் சில அபிப்ராயங்கள் கேட்க வேண்டுமென்று ரொம்ப நாளாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

தர்மு : *எதைப் பத்தி சார்?*

ராஜா : உன் சொந்த வாழ்க்கையைப் பத்தி கொஞ்சம். என் சொந்த வாழ்க்கையைப் பத்தி கொஞ்சம். இந்த இரண்டு கொஞ்சமும் சேரும்போது நமது சொந்த வாழ்க்கையாகத்தானே இருக்கும்?

தர்மு : *பேசலாம். எனக்குக் கூட நிறைய எது, எதுவோ பேசவேண்டும் போல இருக்கு. அந்தரங்கமா யாரிடமாவது மனசிலே இருக்கறதையெல்லாம் கொட்டித் தீர்க்க மாட்டோமா என்று அத்தனை துக்கமிருக்கு.*

(ஓரிடத்தில் இருவரும் தனித்தனியே பிரிகிறார்கள்.)

**– மகரிஷி**

**மகரிஷி**

இவர் சிறந்த திரைக்கதை ஆசிரியர் மட்டுமன்றி சிறுகதை ஆசிரியருமாவார் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். பனிமலை, புவனா ஒரு கேள்விக்குறி, வட்டத்துக்குள் சதுரம் ஆகியவை சிறந்த தொலைக்காட்சித் தொடர்களாகும். இவரது பச்சைவயல் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதுதான் இப்பாடப்பகுதி.

## செயல்பாடுகள்

- பச்சைவயல் திரைக்கதையைச் சிறுகதையாக மாற்றி எழுதுக.
- மகிரிஷியின் திரைக்கதையை விமர்சனம் செய்க.

# பரிசுத்த அன்பில் நீந்தும் மீன்கள்

சமூகச் சிக்கல்களின் மையத்திலிருந்து தமது முதல் திரைப்படமான 'கற்றது தமிழின்' ஆதி இழையை இயக்குநர் ராம் தேர்ந்தெடுத்திருந்தார். மென்பொருள் துறையினரால் சமூகத்தில் ஏற்பட்டிருந்த அழுத்தமான தாக்கத்தை உள்வாங்கியிருந்த 'கற்றது தமிழ்' முழுமையான திரைப் படமாகப் பரிமளிக்கவில்லை. சில குறைகளைக் கொண்டி ருந்தபோதிலும் சமகாலத்தின் ஒரு பிரச்சினையை அந்தத் திரைப்படம் அலச முற்பட்டது. தங்க மீன்கள் ராமின் இரண் டாம் படம். இதன் வெளியீடு தொடர்பாக நாளிதழ்களில் பிர சுரமாகியிருந்த விளம்பர வாசகங்கள் இதை அதீதப் புனைவு வரிசைப் படமாக எண்ணவைத்திருந்தன. ஆனால் திரைப் படத்தை எதிர்கொண்ட மனத்தில் இப்படம் உருவாக்கிய அதிர்வுகள் அசாதாரணமானவை.

நிசப்த அரங்கின் திரையில் அலைந்துகொண்டே யிருந்த தங்கமீன்கள் இதுவரையான தமிழ்த் திரைப் படங்கள் பயணப்பட்டிராத பாதையைத் துலக்கமாக்கியது. தொடக்கத்திலிருந்தே தீவிரமான உணர்வுகளும் பதற்றத்தின் துளிகளும் தளும்பிய காட்சிகளில் கசிந்த துக்கம் ஆழ் மனத்தில் நோவு ஏற்படுத்தியது. இடைவேளை வரையான காட்சி அமைப்புகளில் காணப்படும் இறுக்கமும் அடர்த்தியும் இதுவரை எந்தத் தமிழ்த் திரைப்படத்திலும் சாத்தியப்பட்டிருக்காதவை. அதன் பின்னர் படத்தைக் கோத்திருந்த மைய இழையில் அவ்வப்போது சிறிது தளர்வும் இறுதியில் முழுமையான தளர்வும் ஏற்பட்டிருந்தன. படத்தின் ஒட்டுமொத்த அழுத்தத்தையும் உச்சக்கட்ட போதனைக் காட்சி சட்டென வெளியேற்றியதால் சலிப்பும் வருத்தமும் உருவாயின.

மனக்கூட்டுக்குள் சுருங்கிக்கொள்ளும் மனிதர் களின் சராசரிப் பதற்றங்களையும் பரிதவிப்புகளையும் விசும்பல்களையும் கேவல்களையும் இயலாமைகளையும் ஏமாற்றங்களையும் பிரியங்களையும் நேர்த்தியான காட்சி மொழியாக்கிய நுட்பத்தில் ராம் வித்தியாசப்படுகிறார். பழுக்கக்காய்ச்சிய வார்த்தைகளின் வாதைக்கு ஆளான

உள்ளங்களின் கொப்புளங்கள் காட்சிகளில் நிணம் பரப்புகின்றன. தமக்கென சுய அடையாளமின்றி ஏதோ ஒரு கிராமத்திலோ நகரத்திலோ அன்றாட வாழ்வை நகர்த்துவ திலேயே ஆயுளைக் கழிக்கும் வறியவர்களின் அவலங் களே சிந்தையை நிறைக்கின்றன.

நல்லாசிரியர் விருது பெற்ற தகப்பனுக்குப் பிறந்த தலைமகன் கல்யாணி. முறையாகக் கல்வி கற்காத அவன் சரியான வயதில் காதல் வயப்பட்டு விடுகிறான். இளவயதி லேயே மணமும் முடித்துவிடுகிறான். வாழ்க்கை நடத்து வதற்குத் தேவையான வருமானம் இல்லை என்ற சூழலில் அப்பனோடு ஒரே வீட்டில் குடித்தனம் நடத்துகிறான். தந்தையிடம் போதிய வருமானமும் தேவையான அளவு சொத்தும் உள்ளன. தங்கை மென்பொருள் துறையில் கார்டு நிறையச் சம்பாதிக்கிறாள். ஆனால் கல்யாணி தன் பிரிய மகளின் படிப்புச் செலவுக்கே திணறுகிறான். படத்தின் தொடக்கக் காட்சியில் சிறு மகளுடன் மரணம் குறித்து உரை யாடும் தந்தையைக் காணும்போதே மனம் துணுக்குறுகிறது. அர்த்தம் பொதிந்த நறுக்குத் தெறித்த உரையாடலுக்கான வெளியைத் தமிழ்த் திரைப்படப் பரப்பில் பார்ப்பது அரிதிலும் அரிது. அப்படியொரு வெளி தங்க மீன்களில் திறந்துகிடக்கிறது.

செல்லம்மாவின் சின்னச் சின்னத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் வாழ்வின் முழுமையை உணர்கிறான் கல் யாணி. எனவே எந்த விகற்பமுமின்றி முகத்தில் வெள்ளிப் பூச்சுடன் சில்வர் மேனாக மகளிடம் கதை பேசியபடியே சைக்கிளில் ஊருலா வருகிறான். மகளை மட்டுமின்றி எல்லாக் குழந்தைகளையும் அவன் நேசிக்கிறான். கடன் கேட்கச் சென்ற இடத்தில் நண்பனுடைய மகன் ஆசை யாய்க் கேட்ட வெண்ணிலா கேக்கை மறுமுறை ஞாபகமாக வாங்கிச் செல்ல அவனால் முடிகிறது. செல்லம்மா புத்தி சாலிப் பெண். அவள் நேயமிக்க கல்விக்கு ஏங்குகிறாள். ஆங்கில வழிக் கல்வி அவளது உலகத்துடன் சுத்தமாகப் பொருந்தவில்லை. எனவே மந்தமானவளாகப் புரிந்து கொள்ளப்படுகிறாள். கற்பதில் பரிவுடன்கூடிய அன்பு அவளுக்குத் தேவைப்படுகிறது. அதைத் தருபவனாகத் தந்தை இருக்கிறான்.

சாமி படத்தின் முன்பு மகளுக்குத் தேவையான பள்ளிக் கட்டணத்தைக் கல்யாணியின் தந்தை வைத்திருக் கும் காட்சியில் சாமி படத்தின் இடத்திலிருந்து சம்பவத்தை

## அம்மாவின் கைபேசி

ஒரு நாவலின் மையக் கதையைக் கதையாக்கும் போது அந்தப் படைப் பில் ஒரு புதுவித இரசனை முறை உரு வாக்கப்படுகிறது. இந்தப் படத்தில் எளி மையான காட்சிகள் மூலம் பார்ப்பவர் மனதில் காட்சியின் தன்மை மனம் நெகிழச் செய்கிறது. இப்படத்திலும் ஹீரோவைக் கொலை செய்கிறார்கள்.



கொன்றவன் பொதுவாகத் தமிழ்ப் படங்களில் தப்பித்து ஓடுவான். அல்லது கொலையை மறைக்க முயற்சி செய்வான். இந்தப் படத்தில் கொலை செய்தவன் கொலை செய்யப்பட்டவனைக் கட்டிப்பிடித்து அரவணைப்புடன் தாங்குகிறான்.

கேமரா படம்பிடித்துள்ள தன்மை பொருள் பொதிந்தது. பேத்தியின் படிப்புக்கு உதவும் தாத்தா போகிறபோக்கில் மகனின் சுயமரியாதையைச் சீண்டி விடுகிறார். பணத்தை எடுக்க மனமின்றித் தானே கட்டிக்கொள்வதாகத் தெரிவித்துக் கல்யாணி மகளுடன் வெளியேறுகிறான். குழந்தை செல்லம்மா போகும்வழியில் தன் தோழி நித்யஸ்ரீயிடம் தனக்கொரு பூ கேட்க அவள் அதை இயல்பாய் எடுத்துத் தருகிறாள். அடுத்தடுத்து வரும் இந்தக் காட்சிகள் பெரியவர்களின் உலகத்திற்கும் சிறுவர்களின் உலகத்திற்குமிடையேயான முரணை உள்வாங்க உதவுகிறது. இப்படிப் பல செய்திகளை அதிகாலைப் புலர்வது போன்று நுட்பமாக உணரச் செய்கிறது படம்.

இரவில் கல்யாணியும் வடிவும் ரயிலடியில் பேசிக்கொள்ளும் காட்சியில் தண்டவாளத்தில் தடதடத்து ஓடும் ரயிலின் ஓசை பதற்றமான கதாபாத்திரங்களின் மனநிலையோடு பார்வையாளனின் மனநிலையை ஒன்றுகூட்டுகிறது. தினசரி நிகழ்வுகளில் இயல்பாக ஒலிக்கும் ஓசைகளைப் பொருத்தமான தருணத்தில் பின்னணி இசையாக மீட்டியதால் திரைப்படத்தின் ஜீவன் பெருகுகிறது.

குடும்பம், சமூகம் ஆகியவற்றின் சூழல்கள் காரணமாக எந்த நேரத்திலும் மீட்சி எல்லைக்கு வெளியே சென்றுவிடக் கூடிய அபாயகரமான மனஅழுத்தத் தருணங்களை அடிக்கடி எதிர்கொள்கிறான் கல்யாணி. அந்த மனப்போராட்டம் தான் அவனை மற்றவர்களிடமிருந்து தள்ளிவைக்கிறது. தந்தையும் தன் மகன்மீது பாசங்கொண்டவர்தான். ஆனால் பொருள் தேட இயலாத மகன் குறித்த ஆற்றாமையைத்தான் அவரும் வெளிப்படுத்துகிறார். அயலானின் ஆயிரம் சொற்கள் உருவாக்காத வடுவை நெருக்கமானவனின் சிறுவிசனம் ஏற்படுத்திவிடுமே! ஓலங்களைவிட விசும்பலின் தீவிரம்தானே மனத்தை ஒய்வற்று உழலவிடுகிறது.

இயலாமையின் வெம்மையும் தவிப்பின் வெதும்பலும் வெளியேற வழியின்றி உள்ளுக்குள்ளேயே அலைமோதுவதால் மனம் அடையும் வேதனைத் துயரைப் பார்வையாளனால் உணரமுடிகிறது. தந்தையுடன் சரிசெய்ய இயலாத அளவிலான பிணக்கு கொண்டகணத்தில் வீட்டைவிட்டு வெளியேற முடிவுசெய்து, பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் போதே தன்னுடன் வந்த காதல்

அவன் இடும் கட்டளைகளைக் கேட்டுப் படத்தின் இறுதிவரை நிறைவேற்ற முயன்று கொஞ்சம் பணத்தையும் அவன் இறந்த செய்தியையும் வீட்டிற்கு கொண்டு சேர்க்கிறான். இங்குக் கொலை மிகவும் இரக்கமுடன் காட்டப்பட்டுத் தமிழரின் போர் மரபு கடைப்பிடிக்கப்படுகிறது. இது இந்தப் படத்தின் மிகச் சிறந்த கலை நுட்பமாக மாற்றப்பட்டுள்ளது. உயிரிப்பலி ஏதோ ஒரு கட்டாயத்தின் பேரின் நிகழ்ந்தாலும் அதற்காக வருந்துவதும், பிராயச்சித்தம் தேடுவதாகவும் கதை முடிகிறது. இதில் எந்தப் பிரம்மாண்டத் தன்மையும் இல்லாமல் மிகப் பெரிய ஹீரோக்கள் இல்லாமல் கதை நகர்ந்து வெற்றி பெறுகின்றது. இந்த அளவிற்குக் கூட பிரம்மாண்ட படங்களில் கதைகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. அவற்றில் கலைத் தன்மை அழிக்கப்பட்டு வியாபாரம் முன்னிறுத்தப் படுகிறது.

**– நாவுக்கரசு**

மனைவியைக் கல்யாணி அழைக்கும்போது அவள் மறுப்பதுடன் குழந்தையையும் தர மறுத்துக் கதவை அழுத்தமாக மூடிவிடுகிறாள். மூடிய கதவின் முன்னர் முட்டி மோதி "நான் என்ன தப்பு செய்தேன்" என மாசுபட்ட சமூகச் சூழலில் மாசுபடாத கல்யாணி கதறுகிறான். திறமையற்ற காரணத்தால் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டோரின் ஒட்டுமொத்தக் கதறலாக அது இருப்பதால் உக்கிரத்துடன் ஒலிக்கிறது.

காட்சிகளையும் கதாபாத்திரங்களையும் திரைக் கதைக்கு நூறு சதவிகிதம் பொருத்தமாக அமைத்து விட்டதால் பார்வையாளனை இயக்குநர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வெவ்வேறு நிலங்களுக்கு அவரது விருப்பம்போல் அழைத்துச் செல்ல முடிகிறது. கேள்விகளற்றுத் தொடர்கிறான். பார்வையாளன் காட்சிகளின் பின்னணியில் எழும் ஒலிகள், திரையில் வரும் அஃறிணைப் பொருள்கள் ஆகியன காட்சிகளின் உணர்வைப் பார்வை யாளனிடம் பரிவோடு கொண்டுசேர்க்கின்றன.

நல்லாசிரியர் விருதுபெற்ற நன்கு சம்பாதித்த தந்தையைவிடப் படிப்பைப் பாதியில் துறந்த, போதுமான அளவு சம்பாதிக்காத தந்தையான கல்யாணி நல்ல தந்தை என்னும் பெயரை எளிதில் பெற்றுவிடுகிறான். காரணம், குறைகளைப் பெரிதுபடுத்தாத தூய அன்பு.

''ஆச்சி எப்பம்பா சிரிச்சிருக்கா'' என்று பெரிய மனுஷி தோரணையில் பேசுவது, "மிஸ் மிஸ்" எனப் பதறுவது, அந்நியோன்யமான ஆணிடம் அவனது நேசத்தை விழையும் பெண் கொஞ்சிக் குழைந்து பேசுவதுபோல் தன் தகப்பனிடம் பேசுவது, செர்க்கியிடம் மனவருத்தங்களை எல்லாம் சொல்லிவிட்டுக் குளத்தில் குதிக்கத் தயாராவது, தந்தைக்குக் காய்ச்சல் என அவன் சொன்னவுடன் ஆடும் ஊஞ்சலில் இருந்து இறங்கி அனுசரணையுடன் அதைச் செவிமடுப்பது எனப் பலவித உணர்ச்சிகளையும் இயன்ற வரை எல்லை மீறாதபடி கையாண்டுள்ளாள் செல்லம்மா வேடமேற்றுள்ள சாதனா.

கோபமான இடங்களிலும் பாசமான

**அடுக்குத் தொடர்**

அடுக்கி வரும் சொற்கள் தனித்து நின்றாலும் பொருள் தருமானால் அது அடுக்குத் தொடர் எனப்படும்.
எ.டு: விடு விடு, பாம்பு பாம்பு, வருக வருக தீ தீ தீ இத் தொடர்களில் வரும் சொற்கள் விடு பாம்பு வருக தீ எனத் தனியாக நின்றாலும் பொருள் தருகின்றன.

**இரட்டைக் கிளவி**

அடுக்கி வரும் சில சொற்கள், அடுக்கி வந்தால் மட்டுமே பொருள் தரும் தனித்து நின்றால் பொருள் தருவதில்லை. இவ்வாறு வரும் தொடர்களை இரட்டைக் கிளவி என்பர்.
எ.டு: வளவள, குளுகுளு, படபட, விடுவிடுவிடு
இத் தொடர்களில் வரும் வள,குளு, பட, விடு என்பவை தனித்து நின்றால் பொருள் தருவதில்லை.அடுக்கி வந்தால் மட்டுமே பொருள் தருகின்றன.

சந்தர்ப்பங்களிலும் வசனங்கள் நறுக்கென வந்து விழுகின்றன. நாகர்கோவில் அருகே உள்ள வீராணி ஆளூர், அச்சன்கோவில், வயநாடு, கொச்சி, செஞ்சி எனக் கதைக்குப் பொருத்தமான களங்களை ராம் தேர்வு செய்துள்ளார். உலகமயமாக்கலால் நலிவடைந்த சிறுதொழில், தனியார் பள்ளிகளின் சுரண்டல், விளம்பரங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியவற்றின் பாதிப்பு, பழங்குடியினர் வாழ்வு போன்ற சமூகக் காரணிகளின் தாக்கத்தை வெறும் புள்ளிகளாக அங்கங்கே வைத்துள்ளார் ராம். நம்பிக்கையும் பொறுமையும் கொண்ட பார்வையாளன் புள்ளிகளை இணைத்து ஓவியத்தை ரசித்துக் கொள்கிறான். ஆகவே அவனது ஆழ்மன இண்டு இடுக்குகளிலெல்லாம் நீந்திக்கொண்டேயிருக்கின்றன இந்தத் தங்க மீன்கள்.

**– என். செல்லப்பா**

**என். செல்லப்பா**

இவர் 1973இல் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி என்ற ஊரில் பிறந்தார். அடவி, படப்பெட்டி, காலச்சுவடி ஆகியவை இவரது படைப்புகள். பொறியியலில் பட்டம் பெற்றவர். தனியார் தொலைக்காட்சித் துறையில் பணியாற்றி வருகிறார்.





## செயல்பாடுகள்

- கதை வசனம், கதைமாந்தர்கள், மொத்தக் காட்சி, கதைப் பின்புலம், கதை நகர்வு – இவை குறித்துக் குழுக் கலந்துரையாடல் நடத்துக. குறிப்புகளை வெளியிடுக.
- நீ ரசித்த ஒரு சிறுகதையைத் திரைக்கதையாக எழுதுக.
- நீ எழுதிய திரைக்கதையைக் குறும்படமாகத் தயாரிக்க.

# பாலுமகேந்திராவுடன் சிலநொடிகள்

சினிமா, தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிவிட்ட பிறகும், இன்றுவரை காமிரா வால் பதிவு செய்யப்பட்ட நாடகங்கள் என்னும் அளவிலேயே இருக்கும் தமிழ்த் திரைப் படங்களுக்கு மத்தியில், ஒரு கலைஞனாக பாலுமகேந்திராவின் இடம் மிக முக்கிய மானது. 1970-களின் இறுதியில் தமிழ் சினிமாவில் நிகழ்ந்த மாற்றங்களுக்குக் காரண மானவர்களில் பாலுமகேந்திராவும் ஒருவர். கதாநாயகர்களின் பராக்கிரமங்களுக்கு மட் டுமே கைதட்டி வந்த ரசிகனுக்குத் தன் நுட்பமான போட்டோகிராபி திறனால் சினிமா மொழியை அறிமுகப்படுத்திய வர். மழைக்காலத்தில் இலைகளின் நுனியில் உறங்கிக் கிடக்கும் பனியின் கவனமும் உபதேசத்திற்கான ஞானியின் தீர்க்கமும் கொண்டது பாலுமகேந்திரா வின் காட்சி மொழி. நிழலுக்கும் மௌனங்களுக்கும் அர்த்தம் தந்த தமிழ் சினிமாவில் கவித்துவத்தைச் சாத் தியப்படுத்தினார் அவர். புதியதாக பாலு மகேந்திரா இயக்கும் அது ஒரு கனாக் கலாம் பட வேலைகளுக்கு மத்தியில் அவரைச் சந்தித்தோம். கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் பேசினார் பாலுமகேந்திரா.



**?** *உங்களது படைப்பு மனோநிலையின் ஆரம்ப காலத்திலிருந்து நாம் தொடங்கலாம்.*

**பாலுமகேந்திரா :** படைப்பாற்றலின் ஆரம்பம் எனக்கு ஒரு விபத்தாகத்தான் ஏற்பட் டது. தங்கள் என்ற பாலிய நண்பன் தந்த அம்புலிமாமா புத்தகம் எனக்குப் பிடித்திருந் தது. அதற்குப் பிறகு அம்புலிமாமா புத்தகங்களைத் தேடிப் படிக்கத் தொடங்கினேன். தொடர்ந்து குமுதம், ஆனந்த விகடன், கல்கி, எழுத்து, தீபம், கணையாழி என்று என் வாசிப்பு படிப்படியாகச் சென்றது. நூலகத்திலிருந்து, எங்கள் அப்பா இந்தப் புத்தகங் களை எடுத்து வந்து தருவார். கல்லூரி செல்லத் தொடங்கியபோது எழுத ஆரம்பித்து விட்டேன். ஸ்ரீலங்காவில் வெளியாகி வந்த தினகரன், வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அன்றும் ஒரு சிறுகதை பிரசுரிப்பார் கள். நான் இப்பத்திரிகைகளுக்குக் கதை, கவிதை, சினிமா விமர்சனங்கள் எழுதினேன்.

***? அப்போது அங்கிருந்த சிறுபத்திரிகை இயக்கத்தவர்களுடன் உங்களுக்குப் பரிச்சயம் இருந்ததா?***

**பாலுமகேந்திரா :** கொழும்பில் நான் வேலை பார்த்து வந்து காலகட்டத்தில் தேனருவி என்றொரு இலக்கியப் பத்திரிகையை நானும் சில நண்பர்களும் இணைந்து நடத்தினோம். அருண்மொழி என்ற வங்கியில் பணிபுரிந்த ஒரு நண்பர் பணம் போட்டார். நாங்கள் மற்ற வேலைகளைப் பகிர்ந்து கொண்டோம். தேனருவியில்தான் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருடைய மிக முக்கியமான இலக்கியக் கட்டுரைகள் வெளியாகின. செ. யோகநாதன், பெண்டிக்ற் பாலன் ஆகியோர் அவர்களது தொடக்ககால எழுத்துகளை அதில்தான் எழுதினார்கள்.

***? சினிமா மீதான ஆர்வம் எப்போது ஏற்பட்டது?***

**பாலுமகேந்திரா :** நான் படித்த பள்ளிக்கூடம் அமெரிக்கன் ஜெஸ்விட்ஸ் நடத்திய ஒரு கத்தோலிக்கப் பள்ளிக்கூடம். அங்கு பாதர் கேபிரியல் என்பவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 16 எம்.எம்.இல் திரைப்படம் காண்பிப்பார். இதனால் பை சைக்கிள் தீவ்ஸ் உட்பட உலகின் தலைசிறந்த பல திரைப்படங்களைப் பார்ப்பதுக்கான வாய்ப்பு எனக்கு அப்போதே கிடைத்துவிட்டது. இந்தக் காலகட்டத்தில் நான் ஒரு சிவாஜி கணேசன் ரசிகனாகவும் இருந்தேன். முதல்நாள் முதல் காட்சி பார்க்கிற வெறிகொண்ட ஒரு ரசிகன். பள்ளிக்கூடத்தில் உலக சினிமா, வெளியே தமிழ் சினிமா என்று இரண்டும் இணையாகச் சென்றுகொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் இரண்டுக்கும் இடையே எனக்குள் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன. பிறகு வெளியேயும் உலக சினிமாவை நோக்கிச் செல்லத் தொடங்கினேன். நண்பர்களுடன் இணைந்து பிலிம் ஃபிரேம்ஸ் என்ற ஒரு திரைப்படச் சங்கத்தைத் தொடங்கிப் படங்களைத் திரையிட்டோம்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் கொழும்பு சென்று சர்வே டிபார்ட்மெண்டில் ஏரியல் புகைப்படக்காரராக இரண்டு வருடங்கள் வேலை செய்தேன். கொழும்பிலும் திரைப்படச் சங்கம் தொடங்கினோம். தமிழ் சினிமா பார்க்கிற – மோகம் இந்தக் காலகட்டத்தில் சுத்தமாகக் குறைந்துவிட்டது. நம்முடைய சினிமாவும் நமக்குத் தேவைப்படும் சினிமாவும் இவை அல்ல என்ற எண்ணம் உருவாகிவிட்டது. இந்தியாவில் எழுத்தாளர் ஜெயகாந்தன் உன்னைப் போல் ஒருவன் என்ற ஒரு தமிழ்ப் படம் எடுத்திருக்கிறார் என்ற தகவல் அப்போது தெரிய வந்தது. அப்படம் கொழும்பில் திரையிடப்படவில்லை. இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் அதற்கு இரண்டு தலையங்கங்கள் எழுதியிருந்தார்கள். அதனைப் படிக்கச் சந்தோஷமாக இருந்தது. தமிழில் மாற்று சினிமாவுக்கான ஒரு தளம் ஏற்படுகிறது என்று தோன்றியது. ஆனால், அதனைத் தொடர்ந்து அதுபோன்ற முயற்சிகள் நடக்கவே இல்லை. தாகம், திக்கற்ற பார்வதி போன்றப் படங்கள் மிகப் பின்னாடி வந்தன.

**?** *புகைப்படங்கள் மீதான ஆர்வமும் இதே காலகட்டத்தில் இருந்ததா?*

**பாலுமகேந்திரா :** என்னுடைய பதிமூன்றாவது பிறந்த தினத்தன்று எங்கள் அப்பா எனக்கொரு கொடாக் கேவி க்ரெவுனிக் காமிரா அன்பளிப்பாகக் கொடுத்தார். அதில் புகைப்படங்கள் எடுக்கத் தொடங்கினேன். நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்புறம் இந்தப் பாராட்டுகளைக் கேட்க வேண்டும் என்பதற்காகவே தொடர்ந்து புகைப் படங்கள் எடுத்தேன். காமிரா அன்பளிப்பாகக் கொடுக்கவேண்டும் என்று அப்பாவுக் குள் ஏன் தோன்றியது என்பது பற்றி இன்றைக்கு வரைக்கும் என்னால் புரிந்துகொள்ள முடிந்ததில்லை. அவருக்குப் புகைப்படக் கலையில் ஆர்வம் இருந்ததில்லை. பல வகை களிலும் அப்பா என்னைப் பாதித்திருக்கிறார். அவர் ஒரு அஸ்ட்ரோபிஸிக்ஸ் பேராசி ரியர். சமஸ்கிருதத்திலும் தமிழிலும் அவருக்கு நல்ல பாண்டித்தியம் இருந்தது. என்னு டைய தமிழ் அறிவு, ஆர்வம் எல்லாம் அவர் எனக்குச் சொல்லிக்கொடுத்து வந்தது தான்.

**?** *பூனா திரைப்படக் கல்லூரியின் அறிமுகம் எப்போது ஏற்பட்டது?*

**பாலுமகேந்திரா :** கொழும்பில் இருந்தபோது எனக்குச் சினிமாவில் சேர வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து அதனை முறையாகக் கற்க விரும்பினேன். அப்போது, இந்தியாவில் ஒரு திரைப்படக் கல்லூரி இருக்கிறது என்கிற தகவல் எனக்குத் தெரியாது. நான் ஹார்வர்டு, கலிபோர்னியா, பாஸ்டன் உட் பட பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பித்தேன். இரண்டு பல்க லைக்கழகங்களில் எனக்கு இடம் கிடைத்தது. ஆனால் அங்கே சென்று படிப்பதற்கு ஆகும் செலவுகள், நானோ என்னுடைய அப்பாவோ கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாததாக இருந்தன. எனவே அட்மிஷன் அதிகாரி மிஸ். ஸ்டெல்லாவுக்கு என்னு டைய பிரச்னையைக் குறிப்பிட்டு, ஸ்காலர்ஷிப் ஏதாவது கிடைக்குமா என்று கேட்டு, ஒரு கடிதம் எழுதினேன். உடனே அவர்கள், எனக்கு ஒரு பதில் கடிதம் எழுதினார் கள். உங்கள் ஆர்வம் எனக்குப் புரிகிறது. நீங்கள் இங்கே வந்து சேர்வதாக இருந்தால், சேர்ந்த பிறகுதான் ஸ்காலர்ஷிப்புக்கு முயற்சிக்க முடியும். உறுதியாக அது கிடைக்கும் என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் உங்களுக்கு மிகப் பக்கத்திலேயே இந்தியாவில் பூனா என்னும் இடத்தில் இருக்கும் திரைப்பட கல்லூரிக்கு நீங்கள் ஏன் விண்ணப்பிக் கக் கூடாது. அது உலகின் தலைசிறந்த திரைப்படக் கல்லூரிகளில் ஒன்று. அதன் உள்ளே பெரிய படப்பிடிப்பு தளம் இருக்கிறது. 35 மில்லிமீட்டரில்தான் பயிற்சி செய்கிறார்கள். இந்த இரண்டு வசதிகளும் எந்த அமெரிக்கப் பல்கலைக்கழகத்திலும் உங்களுக்குக் கிடைக்காது. இங்கே 16 எம்.எம்.இல் தான் கற்றுத் தருகிறோம் என்று எழுதியிருந்தார். நான் பூனா திரைப்படக் கல்லூரிக்கு இயக்குநர் பயிற்சிக்கு விண்ணப்பித்தேன். ஆனால் எனக்குப் போட்டோகிராபிதான் கிடைத்தது. ஒருவகையில் அதுவும் நல்லதாக ஆகி விட்டது. அங்கே போட்டோகிராபி, டைரக்ஷன், எடிட்டிங் என்று எல்லா வகுப்புகளி லும் நான் கலந்துகொண்டேன்.

அது ஒரு அற்புதமான மூன்று வருடங்கள். ஒத்த எண்ணமும் நோக்கமும் கொண்ட நிறைய இளைஞர்கள் அங்கே இருந்தோம். ஜான் ஆபிரகாமும் மணிகௌலும் அப் போது அங்கே படித்தார்கள். சினிமா பார்ப்பது, சினிமா பற்றிப் பேசுவது, எழுதுவது, சினிமா எடுப்பது, மிகப் பெரிய சினிமாக்களை உருவாக்குவது பற்றிக் கனவு காண்பது இவைகள்தான் திரைப்படக் கல்லூரி வாழ்க்கை.

**?** *திரைப்படக் கல்லூரி வாழ்க்கை ஏற்கெனவே உங்களுக்குள் இருந்த சினிமா பற்றிய புரிதலில் எந்தவிதமான மாற்றங்களை ஏற்படுத்தியது?*

**பாலுமகேந்திரா :** முதலில் இருந்தது ஒழுங்குபடுத்தப்படாத, நானே தேடித் தேடித் தெரிந்து கொண்டவைகள். திரைப்படக் கல்லூரியுடையது ஒழுங்குபடுத்தப்பட்ட பல தலைமுறைகளின் பல வருட அனுபவத்தின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட விஞ் ஞானபூர்வமான பயிற்சி; மாற்று சினிமாவுக்கான ஒரு சிந்தனை. ஆர்வம் முதலிலேயே ஏற்பட்டுவிட்டதுதான் என்றாலும் கல்லூரியில் அது இன்னும் உறுதிப்பட்டது. அதற் குத் தேவையான பயிற்சி அங்குக் கிடைத்தது. ஒரு படம் பார்த்துவிட்டு இரவு இரண்டு மூன்று மணி வரை உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிற ஒரு சூழல் அங்கே இருந்தது.

**?** *கல்லூரியில் உங்களை வசீகரித்த ஆசிரியர்கள் யார். யார்?*

**பாலுமகேந்திரா :** ரித்விக் கட்டக் நான் சேர்வதற்கு முன்பே ஓய்வு பெற்றுவிட்டார். பி.கே. நாயரும் சத்தீஷ் பகதூரும் அங்கே இருந்தார்கள். சத்தீஷ் பகதூர் பிலிம் அப்ரி சியேசன் துறைத்தலைவர். டி.கே. நாயர், தேசிய திரைப்பட ஆவணக் காப்பகத்தின் கியூரேட்டர். இரண்டு பேருமே மிகத் திறமையான ஆசிரியர்கள். கோபால் என்ற பாலக் காட்டுக்காரர் எங்கள் துறைத் தலைவராக இருந்தார். அவரும்கூட மிகச் சிறந்த ஆசிரி யர். ஜெர்ரி மன்ஸில், மிலோஸ் போர்மன் ஆகியோர் கல்லூரிக்கு வந்திருக்கின்றனர். மிருனாள் சென், ரெகுலர் கெஸ்ட் லெக்சராக இரண்டு முறை வந்திருக்கிறார். மிருனாள் சென் மார்க்சிய கொள்கைகள் உடையவர். என்னுடைய பார்வையில் அவருடைய படங்களில் சிறிய அளவில் ஒரு பிரச்சாரத் தன்மை இருந்தது என்று கருதுகிறேன். அவற்றில் சமூக விமர்சனங்கள் அழுத்தமாக இருக்கும். ரேயின் அக்கறை முழுக்க முழுக்க மனித வாழ்க்கையைப் பற்றியதாகத்தான் இருந்தது. மிகப் பின்னாடி அவரும் ஒன்றிரண்டு அரசியல் படங்கள் பண்ணினார்.

**?** *அக்காலகட்டத்தில் உங்களை வசீகரித்த இயக்குநர்கள் யார். யார்?*

**பாலுமகேந்திரா :** என்மீது நல்லவிதமான பாதிப்பு ஏற்படுத்திய இயக்குநர்கள் என்று சத்யஜித்ரேயையும் அகிரா குரோசவாவையும் சொல்லலாம். குரோசவாவின் ரஷோ மான், ரெட் பியர்ட் என்ற இரண்டு படங்களை நான் கொழும்பிலேயே பார்த்திருந் தேன். ஆனாலும் பூனா வந்த பிறகுதான் அவரது முழு ஆளுமையும் எனக்குத் தெரிய

வந்தது. அவருடைய சினிமா மொழி, ஆளுமை அட்டகாசமான ஒன்று. அடர்த்தியானது. இன்றும் அவருடைய பழைய படங்களைத் திரும்பிப் பார்க்கும்போது எனக்குப் பிரமிப்புதான் ஏற்படுகிறது. ரேவுடைய ஆளுமை இதற்கு மாறாக மிகவும் நிதானமானது. எந்த ஆர்ப்பாட்டமும் அலட்டலும் ஆரவாரமும் பிரயத்தனமும் இல்லாதது; இயல்பானது.

**?** *உங்களைப் பாதித்த ஒளிப்பதிவாளர்கள்?*

**பாலுமகேந்திரா :** இந்திய அளவில் எடுத்துக்கொண்டால் சத்யஜித்ரே காமிராமேன் சுப்ரதோமித்ரா என்னை மிகவும் வசீகரித்தவர். ஹாலிவுட்டில் ஜேம்ஸ் வொங். பிற்காலத்தில் நெஸ்டர் அல்மென்ரோஸ், மைக்கல் சாப்மென்.

**?** *நீங்கள் விரும்பிப் பார்த்த தமிழ்ப் படங்கள்.*

**பாலுமகேந்திரா :** பாசமலர், தேவதாஸ், அந்த நாள், தண்ணீர் தண்ணீர். சமீபத்தில் ஆட்டோகிராப் உணர்வு ரீதியாக என்னைப் பாதித்தன. என்னை அதிகம் பாதித்த தமிழ்ப் படம் தேவதாஸ் தான். 49 முறைகள் அந்தப் படத்தை நான் பார்த்திருக்கிறேன். 49 ஆவது முறை, சில வருடங்களுக்கு முன்பு கமலா தியேட்டரில் பார்த்தேன். இப்போது நான் ஒரு படைப்பாளி என்கிற கோணத்தில் இருந்து பார்க்கும்போதும் பிரமிப்பு இன்னும் அதிகரிக்கத்தான் செய்தது. அதனுடைய நேர்த்தியான ஒளிப்பதிவு, சவுண்ட் ரிக்கார்டிங், ஒலி உபயோகிக்கப்பட்டிருந்த விதம் என்னைக் கவர்ந்தன. நான் தேவதாஸின் காமிராமேன் பி.எஸ்.ரங்காவைக் கண்டுபிடித்து தேடிப்போய் பார்த்தேன். அவர் என்னைக் கட்டிப்பிடித்து அழ ஆரம்பித்துவிட்டார். அவர் என்னுடைய ரசிகராக இருந்தார். பாலு நீ வந்தது, உண்மையிலேயே என்னைச் சந்தோஷப்படுத்துகிறது என்று சொன்னார்.

**?** *பூனா திரைப்படக் கல்லூரியுடன் ஒப்பிடும்போது, இந்திய சினிமாவைப் பொறுத்த வரைக்கும் சென்னை அடையாறு திரைப்படக் கல்லூரியின் பங்களிப்பு சொல்லிக்கொள்வது போல் இல்லை. இதற்குக் காரணம் என்ன என்று உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?*

**பாலுமகேந்திரா :** உண்மையிலேயே எனக்குத் தெரியவில்லை. அந்தக் கல்லூரிக்கு ஒருமுறைதான் நான் சென்றிருக்கிறேன். வீடு அங்கே திரையிடப்பட்டது. ‘பாபு நந்தன்’ கோட்டின் தாகம் படம் ஒன்றைத் தவிர ஒரு மாற்று முயற்சிகூட அடையாறு திரைப் படக் கல்லூரி மாணவர்களிடம் இருந்து வரவில்லை. ஆனால் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரைக்கும் மிகச் சிறந்த டெக்னிசியன்ஸ் வந்திருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர் அசோக்குமார், பி.சி.ஸ்ரீராம் இருவரும் அடையாறு திரைப்படக் கல்லூரி மாணவர்கள்தான்.

? *பூனாவில் படிப்பு முடிந்த பிறகு சினிமா வாய்ப்புகளுக்காக நிறைய பிரயத்தனப் பட வேண்டியிருந்ததா?*

**பாலுமகேந்திரா :** பூனா கல்லூரியிலிருந்து நேரே ஸ்ரீலங்காவுக்குப் போய்விட்டேன். அங்கு லெஸ்ட் ஜேம்ஸ் பிரிஸ் என்று ஒரு அற்புதமான இயக்குநர் இருக்கிறார். சத்ய ஜித்ரேவின் தாக்கங்கள் அவரிடம் உண்டு. அவருடைய ஒரு படத்துக்கு ஒளிப்பதிவு செய்வதற்கான ஆயத்த வேலைகளில் நான் இருந்தபோது, செம்மீன் இயக்குநர் ராமு கரியாத், உடனே புறப்பட்டு இங்கே வா என்று எனக்குத் தந்தி அனுப்பியிருந்தார். செம்மீன் காமிராமேன் மார்க்கஸ் பாட்லே அப்போது பிஸியாகயிருந்தார். எனக்கு அது தெரியாது. ராமுகரியாத், மார்க்கஸ் பாட்லேவுக்கு உதவியாளராக என்னை அழைக்கி றார் என்று எண்ணிக்கொண்டுதான் நான் புறப்பட்டு வந்தேன். எனக்கு அவரது போட் டோகிராபி மிகவும் பிடிக்கும்.

நான் இந்தியா வந்ததும் ராமுகரியாத் கேட்டார்: என்னுடைய செம்மீன் பார்த்திருக்கி றாயா? நான், ஆமாம், பார்த்திருக்கிறேன் என்றேன். அதே கூட்டணி மீண்டும் ஒரு படத்தில் வேலை செய்யப் போகிறோம். ரிஷிகேஷ் முகர்ஜி எடிட்டிங், சலீல் சௌத்ரி இசை,போட்டோகிராபி நீ பண்ணுகிறாய் என்றார். நான் பிரமித்துப் போய்விட்டேன். நான் இதனை எதிர்பார்க்கவில்லை. ராமுகரியாத், பூனா கல்லூரியில் நான் செய்த எ வியூ ஃபிரம் தி போர்ட் என்ற எனது டிப்ளமோ சினிமாவைப் பார்த்திருக்கிறார். அந்தப் படத்தை கௌதம மேனன் என்பவர் இயக்கியிருந்தார். ராமுகரியாத்தின் நெல்லு என்ற மலையாளப் படத்தை நான் ஒளிப்பதிவு செய்தேன். அதுதான் என்னுடைய முதல் படம். தமிழில் நான் ஒளிப்பதிவு செய்த முதல் படம் மகேந்திரனின் முள்ளும் மலரும். அப்புறம், சங்கராபரணம் பண்ணும்போது கே. விஸ்வநாத் கூப்பிட்டார். பிறகு மணி ரத்னத்தின் முதல் படமான பல்லவி அனுபல்லவி, பரதனின் முதல் படமான பிரயா ணம் ஆகியவற்றுக்கும் ஒளிப்பதிவு செய்தேன். இவர்கள் அனைவருமே தென்னிந்தி யாவின் முக்கியமான இயக்குநர்கள். மணிரத்னம் திரைக்கதையைச் சொன்னபோது, திரைக்கதை மட்டுமல்லாமல் அவரது ஆர்வமும் சினிமா மீது அவருக்கு இருந்த காத லும் எனக்குப் பிடித்திருந்தது. எனக்கும் அவருக்கும் இடையேயான அதிர்வுகள் நன் றாக இருந்தன. இந்த இளைஞனுடன் நான் வேலை செய்யவேண்டும் என்ற எண் ணத்தை முதல் சந்திப்பிலேயே அவர் உருவாக்கினார். மகேந்திரனுடன் வேலை செய் ததும் இதே காரணங்களால்தான். எல்லோருமே ஒத்த அதிர்வுள்ள இளைஞர்கள். ஆனால், அதற்குப் பிறகு அவர்கள் மாதிரி என்னை யாரும் வசீகரிக்கவில்லை. பல வாய்ப்புகள் வந்தன. நான் ஒப்புக்கொள்ளவில்லை. 1976-ல் நானே படங்களை இயக் கத் தொடங்கிவிட்டேன். எனவே, பிறகு மற்ற இயக்குநர்களின் படங்களில் பணியாற்ற எனக்குக் கால அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

? *உங்களது முதல் படமான கோகிலா ஒரு கன்னடப் படம். கன்னடத்தில் இயக்குவது என்பது நீங்களாக உருவாக்கிக் கொண்டதா அல்லது அதுவாக நிகழ்ந்ததா?*

**பாலுமகேந்திரா :** கோகிலாவின் திரைக்கதையை முடித்தபோது, அப்போது வெளியாகிக் கொண்டிருந்த தமிழ்ப் படங்களுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்தேன். கோகிலாவுக்குத் தமிழ்நாட்டில் எப்படியான வரவேற்பு இருக்கும் என்பது பற்றி எனக்குச் சந்தேகம் இருந்தது. ஆனால், அப்போது கர்நாடகத்தில் மாற்று சினிமாவுக்கு ஒரு வரவேற்பு இருந்தது. கிரிஷ்கர்னாட்டின் காடு போன்ற படங்கள் அங்கே வசூல் ரீதியாகவும் வெற்றியடைந்தன. எனவே அங்கே கோகிலாவைத் தயாரிக்க முடியும் என்று கருதி கன்னடத்தில் செய்தோம்.

? *அழியாத கோலங்கள் திரைப்படத்தின் முதல் மனப்பதிவு உங்களுக்குள் எங்கிருந்து துவங்கியது?*

**பாலுமகேந்திரா :** அழியாத கோலங்கள் ஏறக்குறைய என்னுடைய பாலிய கால அனுபவங்களை வைத்துப் பண்ணப்பட்ட ஒரு படம். அதற்கு நான் திரைக்கதை எழுதவில்லை. படப்பிடிப்புக்குச் செல்லும்போது ஒரு தாளில் காட்சி, காட்சியாகக் குறிப்புகள் மட்டுமே வைத்திருந்தேன். உங்களால் ஞாபகத்திலிருந்து கொஞ்சம் அதனைப் புரட்டிப் பார்க்க முடிந்தால், தமிழில் கதையே இல்லாத ஒரு படம் என்று அதை உணரலாம். வெறுமனே சம்பவங்கள்தான்.

? *அப்படத்தில் சிறுவன் ஆற்றில் இறந்து போகும் காட்சி, பின்னணி இசை இல்லாமலேயே மிகவும் அழுத்தமாக வந்திருந்தது.*

**பாலுமகேந்திரா :** என்னுடைய பாலிய நண்பன் ஒருவன் ஆற்றில் குளிக்கும்போது இறந்து போய் விட்டான். அது என்னை மிகவும் பாதித்திருந்தது. அந்த உணர்வுகளைத்தான் நான் அதில் பிரதிபலித்திருந்தேன்.

? *தமிழ் சினிமா கதாநாயகர்களுக்கு என்று ஒரு பிம்பம் இருக்கிறது. நீங்கள் அந்தத் தோற்றத்திலிருந்து மாறுபட்டிருந்த பிரதாப் போத்தனைக் கதாநாயகனாக மூடுபனியில் நடிக்க வைத்தீர்கள். அப்போதிருந்த கதாநாயகர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட அசட்டுத்தனமான தோற்றம் கொண்ட ஒருவர். அப்படிச் செய்ய வேண்டும் என்று உங்களுக்கு ஏன் தோன்றியது?*

**பாலுமகேந்திரா :** மூடுபனியில் அவருடைய பாத்திரத்தை அசட்டுத்தனம் என்று சொல்வதைவிட மனோவியாதி என்று சொல்வது சரியாக இருக்கும். அழியாத கோலங்களில் அவர் ஒரு சாமான்ய பாத்திரம்தான். அந்தக் கால படித்த, ஒரு சராசரி இளைஞனாக நடிக்க அவருடைய தோற்றம் எனக்குப் பொருத்தமாகப்பட்டது.

*? அதுபோல் அர்ச்சனா போன்ற ஒரு கறுப்புப் பெண்ணைக் கதாநாயகி யாக்கியது.*

**பாலுமகேந்திரா :** எனக்குக் கறுத்த பெண்களைப் பிடிக்கும். அது ஒரு காரணமாக இருக்கலாம்.

*? பசுமையான அல்லது பனிமூட்டமான ஊட்டி போன்ற ஒரு பகுதிதான் பெரும்பா லும் உங்கள் படங்களில் வருகிறது. இது ஒரு குற்றச்சாட்டு இல்லை. ஏன் அப்படிப் பட்ட இடங்கள் மட்டுமே உங்களை வசீகரிக்கக்கூடியதாக இருக்கின்றன?*

**பாலுமகேந்திரா :** என்னுடைய கதைகளுக்கு ஏற்ற ஒரு இடத்தைத்தான் தேர்வு செய் கிறேன். அது வெறுமனே எனக்கு ஒரு இடம் மட்டும் இல்லை. அது ஒரு பாத்திரம். அந்த இடத்தைத் தவிர வேறு எந்த இடத்தில் கதை சொல்லப்பட்டாலும் அதற்கு நான் எதிர்பார்க்கிற அழுத்தம் கிடைக்காது. வெயில், மப்பும் மந்தாரமுமான பனி, மழை, கணத்துக்குக்கணம் மாறுகிற அதன் தன்மை என்று இயற்கையினுடைய சகல பரிமா ணங்களும் எனக்குப் பிடிக்கும். காட்சிக்குத் தகுந்த மாதிரி நான் இயற்கையைப் பயன் படுத்துகிறேன். அழகாக இருக்கிறது என்பதுக்காக ஒரு நாளும் நான் இயற்கையைப் பயன்படுத்துவதில்லை. இயற்கையின் மாறுபட்ட தோற்றங்கள், தருணங்கள், காலநிலை கள் மனித வாழ்க்கையுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கிறது. மனிதனின் சிந்தனை யையும் அது பாதிக்கிறது.

*? ஒருவேளை நீங்கள் பிறந்து வளர்ந்த மட்டக்களப்பு சூழலை அதற்கு ஒரு காரணம் என்று எடுத்துக்கொள்ளலாமா?*

**பாலுமகேந்திரா :** இருக்கலாம். நிச்சயமாக நாம் வளர்ந்த சூழல், படித்த பள்ளிக்கூ டம், இளைய வயது நண்பர்கள், பெற்றோர்கள், அமிர்தகழி என்ற என்னுடைய ஊர் மிகவும் அழகான ஒரு கிராமம். ஸ்ரீலங்காவின் கிழக்கு கடற்கரையோரம் மட்டகளப் பில் அமைந்திருக்கிறது. இன்னொரு பக்கம் காடும் நிறைய பசுமாடுகளும்.

*? படப்பிடிப்பைத் தொடங்கிய பிறகு அதன் போக்கில் கதையில் சில மாற்றங்கள் செய்யவேண்டும் என்று உங்கள் உள்ளுணர்வு சொன்னால் அதற்குச் செவி சாய்ப்பீர் களா அல்லது அமெரிக்க இயக்குநர்கள் போல் எழுதப்பட்ட திரைக்கதையை மாற்ற மாட்டேன் என்று அடம் பிடிப்பீர்களா?*

**பாலுமகேந்திரா :** அது அந்தக் கதையையும் சூழலையும் பொறுத்தது. வீடு படப் பிடிப்பைத் தொடங்கியபோது திரைக்கதையில் மழை இல்லை. படப்பிடிப்பு ஆரம் பித்ததும் புயல் சின்னம் காரணமாக 13 நாட்கள் சென்னையில் தொடர்ந்து மழை

பெய்தது. அப்போது இந்த மழையைக்கூட உபயோகப்படுத்திக் கொள்ளலாமே என்று எனக்குப் பட்டது. உடனே படமெடுத்தோம். அப்புறம் படம் முடிந்து முதல் பிரதி பார்த்தபோது மழை படத்துக்கு இன்னொரு பரிமாணத்தைக் கொடுத்ததை உணர்ந் தோம். ஒரு ஏசி அறையில் உட்கார்ந்து நான் ஒரு திரைக்கதையை உருவாக்குகிறேன். அது திரைப்படமாக உருவாகி வரும்போது பல்வேறு பரிமாணங்களை அடையக்கூடும். பிரசவ சமயத்தில் நிகழும் அந்த வலிகளுக்கு ஏற்ப அல்லது புல்லரிப்புகளுக்கு ஏற்ப சில மாற்றங்கள் தோன்றினால் நிச்சயம் செய்வேன். வீடு படத்தில் அமைந்தது போன்ற திரைக்கதையில் இல்லாத படப்பிடிப்பின்போது கிடைக்கும் அற்புதமான விஷயங் களைப் படத்தில் சேர்த்துக் கொள்ள முடியுமெனில், சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், அதனை மிகத் திறமையாகக் கையாளும் சமயோசிதப் புத்தி இயக்குநரிடம் இருக்க வேண்டும்.

**?** *மூடுபனியில் பிரதாப்பைத் தேடுகிற ஒரு காட்சியில் காமிராவும் சேர்ந்து தேடிக் கொண்டே இருக்கும். இப்போது அதுபோன்று படமாக்குவது சுலபம். நவீன தொழில் நுட்ப காமிராக்கள் வந்துவிட்டன. ஆனால் மூடுபனி வெளியான காலகட்டத்தில் இந்த வசதிகள் இல்லை. எப்படி அதனை செய்தீர்கள்?*

**பாலுமகேந்திரா :** ஸ்டெடி கேமுக்குப் பதிலாக காமிராவை என் கைகளில் பிடித்தபடி அந்த காட்சியைப் படமாக்கினேன். அது ஒரு புதிய உத்தி. ஆனால், என்ன உத்தியாக இருந்தாலும் அது கதையினுடைய தேவையையொட்டிதான் இருக்கவேண்டும். ஒரு உத்தியை உபயோகப்படுத்த வேண்டும் என்பதுக்காக ஒரு காட்சி அல்லது சம்பவத்தை அல்லது ஒரு முழு திரைக்கதையையே உருவாக்குவதுடன் எனக்கு உடன்பாடில்லை. அது செருப்புக்காகக் கால் அளவை மாற்றிக்கொள்வது போன்றது. சமீபத்தில் பல திரைப்படங்கள் அப்படி வந்திருக்கிறது. கதைதான் உத்தியைத் தீர்மானிக்கும் சக்தி யாக இருக்கவேண்டும். அப்போதுதான் அது இயல்பாக அமையும். நவீனம் படைப்பு ரீதியாக உபயோகப்படுத்தப்படும்போது அது புதுமையாகவும் நன்றாகவும் இருக்கிறது. மாறாக நவீன தொழில்நுட்ப வசதிகள் இருக்கிறது என்பதுக்காகவே அவற்றைப் பயன் படுத்துவது குரங்கு கையில் கிடைத்த பூமாலை கதையாகத்தான் முடியும். இலக்கி யத்துக்கும் இது பொருந்தும்.

**?** *பொதுவாக ஒரு தமிழ்ச் சினிமா பார்வையாளன் உங்களைப் பற்றி பேசும்போது மூன்றாம் பிறை இயக்குநர் என்றுதான் உங்களை இனம் கண்டுகொள்கிறான். வீடு, சந் தியாராகம் பற்றி கொஞ்சம் விவரமானவர்களுக்கு மட்டும்தான் தெரிந்திருக்கிறது. சமீ பத்தில் எப்போதாவது மூன்றாம் பிறையைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்ததா?*

**பாலுமகேந்திரா :** ஒரு வருடத்துக்கு முன்பு டிவிடி பிரிண்ட் எப்படி வந்திருக்கிறது என்று பார்ப்பதுக்காகப் பார்த்தேன்.

? *அப்போது எப்படி உணர்ந்தீர்கள்?*

**பாலுமகேந்திரா :** எப்போதுமே என்னுடைய படங்களைத் திருப்பிப் பார்க்கிறபோது, முதலில் எனக்குப் பயம்தான் ஏற்படுகிறது. கதைநேரத்தைப் பார்க்கிறபோதும் முதலில் பயத்தைதான் உணர்கிறேன். இதுமாதிரி எல்லாம் மீண்டும் நம்மால் பண்ணமுடியுமா என்பதுதான் அந்தப் பயம். எல்லாப் படைப்பாளிகளுக்கும் அந்தப் பயம் இருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

? *படப்பிடிப்புத் தளங்களில் ஒரு ஒளிப்பதிவாளராக, இயக்குநராக உங்களின் பாணி என்னவாக இருக்கிறது?*

**பாலுமகேந்திரா :** ஒளிப்பதிவைப் பொறுத்தவரைக்கும் பார்வையாளனுக்கு இக்காட்சி பல விளக்குகள் உபயோகித்து எடுக்கப்பட்டது என்று தெரியக்கூடாது என்ற கருத்தைத்தான், தொடக்ககாலம் முதல் இன்றுவரைக்கும் வைத்திருக்கிறேன். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் என்ன இயற்கை வெளிச்சம் இருந்ததோ அதனை மட்டும் உபயோகித்து ஒளிப்பதிவு செய்திருக்கிறார் என்று பார்வையாளனுக்கு ஒரு சந்தேகம் வர வேண்டும். நான் ஒரு போட்டோகிராபராக இருப்பதால் காட்சிப்படுத்துவது எனக்குச் சுலபமாக இருக்கிறது. திரைக்கதை எழுதும்போதே ஒரு கதாபாத்திரத்தின் அசைவுகளை எனக்குள் நான் தீர்மானித்துக் கொள்வேன். நான் தெளிவாக இருப்பதால் நடிகர்களிடம் என்னுடைய எண்ணம் என்ன என்பதை என்னால் சொல்லமுடிகிறது. தேவைப்பட்டால் வசனம் பேசி நடித்தும் என்னால் காண்பிக்கமுடியும்.

? *உறவுகளும் அது சம்பந்தப்பட்ட சிக்கல்களும் தான் உங்களுடைய பெரும்பாலான படங்கள். சமூக அக்கறை சார்ந்து நீங்கள் மிக குறைவாகத்தான் செயல்பட்டிருக்கிறீர்கள்.*

**பாலுமகேந்திரா :** அதற்கு என்னுடைய தனிப்பட்ட பர்சனாலிட்டி ஒரு காரணமாக இருந்திருக்கலாம். நான் அறிவுபூர்வமாக இல்லாமல் முழுக்க முழுக்க உணர்வு ரீதியாக வாழ்ந்து வருபவன். வீடு, சந்தியாராகம் இரண்டு படங்களையும் மட்டும்தான் என்னால் நீங்கள் குறிப்பிடும் சமூகப் பிரக்ஞையுடன் எடுக்கமுடிந்தது. இது ஒருபக்கம் இருக்க, என்னுடைய மற்ற படங்களில் சமூக விமர்சனம் இல்லை என்பதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. மறுபடியும் படத்தின் முடிவில் ஆண் பெண்ணிடம் வந்து, நான் திருந்திவிட்டேன். வா, இனி நாம் சேர்ந்து வாழலாம் என்கிறான். அவள் திரும்பி கேட்கிறாள். இதே விஷயத்தை நான் பண்ணிவிட்டு, இன்னொருத்தனோடு குடித்தனம் நடத்திவிட்டு வந்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா. இந்த முடிவை சமூகத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை என்று நீங்கள் எப்படி சொல்லமுடியும்.

இந்தக் கேள்வி கோடானகோடி பெண்கள் தவறு செய்கிற ஆண்களிடத்தில் கேட்க நினைத்துக் கேட்காமல் விட்ட கேள்வி. அரவிந்தசாமி போன்ற மிகவும் அழகான ஒரு இளைஞன் அவளைக் கட்டிக்கிறேன் என்று சொல்கிறான். அவள் அவனை நிராகரிக் கிறாள். தோற்றுப்போகும் ஒரு பெண்ணுக்கு இன்னொரு ஆண்தான் பரிகாரம் அல்ல. அவன் இல்லாமலேயே அவளால் வாழமுடியும் என்கிற விஷயம் அதில் இருக்கிறது.

**?** *நீங்கள், மகேந்திரன், பாரதிராஜா மூன்று பேரும் வந்தபோது தமிழ் சினிமாவில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. அப்புறம் மீண்டும் பழைய இடத்துக்கே தமிழ் சினிமா திரும்பி விட்டது. அதற்குக் காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?*

**பாலுமகேந்திரா :** அது காலத்துடைய கட்டாயமாகக்கூட இருக்கலாம். அந்தக் கால கட்டத்தில் ஸ்டுடியோ உரிமையாளர்கள்தான் தயாரிப்பாளர்களாக இருந்தார்கள். அவர் களுக்குத் தாங்கள் தயாரிக்கும் படம் தங்களைப் பெருமைப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. வியாபாரம் அதற்கு அடுத்த நிலையில்தான் இருந்தது. அப்புறம் ஸ்டுடியோ முதலாளிகள் போய் உதிரித் தயாரிப்பாளர்கள் வரத் தொடங்கினார்கள். பின்னாடி விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள் ஆகியோரது ஆதிக்கமும், திரைப்படத் துறைக்குள் வலுக்கத் தொடங்கியது. பத்து ரூபாய் போட்டு, நூறு ரூபாய் எடுப்பது என்பது போய், 10 ரூபாய் போட்டு, 1,00,000 ரூபாய் எடுக்கவேண்டும் என்ற கணக்கு வந்தது. இப்போது அந்த நிலையும் மாறி விட்டது. கோடிக்கணக்கில் செலவழித்து பல கோடிகள் சம்பாதிப்பதுமான இப்போதைய கணக்கு வியாபார ரீதியாகப் பார்க்கும்போதுகூட இதனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சமீபத்தில் ஏழரை கோடி செலவழித்து எடுக்கப்பட்ட ஒரு படம் படு தோல்வி அடைந்தது. அதற்கு ஏழு படங்கள் எடுக்கலாம். நான்கு படங்கள் ஏமாற்றினால் கூட மூன்று உங்களைக் காப்பாற்றிவிடும். இன்றைய சினிமா தயாரிப்பை ஆரோக்கியம் இல்லாத ஒரு சூழலாகத்தான் நான் பார்க்கிறேன். பைத்தியக்காரத்தனம்.

**?** *தமிழில் மாற்று சினிமா முயற்சிகள் குறித்த உங்கள் அபிப்பிராயம்?*

**பாலுமகேந்திரா :** அனேகமாக இங்கு எடுக்கப்படும் முயற்சிகள் எல்லாமே, அரை குறை அல்லது அரைவேக்காட்டுத்தனமானவைகள் தான். மாற்று சினிமா என்னும் போது, அவை அவற்றுக்கான முழுவீச்சோடு வரவேண்டும். அது இங்குச் சாத்திய மில்லை. இது ஒரு பக்கம் இருக்க, கலைப்படங்கள் என்கிற பதத்துடனும் எனக்கு உடன் பாடு இல்லை. நல்ல சினிமா, நேர்மையான சினிமா, மோசமான சினிமா என்ற பிரிவுகள் தான் இருக்கமுடியும்.

***? தற்கால உலக சினிமா பற்றிய உங்களது அவதானிப்பு என்னவாக இருக்கிறது?***

**பாலுமகேந்திரா :** உலக அளவில் அனைவருமே ஒரு பிரமிப்போடு பார்த்துக்கொண்டிருப்பது இரானிய சினிமாக்களைத்தான். நான் அவற்றைத் தொடர்ந்து பார்த்துவருகிறேன். மிகப் பெரிய உயரத்துக்கு அவர்கள் சினிமாவைக் கொண்டு போயிருக்கிறார்கள். சினிமா எப்படி இருக்கவேண்டும் என்பதுக்கான ஒரு முன்மாதிரியையும் உருவாக்கியுள்ளார்கள். மதக்கொள்கைகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் ஓர் இனத்திடம் இருந்து அல்லது நாட்டிலிருந்து இந்தப் படங்கள் சாத்தியப்பட்டிருப்பது ஆச்சர்யமான ஒன்றுதான். அங்குள்ள இயக்குநர்களிடம் நான் பேசியிருக்கிறேன். வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்ட சிறுசிறு விஷயங்களை எடுத்து அவர்கள் படம் பண்ணுகிறார்கள். இன்று நாம் பின்பற்றுவதற்கு மிகச் சரியான முன்மாதிரிகள் அவர்கள்தான்.

**சந்திப்பு : அஜயன்பாலா, தளவாய் சுந்தரம்**



- பாலுமகேந்திராவின் சினிமாத்துறை அனுபவத்தை விவாதித்து அனுபவக் குறிப்பாகத் தருக.
- ஒரு சினிமா நடிகனிடம் நேர்காணல் காண்பதற்கான வினாநிரல் தயாரித்து நேர்காணவும்.

## அலகு 3

# தொன்மை

மொழி என்பது மக்கள் தம் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் அரியதோர் ஊடகமாகும். உலகில் பல்வேறு மொழிகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. மொழி எப்போது எங்கே தோன்றியதென்று அறுதியிட்டுக் கூறமுடியாது. உலகின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியின் தொன்மை, செவ்வியல் தகுதி, தனித்தன்மைகள், பல்வேறு மொழிக்கூறுகள், தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள் தமிழ்மொழியைக் கையாளும் விதம் போன்றவற்றை எடுத்துரைப்பதே இவ்வலகின் நோக்கம்.

**கற்றல் அடைவுகள்.**

- மொழியின் பல்வேறு அமைப்புகளையும் கூறுகளையும் அறிந்துகொள்ளுதல்.
- அவற்றைச் சரியாகப் பயன்படுத்தவும் மேம்படுத்தவும் அறிதல்.

# மொழி

மொழி, மொழியப்படுவது, பேசப்படுவது, இயக்கமுடையது, இயங்குவது. கருத்துப் புலப்பாட்டுக் கருவியாக விளங்குவது, தகவல்களை எடுத்துச் சொல்வது. அவற்றைத் தக்கவைத்துக் கொள்வது. எழுதப்படுவதும் கூட. ஓவியமாகவும், குறிகளாலும் வரையப்பட்ட அதன் பண்டைய நிலை வளர்ந்து முதிர்ந்து நெடுங்கணக்காக மாறி வரையறையும் பெற்றது. மொழி ஒன்றல்ல, பல. எனினும் அவற்றிடையே உறவும் தொடர்பும் உண்டு. உருவ வேறு பாடிருப்பினும் எழுத்தின் ஒலி, ஒலிப்பில் ஒற்றுமை உண்டு. மொழிக் கூறு களிடையேயும் ஒப்புமைகள் காணப்படுகின்றன. சான்றாக அகர ஒலி எல்லா மொழிகளிலும் உண்டு. தனித்தியங்கும் உயிரொலிகள் எல்லா மொழிகளி லும் உண்டு. பெயரும் எண்ணிக்கையும் வேறுபடலாம். அவ்வளவே. அவ் வாறே பெயரும் வினையும், வேற்றுமையும், அடையும், காலங்காட்டும் கூறுகளும், பன்மையும், எண்குறிகளும் எல்லா மொழிகளிலும் உண்டு.

வெறும் ஒலிகள் அல்ல மொழி. பொருள் பொதிந்த ஒலிகளின் கூட்டம் அது. அடிப்படைப் பொருளொலிகள் சிலவேயாயினும் அவற்றைப் பல்வ கையாகக் கலந்தும், சேர்த்தும், நிரல்படுத்தியும் காலத்தின் தேவைக்கேற்ப, வாழ்வியலின் வளர்ச்சிக்கேற்ப, புதிய புதிய கருத்தாக்கங்களைப் புலப் படுத்தப் பயன்கொள்ள முடிகிற ஒரு இணையதளம் அது. மனிதச் சிந்தனை யின் முதன்மைப் படைப்பான முதற் படைப்பான – முதுபடைப்பான மொழியே பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் கொள்கலமாகத் தொடர்கிறது.

ஒலிப்பு மொழிக்கு முதன்மையானது நா; மற்றும் பிற பேச்சுறுப்புகள்; உள் ளெழும் காற்று; ஒலிப்பைக் கேட்கும் காதுகள். அதனைக் கேட்கமுடியாத– காது கேளாதோருக்கான மொழி வேறுவகையினது. சைகைகள் நிரம்பியது. எழுத்து மொழி, ஓவிய/சித்திர மொழி, குறிகளாலான மொழி என்பன பார் வையுள்ளோருக்குப் பயன்படக் கூடியது. பார்வையற்றவருக்குப் பிரெயில் லிபி, மூன்லிபி போன்று ஸ்பரிசம் வழி – உற்றுணர்வு வாயிலாகப் பெறப்ப படுமாறு எழுத்து மொழி மாற்றியமைக்கப்படுகிறது. இவ்வாறமைவனவெல் லாம் மொழியின் வெளிப்பாடுகளே; புலப்பாடுகளே.


மொழி பேசுதல், மொழியறிவு, மொழித்திறன் என்பன மொழியின் சில பரி மாணங்களாகும். மொழி பேசுதல் என்பதில் இரு நிலைகள் அமைகின்றன.

போலச் செய்து பேசுதல் ஒன்று. கற்றுப் பேசுதல் மற்றொன்று. பெற்றோரும் உடன் பிறப்பும் உறவும் இல்லத்தின் குடும்பச் சூழலில் பேசுவதைக் கேட்டுக் கேட்டு, குழந்தை, தூண்டப்பட்டுப் பேச முயல்வது போலச் செய்தலாக அமையும். மாணவனாக, ஒரு மொழி, புதுமொழி கற்றல் பின்வகையினது. மொழிச் சூழல் மாறியவிடத்து, புதிய மொழியைக் கேட்டுக்கேட்டுப் பேசல் என்பது குழந்தையல்லாத பிற பருவத்தினரிடமும் அமையும் வாய்ப்பும் குடியேற்ற, வியாபார, வெளியூர்ப் பயண, சுற்றுலாச்சூழலில் ஏற்படக்கூடும். தெரிந்ததனை – தெரிந்த மொழியினை அடிப்படையாகக் கொண்டு தெரியாததை – தெரிய முயல்வதைப் புரிய, பேச முயல்தல் என்பது இங்கமைவதால், இது குழந்தையின் மொழிப் பழக்கத்திலிருந்து வேறுபட்டது.

சிந்தனையின் வெளிப்பாடாகிய மொழியே சிந்தனையையும் தூண்டுகிறது. இதனால், கருத்துகளின் சட்டகமாகிய – கூடாகிய மொழியைப் பற்றிய கல்வி தோன்றி மேம்படுகிறது. அது மொழியறிவு ஆகிறது. மொழித் தோற்றக் கொள்கைகள், மொழிக் குடும்பங்கள், மொழி வகைகள், உலக மொழிகள், மொழிப்பரவல், மொழி வளர்ச்சி பற்றிய கோட்பாடுகள், தேவைக்கேற்ப வளைந்தும் விரிந்தும் கொடுக்கும் மொழி யின் திறம், பிற மொழி யுடன் இணையும்போதும் கலக் கும்போதும் நெருங்கும் போதும் நீங்கும் போது முள்ள அதன் போக்கு, தனித்து நிற்கும் ஆற்றல், தன்னை இழந்து – தன்மை இழந்து வேற்றுருக் கொள்ளும் பாங்கு, ஒலிப்பிலும் (Pronunciation), எழுத்து வருகையிலும் (Spelling) உள்ள மாற்றம், பழையன கழிதலுக்கும் புதியன புகுதலுக்கும் இடங்கொடுத்தல், தனித்தன்மை இழக்காமை – என மொழியின், ஒரு மொழியின், பல மொழிகளின் இயல்பை – இயல்புகளை ஆய்ந்து கண்ட முடிவுகள் மொழியறிவில் இடம்பெறும். இலக்கண ஆசிரியர் மொழியறிவு மிக்கவர். மொழியியல் ஆய்வறிஞரும் இத்தகையவரே. அழிந்துபோன மொழிகளும், இழந்துபோன மொழிகளும், செவ்வியல் மொழிகளும், பேச்சு



மொழிகளும்கூட ஆய்வுக்குரியதாகி மொழியறிவு வழங்குகின்றன. எழுத்தும் இலக் கணமுமில்லா – எழுதப்படாப் பேச்சு மொழிகட்கு அவை வரையப்பெறுவதும் மொழியறிவின் விளைவாலாகும். மொழியறிவிலிருந்து கிளைத்து மொழியாய்வு, காலத்தின் தேவைக்கேற்ப மேம்பாடுகளுக்குரிய கருவிகளை மொழிக்கு வழங்கிடச் செய்கிறது. கல்விக்கும் பரப்புதலுக்கும் நேராக மொழியை எளிமைப்படுத்துதல், தரப்படுத்துதல், ஒருமை(ப்பாடு) உருவாக்குதல், குழப்பம் – சிக்கல் நீக்கித் தெளிவு வழங்குதல் என்பன இவற்றுள் சிலவாகும்.


தமிழ் கல்வெட்டு

எந்தவொரு மொழியாயினும் அதனைக் கருத்துப் புலப்பாட்டிற்காகக் கையாளுவதில் தேர்ச்சி வெளிப்படுத்துவது மொழித்திறமாகும். எப்படிப் பேசுவது; இடம், காலம், சூழல், கேட்போர்க்கேற்ப எவ்வாறு பேச்சை முன்வைப்பது; எக்கருத்தை எவ்வாறு எச்சொற்களால் எடுத்தியம்புவது; கேட்போரை ஈர்க்குமாறு, கவனத்தைத் தன்பால், தான் கூறும் பொருளின் நேராய்த் திருப்பி நிறுத்துமாறு எவ்வண்ணம் சொல்லாடுவது என்ற அறிதிறன் இம்மொழித் திறமாகும். பயன்பாட்டு விளைவு தருவதாக இது அமையும். சொல் வலை வேட்டுவனாக இதனால் அமைய முடியும். கேட்பார்ப்பிணித்து, அவர் வேணவா கொள்ளுமாறு பேச்சு அமைதல் இம்மொழித் திறனாம்.

மொழி எனும் ஒருமையிருப்பினும், மொழிகள் பலவகையினதாக அமையும் பாங்கின. ஒவ்வொரு மொழியிலும் கூட உள்வகைமை உண்டு. மொழியின் ஆளுகையும், பயன்பாடும் பேசுவோரின் தராதரமும் தேவையும், கையாளும் சூழலும் இவ்வகைமைக்குக் காரணமாம். பேச்சுமொழி, தரமொழி (Standard), இலக்கியமொழி என மூன்று அடிப்படை நிலைகள் காண முடியும். பேச்சு மொழியிலும், கிராமத்தானின் பேச்சும், கல்லாதவனின் பேச்சும், வியாபாரியின் பேச்சும், தரகனின் பேச்சும் வெவ்வேறு நடைகொள்ளும். கல்விச் சூழலும், அரங்கப் பேச்சும், வல்லுநர் கலந்துரையும் போன்றன தரமொழிப்பாங்கு புலப்படுத்தும். செவ்விலக்கியங்கள், பலதுறைப் பாடநூல்கள், அறிவியல் கையேடுகள், தொழில்நுட்ப ஆய்வேடுகள், பொருட்கட்டுரைகள் என்பன பயன்கொள்ளும் மொழியை இலக்கிய மொழி (Literary Language) எனப் பகுக்கலாம். பேச்சு, இயல்பு மொழியாக,

இயற்கை மொழியாக அமைகிறதென்றால், இலக்கியமொழி, செவ்வியாக் கப்பட்டதாக, செய்யப்பட்டதாக, ஆக்கமாக, செயற்கைத் தன்மை கொண்ட தாக அமையும். மொழி மேம்பாடு, மொழி வளம், மொழி வளர்ச்சி என இதனை அணுகலாம்.

சமய சித்தாந்தங்கள் எழுதப்படும் மொழி நடையும், சட்ட நுணுக்கங்கள் வரையப்படும் முறையும் ஒன்றல்ல; மொழி ஒன்றாயினும் நடையும் முறை யும் வேறுபட்டனவாம். வணிக அறிக்கையும், மருத்துவக் குறிப்பும், பொறி யியல் வரைவும் இவ்வாறே மொழியில் நடைநெறி வேறுபாடு கொள்ளவே செய்கின்றன. ஒரே பஞ்சு பல்வகையான இழையும் ஆடையும் ஆக்குவது போல ஒரே மொழி – ஒரே எழுத்துகள் – ஒரே சொற்குவைகள் பல்வேறு புலப்பாடுகளை வழங்க வல்லமை கொள்வது இது.

மனிதனின் நடை வேறு, குதிரையின் நடை வேறு, யானையின் நடைவேறு. ஆனால் பயன்/ விளைவு / நிகழ்வு ஒன்றுதான். அதாவது தூரம் கடத்தல், செலவு. மொழியின் பயன்பாடும் இதுதான். கருத்தைக் கடத்துகிறது. ஒருவ ரிடமிருந்து மற்றொன்றிற்கு – மற்றொருவருக்குக் கொண்டு செல்கிறது. வாய்ப் புக்கேற்ப வெவ்வேறு நடையில்! அட்டை ஊருகிறது; புழு நெளிகிறது; குழந்தை தவழ்கிறது; பறவை பறக்கிறது. எல்லாம் தூரம் கடந்து செல்வ தற்கே. மனிதச் சிந்தனையோட்டம் மொழியை இவ்வாறெல்லாம் பயன் கொள்ளச் செய்கிறது. மெதுவாக, விரைவாக, வாயுவேகத்தில், மனோவே கத்தில், (நாம்) மொழியை எப்படிக் கையாள்கிறோம்? பறவைச் சிறகாகவா? மொழியால் ஆகாயத்தில் பந்தல் போட முடியும். அருவமானதையும் உருவம்போல் விளக்கி வருணிக்க முடியும். கண்முன் இல்லாதவற்றையும் சொல்லோவியமாக்கி மனக்கண்ணில் காட்ட முடியும் – உள்ளத்திரையில் வரைய முடியும் – எண்ணத் தளத்தில் பதிக்க முடியும். காலத்தாலும் இடத் தாலும் கடந்து நீங்கியனவற்றையும் அருகாமையில் கொணர்ந்து அண்மி வைக்க இயலும்; எங்கெங்கோ எடுத்துச் செல்லவும் இட்டுச் செல்லவும் கூடும். கற்பகத்தின் பூங்கொம்போ . . . என்று சொன்னால் தேவார காலத் திற்குப் போக முடிகிறது. கற்பூரம் நாறுமோ . . . என்றால் ஆண்டாளாக மாற இயல்கிறது. தேரா மன்னா . . . என்றாலோ பாண்டியன் அரசவைக் குள் நுழைய முடிகிறது. இது மொழியின் ஆற்றல்; வன்மை; வல்லமை; பரிமாணம். மாங்காய் என்றால் வாயூறுகிறது. தேர்வு என்றால் நெஞ்சு பட படக்கிறது. பணம் என்றால் வாய் பிளக்கிறது. காதல் என்றால் உள்ளம்

உருகுகிறது. மொழியே அனுபவமாகுவது – ஆக்குவது இது. மாட்டிற்கு அசைபோடப் புல்; மனிதனுக்கு மெல்ல அவல்தான் வேண்டுமென்பதில்லை. சொல் போதும். சுவைத்து அசைபோட இடம் தருவது மொழி; அதன் ஒவ் வொரு கூறும்.

மொழி, சிக்கல் ஏற்படுத்தலாம்; சிக்கல் அவிழ்க்கவும் செய்யலாம். வாய்ப் பேச்சுத் தகராறால் சிக்கல் ஏற்படும்போது மொழி ஆயுதமாகும். கலந்து ரையால் சிக்கல் நீங்கும்போது அது கருவியாகும். தருக்கமும் மொழியால் முடியும். திறனாய்வும் மொழியால் ஆகும். எச்சரிக்கவும், திட்டவும், எரிந்து விழவும் கூட அது ஊடுபொருளாகும்.

காற்றுப் போன்றது மொழி. காசில்லாமல் கிடைப்பது. ஆனால் இன்றியமை யாதது. உயிர், மூச்சு. வாழ்வு வழங்குகிறது. அது இன்றேல் ஆள் இல்லை. ஆளுமை இல்லை.

ஆக்க வல்லது மொழி. அழிக்கவும் வல்லது. அது நெருப்புப் போன்றது. அணுசக்தி போன்றது. எவ்வாறதைக் கையாளுகிறோமோ அதற்கேற்ப அது அத்தகு விளைவுகளை, பின் விளைவுகளைத் தரும் வல்லமையுடையது. நெருப்பு நல்ல வேலைக்காரன், மோசமான எஜமான் என்பது பழகுமொழி. அணுத்திரள் ஒலியும் அணுவாற்றலும் ஏறுக்குமாறாகப் போனால் நாசம் நிச்சயம். தானழியுமோ இல்லையோ – சார்ந்தாரை, சேர்ந்தாரை அழிக்கும். மனிதனுக்கு வெறி. மொழிக்கு இல்லை வெறி.

தாய்மொழி, தந்தைமொழி போன்ற கோட்பாடுகள், பன்மொழிச் சூழலில் இடம்பெயர்கின்றன. மொழிபெயர்தேயக் குடியேற்றத்தினரின் குழந்தைகள், கல்விமொழியாகப் பிறிதொன்றை ஏற்ற மாணவர் போன்றோர், தலைமு றைகள் தாண்டியபின், பெயருக்கே தம் குழவிப்பருவ மொழியை, மூதாதை யர் மொழியைத் தக்கவைத்துக் கொள்கின்றனர். அதை அறிவதில்லை. அதில் திறன் கொள்வதுமில்லை. மெல்ல மெல்ல மொழி மறைய – மறக் கப்படக் கூடும் – அவர்களைப் பொறுத்தாவது.

பண்பாடும் நாகரிகமுமுள்ள மக்கள் நிறைந்த, அறிவியல் வளர்ச்சி மிகுந்த, இலக்கிய வளன் ஓங்கிய ஒரு உலகை, மொழியில்லாததாகக் கற்பனை கூடச் செய்ய முடியாது. உலகை உயிரோடு – உயிர்ப்போடு வைத்திருக்கிற மொழி இயங்குகிறது; இயக்குகிறது.

பேசும் திறனும் ஒருவரோடொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள மொழியைப் பயன்கொள்வதும் உலகில் எல்லா மனிதரிடமும் இயல்பாக அமைந்துள்ளது என்ற எண்ணத்தால் பெரும்பாலானவர்கள் இவற்றில் கருத்துச் செலுத்துவதில்லை. சாதாரணமாக எல்லா மனிதராலும் சாப்பிட வும், தூங்கவும், நடக்கவும் முடிவது போலத்தான் பேசுவதும் என நினைத் துவிடுதல் இயல்பு. இது ஓரளவு சரிதான். குழவிப் பருவத்திற்குப்பின், இயல் பான உடல்நிலையும் மனநிலையுமுள்ள எல்லோராலும் பேச இயலும். இத னாலேயே மனிதன் 'பேசும் விலங்கு' எனச் சுட்டப்படுகின்றான். ஆனால் பிற உயிரினங்களும் ஒலிப்பால் தம்முள் கருத்துப்பரிமாற்றம் செய்கின்றன. எனினும் அவை 'மொழி' என்று பெயர் பெறுவதில்லை. தேனீக்கள், டால் பின் மீன் போன்றனவற்றின் இத்தகு 'பேச்சு' வெளிப்பாடுகள் பற்றி ஆய்வு பல எழுந்துள்ளன. எனினும் அவற்றின் நிலை, மனித மொழியின் செறி வையோ, நெகிழ்வையோ, மேன்மையையோ எந்நிலையிலும் எட்டத்தக் கன அல்ல.

உண்ணுதல், உறங்குதல், நடத்தல் போன்றமையும் இயல்பான மனிதத் திறங் கள், மனிதனுக்கு அவன் பெற்றோரின் மரபணுக்கள் வழி வருகின்றன. மொழி இவ்வாறு பெறப்படுவதில்லை. புரிந்து கொள்ளுதல் மற்றும் பேச் சொலிகளை உருவாக்கும் திறம் மட்டுமே இவ்வாறு பெறப்பட்டு வருகின் றன. அதாவது ஒருவர் பேசும் குறிப்பிட்ட மொழி அல்லது மொழிகள், மர பணுப்பாரம்பரியத்தாலல்ல, அம்மனிதர் வாழும் சமூகச் சூழலின் பண்பாட்டுப் பாரம்பரியத்தால் மட்டுமே அவருக்குக் கிடைக்கின்றன என்பதே உண்மை. இதனால் மொழி தானே பெறப்படுவதில்லை; கற்கப்படுகிறது என நிறுவ லாம். இதனால் மானுடவியலாளர் (Anthropologists), மொழியையும், பண் பாடு காரணமாக வரும் நடத்தையோடு இணைக்கின்றனர்.

மனிதன் குழந்தையாகப் பிறக்கும் போதே அவனிதயம் துடிக்கிறது; குருதி ஓட்டம் அமைகிறது; மூச்சுக் காற்று இயங்குகிறது. ஆனால், குழந்தை வளர்ந்து பள்ளி அல்லது கல்லூரிப் பருவத்தில் உடலியல் பற்றிக் கற்பதின் வாயி லாக மட்டுமே குருதி ஓட்டம் என்றால் என்ன, இதயத்துடிப்பு எப்படி அமை கிறது, மூச்சின் செயல்பாடு எவ்வாறு காணப்படுகிறது என்பன பற்றித் தெரிந்து கொண்டு அவை பற்றிய அறிவு பெறுகிறான். மொழியும், குழந்தை பிறந்த சூழலிலேயே அதனைச் சுற்றி ஒலித்து, குழவிப் பருவம் முதலே அதனால் புரிந்து கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்பெற்றுவரினும், மொழி குறித்த கல்வி வரும் போதே தெளிவுகள் கிடைக்கின்றன.

**– முனைவர். அன்னிதாமசு**

**அன்னிதாமசு**

தமிழ் ஆங்கிலம், சமூகவியல், உளவியல் ஆகிய துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றியவர். தற்போது மத்திய செம்மொழி நிறுவனத்தில் ஆய்வறிஞராகப் பணியாற்றி வருகிறார்.

## செயல்பாடுகள்

- "மொழியால் ஆகாயத்தில் பந்தல்போட முடியும். அருவமானதையும் உருவம்போல் விளக்கி வர்ணிக்க முடியும். கண்முன் இல்லாதவற்றையும் சொல்லோவியமாக்கி மனக்கண்ணில் காட்ட முடியும்." – இக்கருத்தினைக் கலந்துரையாடித் தமிழ்மொழியின் சிறப்புகள் என்னும் தலைப்பில் கட்டுரை தயார்செய்க.

# தமிழ் விடுதூது



ஆரால் அமைத்து வணங்கறு மங்கணார்க்குப் பூசை
சமைத்து வணங்கத் தகுமோ - உமைக்கன்பர்

அர்ச்சனைபாட் டேயாமென் றாரூரர்க் காதியிலே
சொற்றமிழ் பாடுகெனச் சொன்னமையாற் - சொற்படியே

செய்தாய்நால் வேதந் திகைத்தொதுங்கப் பித்தனென்று
வைய்தாய்நீ வைதாலும் வாழ்த்தாமே - மெய்தான்

இருந்தமிழே யுன்னா லிருந்தே னிமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்.

**தூது**
96 வகையான பிரபந்தங்களுள் ஒன்று தூது. மதுரைச் சொக்கநாத கடவுளிடம் தமிழைத் தூது அனுப்புவதாகப் பாடியது தமிழ்விடு தூது.

# எது தமிழ்ச் செல்வம்?

'என்னஉங்கள் தமிழ்ச்செல்வம்?'
என்றேகேட்கும்
எதிரிகட்கே இதைப்பதிலாய்ச்
சொல்நீநண்பா!
முன்னையிங்கே பன்மொழிகள்
மண்ணின்மீது
முளைத்தாலும் மூத்தமொழி
தமிழில்உள்ள
கன்னல்நேர் இலக்கியங்கள் தனித்
தேநின்று
காட்டுகின்ற ஒளிமணிகள் ஒன்றி
ரண்டா?
மன்னியநம் வாழ்வியலின் இலக்
கணத்து
வரைபடம் 'தொல்காப்பியநூல்'
என்றேகூறு!

அறநெறிக்கே 'திருக்குறள்'தான்!
காதல்வாழ்வின்
அன்புநெறிப் பெரும்புதையல்
'அகநானூறு'!
மறக்கலங்கள் கல்வெட்டே
'புறநானூறு'!
வரலாற்றுப் பதிவேடே 'சிலம்
பாம்'!ஈகை
நெறிக்கு மணிமேகலைதான்!
மணவின்பத்தை
நேர்சிந்தாமணி யொன்றேவியப்
பாய்க் காட்டும்!
பறையறைந்து தமிழ்வேந்தர்
வீரம்ஈரம்
பக்குவமாய் மொழிவதுதான்
'பதிற்றுப்பத்து'!

விழுமியநூல் 'நாலடியார்'
ஒழுக்கச் சட்டம்!
வெற்றிக்கே 'கலிங்கத்துப்பரணி'!
நாட்டின்

### செம்மொழித் தகுதிப்பாடுகள்

- தொன்மை
- பிறமொழித் தாக்கமின்மை
- தாய்மை
- தனித்தன்மை
- இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு
- பொதுமைப் பண்பு
- நடுவுநிலைமை
- பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
- உயர்சிந்தனை
- கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
- மொழிக் கோட்பாடு

எனப் பதினொரு தகுதிப்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் முசுத்தபாவும் மொழி வல்லுநர்களும் வரையறுத்துள் ளார்கள்.

**சொல்**

எழுத்துகள் அல்லது ஒலிகள் தனித்தோ சேர்ந்தோ வந்து ஒரு பொருளைத் தருமானால் அது சொல் எனப்படும். (எ.டு) ஆ, கோ, தீ என்பவற்றில் ஓர் எழுத்து மட்டுமே வந்து பொருளைத் தந்து சொல்லாகிறது. இவ்வாறு வரும் சொற்களை ஓரெழுத்துச் சொல் எனலாம். இலக்கண நூலார் இதனை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

சொல்லைக் கிளவி, மொழி, வார்த்தை எனவும் குறிப்பிடுவர் என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இரட்டைக் கிளவி, ஒம்படைக்கிளவி, தடுமாறு கிளவி என்றெல்லாம் வரும் இடங்களில் கிளவி என்பது சொல்லைக் குறிக்கின்றது. பசு, காசு, மலர் தாமரை, பறவை, இலக்கணம் போன்ற சொற்களில் ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் வந்துள்ளன. ஒரெழுத்து சொல்லுக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகள் தருக

________, ________, ________,
________, ________, ________

இரண்டெழுத்து, மூன்றெழுத்து நான்கெழுத்துச் சொற்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

________,________,________,________

அதிகபட்சமாக எத்தனை எழுத்துச் சொற்களைக் கண்டறிந்தாய்? அது எந்தச் சொல்

________, ________, ________,
________, ________, ________

அழகுணர்த்தும் 'நளவெண்பா'!
சொல்லாட்சிக்கே
அருங்'கம்ப இராமாயண'ந்தான்
சாட்சி!
பழிகாணா வள்ளல்களின் கொடையுள்
ளத்தைப்
'பாணாற்றுப் படை'நூல்கள் படம்பிடிக்
கும்!
பழையபுகார் ஏற்றுமதிப் பெருமையெல்லாம்
'பட்டினப்பாலை' காட்டும்
அருமை என்னே?

முத்து'நந்திக் கலம்பக'மோ
தமிழுக்காக
மூச்சிழந்த மானமன்னன்
மாண்பைக் கூறும்!
தத்துவங்கள் வாழ்கடலே 'சித்தர்
பாடல்'!
'தலப்பாடல்' மண்மணத்தின்
சான்றாய்நிற்கும்!
வித்தகர்கள் 'பாரதி' 'பாவேந்தர்'
பாடல்
விழிதிறக்க வைத்ததன்றோ
தமிழர் தம்மை?
எத்தனையோ இனும்சொல்வோம்;
தோழா! கேட்டும்
இகழ்ந்துரைப்போர் 'விழி
பெற்றகுருடர்' என்போம்!

**- வேழவேந்தன்**

**வேழவேந்தன்**



இவர் 05.05.1936 இல் காரணி என்ற சிற்றூரில் பிறந்தவர். இவர் கவிஞரும் வழக்கறிஞரும் ஆவார். மு.வ.வின் மாணவர். அண்ணாவிடம் மிகுந்த ஈடுபாடுடையவர். தமிழேறு என்ற குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளார். இவரது கவிதைகள் வேழ வேந்தன் கவிதைகள் என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது. நாளைய உலகம், காவிரி, பகைக்கடல், படைப்பு, எது இன்பம் போன்ற கவிதைகளைப் படைத்துள்ளார். நெஞ்சும் நினைப்பும், நாடும் மொழியும், காதலும் கண்ணீரும், வாழ்வும் வழியும் போன்ற கவிதைகளும் இவரது கவிதை தொகுப்புக்குள் அடங்கும்.

# எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திடயாம்பெற்ற பேறு!

தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும்யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்

(இனிமைத்)

தமிழ்எங்கள் உயிர்என்ப தாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக்கிப்புவி மேலே
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ் நாடெங்கும்
இருளாம்.

தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய்வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு! - நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு!

(இனிமைத்)

- **பாரதிதாசன்**

### இருவகைச் சொற்கள்

சொற்கள் அடிப்படையில் பெயர்ச் சொல் வினைச் சொல் என இருவகைப்படும்.

### பெயர்ச்சொல்

மக்கள், நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரில்லாத பொருட்கள், இடங்கள், பண்புகள் போன்றவற்றைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

கண்ணன்,அமுதா- மக்கள் பெயர்
யானை, பாம்பு, மயில் - பிற உயிரினப்பெயர்
மலை, மரம், குளம், சூரியன்- இயற்கைப் பொருள்களின் பெயர்
வெப்பம், குளிர், அழகு, கருணை- பண்புப் பெயர்
திருவனந்தபுரம், பாலக்காடு, இடுக்கி- இடப்பெயர்
எனப் பல நிலைகளில் பெயர்ச்சொற்கள் அமையும்.

**பாரதிதாசன் (1891 - 1964)**



இயற்பெயர் கனகசுப்புரத்தினம். புதுச்சேரியில் பிறந்தார். பாண்டியன்பரிசு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு ஆகியவை இவரது நூல்களாகும். இவரது பிசிராந்தையார் என்ற நாடகநூல் சாகித்ய அக்காடமி பரிசு பெற்ற நூல்.

## செயல்பாடுகள்

- தமிழ்மொழியின் தனித்தன்மைகளை உணர்த்துமாறு கவிதை படைக்க.
- தமிழ்மொழியின் தொன்மையும் சிறப்புகளும் என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார்செய்க.
- தமிழ்மொழியைத் தவறின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்குமான வழிமுறைகளைக் குறித்து ஒரு பட்டியல் தயாரித்து அதனை அறிக்கையாக வெளியிடுக.

# மொழியியலில் ஒலியியல்

### மொழியியல்

தொல்காப்பியர் காலத்திலிருந்து தொன்றுதொட்டுத் தொடர்ந்து காலங்காலமாக வளர்ந்து வந்தது இலக்கணத்துறையாகும். இலக்கணம் மரபின் அடிப்படையில் நின்றும் மொழியின் அமைப்பு விதிகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினாலும் அவற்றிற் கான காரணங்களைக் கூறவில்லை. மொழியியல் என்பது மொழியின் இயல்பை விளக்குவதுடன் அதன் இயல்பான தன்மையினை விளக்கி வரையறை செய்கிறது. மேலும் அறிவியல் பார்வையுடன் பார்க்க முயல்கிறது. அறிவியல் அடிப்படையில் ஒன்றினைக் கூர்ந்து நோக்குகிறது. அறிதல் தன்மை கொண்டும் அதன் பின்பு ஒப்பிட்டும், ஆய்வு செய்தும் இறுதியில் மொழியியலாளர்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனர். இந்த ஆய்வு முறையில் முதன் முதலில் ஆய்வு செய்ய எண்ணியவர்கள் மேலைநாட்டினரேயாவர். அவர் வழியில்தான் தமிழ் மொழியிலும் மொழியியல் ஆய்வு நடைபெற்றது மொழியியல் அறிவால், ஒரு மொழியினைக் கற்றறிவதற்குக் காலம் என்பது மிகக் குறைவாகவே ஆகிறது.

### மொழியியல் பண்புகள்

மொழியின் இயல்பினை ஆராயும் ஒரு அரிய கலைக்கு மொழியியல் என்று பெயர். மொழியியல் துறை 19–ஆம் நூற்றாண்டுக்குப்பின் தனித்துறையாக வளர்ந்து வருகிறது. மொழியியல் என்பது மொழியின் பல்வேறு பண்புகளை விளக்குவது. இலக்கணமும் மொழியியலும் நெருங்கிய தொடர்புடையன. இலக்கண அறிவின் வளர்ச்சியே மொழியியலைத் தோற்றுவித்துள்ளது. இருந்தாலும், இன்று மொழியியலின் பரந்துபட்ட வளர்ச்சியால், இலக்கணம், மொழியியலின் ஒரு பகுதியாக அடங்கிவிட்டது. மொழியியலானது இலக்கணத்தையும் ஒரு பகுதியாகக் கொண்டு வளர்ந்துவிட்டது. ஒரு பார்வையில் இலக்கணம் தாய் என்கின்ற பொழுது மொழியியல் சேய் என்று எண்ணப்படுகிறது. ஆனால் என்ன தவம் செய்தானோ என்று உலகமெலாம் போற்றும்படி சேய் இன்று உலகில் முந்தி நிற்கிறாள். இன்று மொழியியல் பெரிய ஆலமரமாகக் காட்சி தருகிறது.

### மொழியியல் பிரிவுகள்

மொழியியல் மொழியின் இயல்பை வரையறைப்படுத்துவதுடன் அதனை அறிவியல் கண்கொண்டு விளக்குகிறது. மொழியினைக் கூர்ந்து நோக்கி அறிதல், ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளல், இறுதியில் ஒரு முடிவினை ஏற்றல் என மொழியியல் வாதிகள் கருத்துரைக்கின்றனர். பல காலமாக வளர்ந்து வந்த இலக்கணத்துறையானது

காலத்திற்கேற்பப் புதுபுதுச் சிந்தனைகளுடன் கலைச்சொற்களைக் கொண்டு மொழியியலாக வளர்ந்திருக்கிறது.

ஒலியைப் (Sound) பற்றிய ஆய்வு ஒலியியல் (Phonetics) ஆகும். ஒரு மொழிக்குத் தேவையான ஒலிகளைக் கண்டறிந்து, அந்த ஒலிகளுக்கு 'வரிவடிவம்' (Letter form) கொடுத்து, ஆய்வு மேற்கொள்வதை ஒலியனியல் (Phonemics) என்பர்.

பொருளோடு தொடர்புடையனவாக இருப்பது உருபன் (Morphemes)களாகும். உருபன்களின் அசைகளை ஆய்வு செய்தல் என்பதை உருபனியல் (Morphology) என்பர்.

பொருளைத் தருவதற்கு அசைகள் சேர்ந்து சொற்களாக வருகின்றன. அச் சொற்கள் தொடர்ந்து நின்று வாக்கியங்களாகப் பிறக்கின்றன. இவ்வாறு பொருளை உணர்த்தும் தொடர்பற்றிய மொழியியலைத் தொடரியல் (syntax) என்றனர்.

மேலே கூறப்பட்ட இம்மூன்று பெரும் கூறுகளே மொழியியலின் பிரிவுகள் எனவும், மொழியியலின் அடிப்படைக் கூறுகள் எனவும் குறிப்பிடுகின்றனர். இந்த மூன்று அமைப்புக் கூறுகளை ஆய்வு செய்வதையே மொழியியல் என்கிறோம். மொழிக்கும், மொழி வெளிப்படுத்தும் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பைப் பொருண்மையியல் (Semantics) என்கிறோம்.

**ஒலியியல் (Phonetics)**

மொழி என்பது பொருளைத் தருகின்ற பேச்சொலிகளால் உருவானது எனலாம். இவ்வாறு பொருளைத் தருகின்ற பல வகையான பேச்சொலிகளே (Speech sounds) பலவகையான எழுத்துகளாக உருவாகுகின்றன. எனவே எல்லா எழுத்துகளும் உண்மையில் வாயொலிகள் (Oral sounds or Vocal sounds) எனப்படுகின்றன. ஆகையால் எழுத்துகளின் பிறப்பு, தன்மை, வகை, தொகை போன்றன எல்லாம் வாயில் பிறக்கும் ஒலிகளாகும்.

செவியால் உணரும் இவ்வெழுத்துகளுக்கென அமைந்த வரிவடிவங்களே கண்ணுக்குக் காட்சி தரும் வரிவடிவ எழுத்துகள் (Script or Alphabet) ஆகும். ஒலி நிலையில் அமைந்த எழுத்துகளில்லாமல் வரிவடிவ எழுத்துகள் அமையாது. வரிவடிவ எழுத்துகளானது ஒலியினைப் பெற்றுள்ள வரிவடிவ எழுத்துகளுக்கேற்ப 'வரிவடிவம்' மாற்றியமைக்கப்படும் எனலாம். வரிவடிவம்கொண்ட எழுத்துகளானது ஒரு மொழிக் கென அமையவும் செய்யலாம் அமையாமலும் இருக்கலாம். இதற்கென கண்டிப்பு இல்லை. இன்றைய அறிவியல் நாகரிகப் பண்பாட்டின் பழக்க வழக்கங்களுக்கேற்ப மக்கள் தங்களின் மொழிகளுக்கென வரிவடிவ எழுத்துகளை அமைத்துக்கொள்கின் றனர். ஆனாலும், இப்பொழுதும் பல மொழிகள் 'வரிவடிவம்' இல்லாமல் உள்ளன. ஒலி வடிவ எழுத்துகள் வேறு, வரிவடிவ எழுத்துகள் வேறு எனப் பிரித்து விளக் காததால் இலக்கண நூல்களிலும், மொழியியல் நூல்களிலும் பல இடர்பாடுகள்

ஏற்பட்டுள்ளன. ஒலிவடிவ எழுத்துகளே முதலானதாகவும், முதன்மையானதாகவும் உணர்வதென்பது முக்கியமானதாகும். எழுத்து என்பது செவியினால் உணரப்படும் ஒலிவடிவத்தையே குறிக்கும்.

தமிழ்மொழி எழுத்துகள் பிறக்கும் முறைகளையும் அம்மொழியின் அடிப் படையிலமைந்த சொற்பாகுபாட்டினையும் காண்பதற்குமுன் இயல்பாகப் பேச்சொலிகள் பிறக்கும் முறைகளையும் அவ்வொலிகளின் பகுப்பு முறைகளையும் அறிந்துகொள் வது முக்கியமானதாகும். இதையே ஒலியியலின் பொருள் எனப்படுகிறது. தொல்காப் பியர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் தமிழ்மொழியின் ஒலி வடிவத்தினையும் பிறப்பினையும் விளக்கி எழுத்துகளையும் வகை தொகைப்படுத்தியுள்ளனர். இலக்கணப் ஆசிரியர்களின் ஒலியியல் கருத்துகளை இங்கு ஒப்பிட்டுப் பார்க்க எண்ணினால் தமிழ்மொழி எழுத்தொலிகளின் வரலாற்றைத் தெரிந்துகொள்ளுவதற்குப் பெரிதும் துணைபுரியும். இருப்பினும் இன்று மொழியியல்துறையில் ஒலியியலைத் தெரிந்து கொள்ள உதவும் நுண்கருவிகள் அதிகமாக வளர்ந்துள்ளன. எனவே, தொல்காப்பியர் முதலான இலக்கணப் ஆசிரியர்களின் காலத்தில் இன்றைய கால மொழியியல் கருவிகள் இல்லையாதலால் அவர்களின் கருத்துகள் பல்வகையிலும் குறைபடக் கூறப்பட்டுள்ளதாகவே கூறலாம்.

தொல்காப்பியரும் நாக்கு, இதழ், அண்ணம், பல் முதலியவற்றின் துணை யினைக்கொண்டே ஒலியினை விளக்கிச் செல்கின்றார். மொழியியலை ஆராய் வோருக்கு ஒலியை விளக்கப் பயன்படும் கருவிகள் எல்லாம் ஒலியுறுப்புகளே ஆகும். ஒலியின் தோற்றத்தினை விளக்கிக் காட்டும்பொழுது ஒவ்வொரு மனிதனும் ஒலியுறுப்புகளைத் தொழிற்படுத்தி ஒவ்வொரு ஒலியினையும் எழுப்ப முடியும் என்கின்றனர்.

முன்னிரண்டு முறைகளும் மொழியியலில் ஒலியியலின் ஆய்வுக்குப் பயன்படவில்லை. மூன்றாவதான உச்சரிப்பு ஒலியியல் (Articulatory phonetics) ஆராய்ச்சிதான் பின்பற்றப்பட்டது. காரணம் எளிமையான ஆய்வுமுறை என்பதால் மொழியியலாளர்கள் இதனை எடுத்துக்கொண்டனர். இம்முறையானது சிறப்புற வளர்ந் துள்ளது.

நீண்ட காலமாக ஒருவன் தனக்குத் தெரியாத மொழி பேசுகின்ற இடத்தில் தங்கினால் உச்சரிப்பு ஒலித்தன்மை மாறாமல் பேசமுடியும். அந்த மொழியின் ஒலி வகைகளைக் கற்கவேண்டிய தேவையில்லை. ஆனால் இப்பயிற்சியினை எத்தனை பேரால் பெற முடியும்? மேலும், இதற்குக் காலமும், பணமும் தேவையில்லாமல் செலவா கலாம். எனவே, மொழி தெரிந்த ஒருவனோடு அம்மொழியைக் கற்க முயலும்பொழுது, மொழியினைக் கற்றுக்கொள்பவன் ஒலிப்பயிற்சியினை நன்கு அறிந்துகொள்ளுகிறான். மேலும் ஒலியுறுப்புகளின் வகைகளையும் அவற்றினால் எழும் தொழில்களையும் அறிந்திருக்கின்ற காரணத்தால் பிற மொழியிலுள்ள ஒலிகளை எளிதில் தெரிந்து

கொள்ளுகிறான். அடுத்ததாக அந்த மொழியின் ஒலிகளில் காணப்படும் தொடர்புகள் மூலம், அடிப்படை உறுப்புகளின் செயல்களை ஆராய்ந்து நன்கு அறிந்துகொள்கிறான். இந்த அடிப்படையில் அப்புதிய மொழியினை அவனால் படித்துக்கொள்ள முடிகிறது.

**பேச்சொலியின் தோற்றம் - ஒரு விளக்கம்**

ஒலியின் தோற்றத்தைப் பற்றி ஆய்வு செய்யும்பொழுது அவற்றின் மூன்று முறைகளைப் பற்றி விளக்க முற்படுகின்றனர்.

1. காற்றின் இயக்கம் (Air Mechanism)
2. குரல் தோற்றம் (Pharyngeal Mechanism)
3. உச்சரிப்பு நிலை (Articulatory Mechanism)

உடலுறுப்புக்கள் சிலவற்றின் செயல்பாடுகளால் பேச்சொலிகள் தோன்றுகின்றன. இச்செயல்களை 'ஒலித்தல்' அல்லது 'ஒலிப்பு' எனக் கூறலாம். இப்பேச்சொலிகளுக்குப் பயன்படும் உறுப்புகளையே பேச்சுறுப்புகள் என்கிறோம். உடலில் இப்பேச்சுறுப்புகள் உள்ள பகுதியினை 'பேச்சின் பிறப்பகம்' எனவும் கூறலாம். ஒலி தோன்றுவதற்கு அடங்கிய பேச்சுறுப்புக்களாக இதழ், பல், அண்ணம், நாக்கு, தொண்டை, குரல்வளை, நுரையீரல்கள், மூச்சுக்குழல், ஒலித்தசைகள் போன்றவைகளைக் கூறலாம். நுரையீரல்கள், மூச்சுக்குழல், தொண்டை, வாயகம், மூச்சகம் ஆகிய ஐந்தினையும் 'வளி செல்வழிகள்' எனக் குறிக்கலாம்.

காற்றானது வாய்வழியாகவும், மூக்கு வழியாகவும் உள்ளிழுக்கப்பட்டு, பின்பு வெளியேற்றுதல் பணியும் இங்கு நிகழ்கிறது. இதனை மூச்சு வாங்குதல் அல்லது சுவாசித்தல் என்கிறோம். உள்ளிழுக்கப்பட்டுக் காற்று மார்பிலுள்ள நுரையீரல்களில் போய்ச் சேருகிறது. இந்த நுரையீரல்களானது வயிற்றின் மேற்பகுதியில் தங்கியுள்ளன. இது தசையால் வேயப்பட்டுள்ளது. இத்தசைகளே அழுத்தம் செய்து, நுரையீரலுக்குள்ளிருக்கும் காற்றை வெளியே தள்ளுகிறது. வெளியேறும் காற்றனது மூச்சுக்குழல் வழியாகச் சென்று, குரல் வளையைக் கடந்து தொண்டையை அடைந்து வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும் வெளியேறுகிறது. இவ்வாறாக வெளிவரும் காற்றைக் குரல் வளைத் தசைகள், நாக்கு, இதழ்கள், அண்ணம், பற்கள் போன்றனவற்றில் தடுத்தும், அடைத்தும், அதிரவும் செய்யப்படுகிறது. அவ்வேளையில்தான் பேச்சொலிகள் தோன்றுகின்றன. ஒவ்வோர் ஒலியும் பிறப்பின் செயலால் பல்வேறு வகைப்பட்டதாகப் பிறக்கின்றன.

ஜெர்மன் நாட்டு மொழியியல் அறிஞர் எம். எச். பார்பரா ஸ்ட்ராங் ஒலியினைப் பற்றி ஆராயும்போது உடம்பிலுள்ள கை, கால்களைத் தவிர, பிற உறுப்புகள் அனைத்தும் ஒலியின் பிறப்புக்குத் துணை நிற்கின்றன என்கிறார். நம் இலக்கண


ஆசிரியர்களோ நெஞ்சு, மிடறு, தலை, இதழ், நாக்கு, பல், அண்ணம், மூக்கு என்னும் உறுப்புகளையே முக்கியமானதாகக் குறிப்பிடுவர்.

**ஒலியுறுப்புகளும் அதன் தொழில்களும்**

நுரையீரல் முதல் உதடுவரை உள்ள உறுப்புகளின் தொழில் பேச்சொலிகளைப் பிறப்பிக்கச் செய்வதாகும். ஒலியுறுப்புகளின் தொழில்களை ஒலிப்பயிற்சி பெற்றவனால் உணர்ந்து கொள்ள முடியும். இத்தொழில்களை எக்ஸ் - கதிர்க்கருவி மற்றும் லாரிங்காஸ்கோப் மூலம் யாவரும் கண்ணால் பார்க்கலாம். நுரையீரலிலிருந்து இதழ்கள் வரையுள்ள உறுப்புகளையும் இயக்கும் ஒலித்தசைகளையும் இது குறிக்கிறது. ஒலியுறுப்புகளைக் குறிக்கும் படம் கீழே தரப்பட்டுள்ளது.

**ஒலியுறுப்புகள்**

1. இதழ் / உதடு (Lips)
2. பல் (Teeth)
3. நுனியண்ணம் (Alveolar ridge . alveolum)
4. இடையண்ணம் (Dome)
5. முதலண்ணம் / கடையண்ணம் (Velum)
6. உள்நாக்கு (Uvula)
7. நாவிளிம்பு (Blade of the tongue)
8. நுனி நா (Tip of the tongue)
9. இடை நா (Centre / front of the tongue)
10. கடை நா (Dorsum)
11. அடி நா (Root of the tongue)
12. மூக்கறை (Nasal cavity)
13. மூக்கறை வாயில் (Velic)
14. முன்தொண்டை (Pharynx)
15. காற்றுக்குழல் மூடி (Epiglottis)
16. ஒலித்தசைகள் (Vocal chords)
17. காற்றுக்குழல் (Trachea)
18. குரல்வளை (Larynx / Adam's Apple)



**இதழ் / உதடு (Lips)**

இதழ்களின் செயல்களினால் பிறக்கும் ஒலிகளை இதழ் ஒலிகள் (Labials) என்றனர். கீழிதழும், மேலிதழும் சேர்ந்து காற்றினைத் தடுத்து நிறுத்துகிறது. இவ்விதழ்கள் சேரு மிடத்தில், சிறிய இடைவெளியைக் கொடுத்து, அதனிடையே காற்றைச் செலுத்தி அதிரச் செய்யலாம்.

அங்கு "இதழியைந்து பிறப்பன 'பகார', 'மகாரம்' ஆகும். கீழிதழும், பல்லும் பொருந்தும் நிலையில் 'வகரம்' எனும் பல்லிதழ் ஒலி (Labio Dental) பிறக்கும். **பல்லிதழ் இணைய 'வகாரம்' பிறக்கும்** எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.

**பல் (Teeth)**

பேசுவதற்கு மேற்பல்வரிசையும் கீழ்பல்வரிசையும் பயன்படுகின்றன. இப்பல் வரிசைகளை நாக்காலும் இதழ்களாலும் தொட்டும், அவற்றிற்கிடையே இடைவெளி யைக் கொடுத்தும் ஒலிகளை எழுப்பச் செய்யலாம். அவ்வாறு எழும் ஒலிகளைப் பல்லொலிகள் என்பர். தொல்காப்பியர், **பல் முதல் மருங்கில் நா நுனிபரந்து, ஒற்றத் தாமினிது பிறக்கும் தகார நகாரம் பிறக்கும்** என்கிறார்.

**அண்ணம் (Upper Palate)**

வாயின் மேற்பகுதியான கடினப்பகுதி அண்ணமாகும். உள்நாக்கினை அடுத் திருக்கும் பகுதி மென்மையாக இருக்கும். மீதமுள்ள பகுதி கடினமானவையாகும். அண்ணத்தை மூன்றாகப் பகுப்பர். மேற்பல்வரிசையை அடுத்திருக்கும் பகுதி நுனி அண்ணம் (Alveolar ridge. Alveolum. Alveolar region), அதற்கடுத்த பகுதி இடையண்ணம் (Dome), அதற்கடுத்த பகுதி கடையண்ணம் (Velum) ஆகும். தொல்காப்பியரும் முதல்நா அண்ணம், இடைநா அண்ணம், கடைநா அண்ணம் என மூன்றாகப் பிரிக்கிறார். மேற் தாடை அசையாது. கீழ்த்தாடை அசையும்.

ஒலியுறுப்பில் இது மிக முக்கிய உறுப்பாகும். வேகமாக இயங்கும் உறுப்பு என்பதால் 'Active Articulator' என்பர். மற்ற உறுப்புகள் 'Passive Articulator' ஆகும். நாக்கினை நுனிநா, நா விளிம்பு, இடைநா, கடைநா, அடிநா என ஐந்தாகப் பிரிப்பர். நுனிநாவினால் எழும் ஒலிகளை நுனிநா ஒலிகள் (Apicals) எனவும், நுனிநாவும் பல்லும் இணைவதால் எழும் ஒலிகளை நுனிநாப்பல்லொலிகள் (Apicodental) எனவும், நுனி நாவும், நுனியண்ணமும் இணைவதால் எழும் ஒலிகளை நுனிநா நுனியண்ண ஒலிகள் (Apico Alveolar) எனவும், நுனிநாவும் இடையண்ணமும் இணைவதால் எழும் ஒலிகளை நுனிநா இடையண்ண ஒலிகள் (Apico Domal) எனவும், நுனிநா இருபற்களுக்கிடையே

இணைவதால் எழும் ஒலிகளை நுனிநாப் பல்லிடை ஒலிகள் எனவும் கூறினர். நுனி நாப்பல்லிடை ஒலிகளைப் பல்லொலி (Dental), நுனியண்ண ஒலி (Alveolar) நாவளை ஒலி (Retroflex), பல்லிடை ஒலி (Inter Dental) எனவும் கூறுவர். இடை நாவும் இடையண்ணமும் இணைவதால் பிறக்கும் ஒலிகளை இடைநா இடையண்ண ஒலிகள் (Lamino Palatals) என்றும், இதனை இடையண்ண ஒலிகள் என்றும் கூறுவர். கடைநாவும் கடையண்ணமும் இணைவதால் கடைநா கடையண்ண ஒலிகள் (Velar) என்பர்.

**உள்நாக்கு (Uvula)**

இது வாயின் அடிப்பாகத்தில் தொங்கும் தசைப்பகுதியாகும். முன்தொண்டை யிலிருந்து மூக்கறைக்குச் செல்லும் வாயிலைத் திறக்கவோ அடைக்கவோ உள்நாக்குப் பயன்படுகிறது.

**முன் தொண்டை (Pharynx)**

இங்குத்தான் மூக்கறை வாயில் (Velic), காற்றுக்குழல் (Trachea), உணவுக்குழல் (Gullet), வாய்ப்பாதை ஆகிய நான்கும் சந்திக்கின்றன.

**மூக்கறை (Nasal Cavity)**

காற்று மூக்கறை வாயிலிலிருந்து மேல்நோக்கிச் சென்று கீழே இறங்கி மூக்கில் முடிகிறது. இங்கு எழும் ஒலிகளை மூக்கொலிகள் (Nasals) என்பர். அப்போது வாயை எதாவது ஓரிடத்தில் அடைத்துக்கொள்வோம். அவ்வாறு செய்யாமல் மூக்கறை வாயி லாகவும் காற்றை வெளியிடும்பொழுது மூக்கின் சாயல்பெற்ற ஒலிகள் (Nasalished Sounds) பிறக்கும்.

**காற்றுக்குழல் (Trachea)**

காற்றுக்குழல் வழியாகக் காற்று நுரையீரலுக்குச் சென்று வரும். இதன் மேற் பகுதி, தொண்டை அல்லது குரல் வளை (Larynx) எனப்படும். கீழ்ப்பகுதி இரண்டாகப் பிறந்து நுரையீரலுக்குச் செல்கிறது.

**காற்றுக்குழல் மூடி (Epiglottis)**

காற்றுக்குழலின் தொடக்கத்தில் இது உள்ளது. சுவாசிக்கும்பொழுது திறந்திருக் கும். உணவுண்ணும்பொழுது மூடிக்கொள்ளும். உணவு உள்ளே செல்ல முயன்றால் உணவைத் தூக்கி இது எறிந்துவிடும். இதைத்தான் புரையேறுதல் என்கிறோம். சுவா சிக்கும்பொழுது திறந்திருந்தால் தங்குதடையின்றிக் காற்று உள்ளே சென்று வரும்.

**குரல்வளை (Larynx)**

இங்குத்தான் காற்றுக்குழலின் ஒலித்தசைகள் (Vocal Cords) இருக்கும். இதனைத் தொண்டை எனவும் கூறுவர்.

**ஒலித்தசைகள் (Vocal Cords)**

இதற்குக் 'குரல் நாண்' எனும் மற்றொரு பெயரும் உண்டு. இது மெல்லிய உறுதி யான இரண்டு தசைப்பகுதிகளாகும். இவற்றிற்கு இடைப்பட்ட இடைவெளி ஒலித்தசை வாயில் (Glottis) எனப்படும். ஒலித்தசைகள் அகன்றிருக்கும்பொழுது காற்று தங்கு தடையின்றிச் செயல்படும். அப்போது ஒலித்தசை அதிர்வதில்லை. அப்போது பிறக்கும் ஒலியை ஒலிப்பிலா ஒலி (Voiceless Sound) என்பர். வாயில் குறுகி ஒலித்தசை அதிரும் போது ஒலிப்புடை ஒலி (Voiced Sound) பிறக்கும்.

**நுரையீரல்கள் (Lungs)**

இது உதரவிதானம் (Diaphram), விலாவெலும்பிலுள்ள தசை நார்கள் ஆகியவற்றின் செயலால் விரியவும் சுருங்கவும் செய்கின்றது. விரியும்போது உள்ளே செல்லும் காற்று, சுருங்கும்போது வெளியேறும். இதனையே ஒரு சுவாசம் என்கிறோம். இது தங்குதடையின்றி நடைபெறும். இதனை நாடித்துடிப்பினாலும் உணரலாம்.

உந்தி முதலாகக் காற்று நிறைந்து நிற்கும் நுரையீரலின் செயலால் காற்று மிடற்றில் வரும்போது ஒலிக்காற்றுக் குரலாகும். குரலானது அதிர்வுடையது. இசைத் தன்மையும் உடையது. இக்குரலானது வாயுறுப்புகளின்மூலம் அடைபட்டுச் சில குறிப்பிட்ட அலைநீளமும், அதிர்வும் ஏற்பட்டு வெளியேறும்போது 'எழுத்தொலி' பிறக்கும்.

**ரா. சுப்பையா**

**ரா. சுப்பையா**



இவர் தேனி மாவட்டத்தில் சீலையம்பட்டியில் 20. 02. 1960இல் பிறந்தார். சென்னை யாதவாக் கல்லூரியில் தமிழ் இணைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். பெரிய வாத்தியார், ஒரு குடும்ப விளக்கு, தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள், தேனி வட்டார நாட்டுப்புறப் பாடல்கள் என்று 25க்கு மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- **கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டுமே மொழி** கலந்துரையாடிக் குறிப்பு தயார்செய்க.

- தமிழ் மொழியில் பிறமொழித் தாக்கம் என்னும் தலைப்பில் கட்டுரை தயாரிக்க. கருத்தரங்கத்தில் வெளியிடுக. கருத்தரங்கச் செயல்பாடுகளில் பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களைப் பயன்படுத்துக. (நிகழ்ச்சிநிரல், விளம்பரம், முத்திரைவாக்கியம், சுவரொட்டி, அழைப்பிதழ்)

- தமிழ் எண்களைப் படித்து இதுபோன்று ஐம்பது முதல் நூறு வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| ௧ | ௧௧ | ௨௧ | ௩௧ | ௪௧ |
| ௨ | ௧௨ | ௨௨ | ௩௨ | ௪௨ |
| ௩ | ௧௩ | ௨௩ | ௩௩ | ௪௩ |
| ௪ | ௧௪ | ௨௪ | ௩௪ | ௪௪ |
| ௫ | ௧௫ | ௨௫ | ௩௫ | ௪௫ |
| ௬ | ௧௬ | ௨௬ | ௩௬ | ௪௬ |
| ௭ | ௧௭ | ௨௭ | ௩௭ | ௪௭ |
| ௮ | ௧௮ | ௨௮ | ௩௮ | ௪௮ |
| ௯ | ௧௯ | ௨௯ | ௩௯ | ௪௯ |
| ௧௦ | ௨௦ | ௩௦ | ௪௦ | ௫௦ |

- பேச்சுவழக்குச் சொற்கள் எழுத்து மொழியிலிருந்து வேறுபடும் விதத்தினை விவாதித்துக் கட்டுரை எழுதுக.

- எழுத்துகளின் எண்ணிக்கையை எழுதி நிரப்புக. அவற்றின் மாத்திரையையும் குறிப்பிடுக.

| குறில் | நெடில் | உயிர் | மெய் | உயிர்மெய் | ஆய்தம் |
|---|---|---|---|---|---|

# அலகு 4

# மண்ணின் மணம்


பரம்பரையாகச் செவிவழியாகக் கேட்டும் சொல்லப்பட்டும் பாடப்பட்டும் வந்த கதைகளும் பாடல்களும் நாட்டார் இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவ்விலக்கியங்கள் தனி மனிதனின் படைப்புகள் அல்ல. இவற்றை ஒரு சமூகத்தின் பொதுச் சொத்துகள் எனலாம். இலக்கண வரையறைகளுக்குக் கட்டுப்படாமல் சிறந்த ஓசை நயத்துடனும் சாதாரண மக்களின் பேச்சு வழக்குச் சொற்களுடனும் அமைபவை. நாட்டார் இலக்கியங்கள், கதைகள், கதைப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் எனப் பல்வேறு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

### கற்றல் அடைவுகள்

- ❖ நாட்டுப்புற இலக்கியங்கள் வாயிலாக அவற்றின் கூறுகளை வெளிப்படுத்துதல்.
- ❖ நாட்டுப்புற மக்களின் பண்பாடு வளர்ச்சி நிலைகளை மதிப்பிடுதல்.

# தன்னனானே

## விளையாட்டு



நண்டே நண்டே சிறு
செங்கால் நண்டே,
உசிரிருக்க ஓடிருக்க
உன்னைப் பிளந்து,
ஒரு குத்துப் புளியங்கா
தொவையல் வச்சி,
கன்னாங் கலத்தையும்
கழுவி வச்சி,
வருவான் வருவான்னு
வழி பார்த்தேன்
வராது போகவும்,
வழிச்சுக்கிட்டேன்.
வந்தாண்டியம்மா மலை வயித்தன்,
குத்தக் குத்த வந்தாண்டி
குரங்குமூஞ்சி,
ஏலகிரி யெல்லாம் கிடுகிடுக்க
எடுத்தாண்டி சிலுக்குத் தடியை
அடிக்க அடிக்க வந்தாண்டி
ஆனைவயித்தன்
அடிச்சிட்டுப் போகச் சொல்லு.

–

*ஆண் பாடுவது:*

வண்டாளம் மரத்துக் காடு
வண்ணமுத்து உழுகும் காடு
தங்கம் விளையும் காடு
தரிசாய்க் கிடக்கிறது.
மஞ்சள் பூசியல்லோ
மதுரைப் பாதை போற புள்ளே
ஒம் மஞ்சள் வாடை தட்டி
வரப்பு வெட்டக் கூடலியோ?
பச்சிலை கழுத்தில் வச்சி
பாதை வழி போற புள்ளே - ஒம்
பச்சிலை வாடை தட்டி
வரப்பு வெட்டக் கூடலியோ?
அரிசி குத்தி மடியில் வைத்து
ஆவாரம் பூப் பொட்டும் வச்சு
சொருகு கொண்டை
வெள்ளையம்மா - நீ
சோறு கொண்டு வாரதெப்போ?

*பெண்கள் பாடுவது:*

கார வீட்டுத் திண்ணையில
கரிக்கு மஞ்சள் அரைக்கயில
எந்தப்பய தூத்துனானோ - எனக்கு
இழுத்தரைக்கக் கூடலியே
கேப்பைக் கருது போல
கிளி போல பெண்ணிருக்க
எனக்குன்னு இருக்கானே
எண்ணங் கெட்ட பாவி மகன்
புல்லு அறுக்கையிலே
புளியம் பூவும் கொண்டு போனேன்
புளியம் பூ வாட தட்டி - நான்
புல்லறுப்ப மறந்து விட்டேன்
வாய்க்கா வரப்பு சாமி!
வயக்காட்டு பொன்னு சாமி!
களை எடுக்கும் பொம்பளைக்கு
காவலுக்கு வந்தவனே!

### வாய்மொழி இலக்கியம்

மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாதது போன்று, மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத் தின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் உள்ளோம். மொழியின் தோற்றம் உருவான போதே மனித இனமும் தன் சிந்தனைத் திறனை வளர்க்க முற்பட்டபோதே வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புற இலக்கிய வகை கருக்கொண்டது எனலாம். உலகில் மொழி யும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அத னைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் முகிழ்த்தன எனக் கூறலாம். எனவே, மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங் களும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். மண் ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக் கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப் பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கி யங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவிய லாகும்.

ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையும் குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும். நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப்பாடல்களிலே காணலாம். இவைகள் ஏட்டில் ஏறாவிடினும் எழுத்திலே வாராவிடினும் பாட்டிலே இடம்பெறாவிடினும் நம் நெஞ்சிலிருந்து மட்டும் நீங்காது நிற்கும்.

நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற இயலை நாட்டுப்புற மக்களின் மரபுப்பட்ட படைப்புகள் என்பர். பொதுமக்களைச் சார்ந்த மரபு முறைகள் என்ற பெயரிலும் மக்கள் இலக்கியம் என்ற பெயரிலும் பொதுப் புராணவியல் என்ற பெயரிலும் எஞ்சியது என்ற பெயரிலும் வழங்கி வந்தது. பின்னர் நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல் 1846இல் வில்லியம் ஜான் தாமஸ் அவர்களால் உருவாக்கப்பெற்றது.

## மங்கல வாழ்த்து

வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
வாள் விசய மைந்தருக்கு
கேளுங்கள் கேளுங்கள்
எல்லோரும் கேளுங்கள்
கோல வர்ணப் பந்தலிலே
கூறுகிறேன் கேளுங்கள்
சொர்ண மணிப் பந்தலிலே
சொல்லுகிறேன் கேளுங்கள்
இந்தச் சபை தன்னிலே
எல்லோரும் கேளுங்கள்

எங்கள் குடி தழைக்க
இளவரசு வேணுமென்று
அரசுமுதல் வேண்டுமென்று
அன்னை தவஞ் செய்து
பிள்ளை முதல் வேண்டுமென்று
பெரிய தவஞ் செய்து
பாலன் முதல் வேண்டுமென்று
பாரத்தவம் செய்து
தொண்ணூறு நாளாகத்
துளசிக்கு நீர்வார்த்து
முன்னூறு நாளாக
முல்லைக்கு நீர் வார்த்து
அருந்தவங்கள் தான் செய்து
முந்தித் தவமிருந்து
முன்னூறு நாள் சுமந்து
மங்களமாக
மைந்தரைப்பெற்றெடுத்தாள்.

## தாலாட்டு

மார்கழி மாசத்திலேதான் - கண்ணே நீ
மாராசாவைப் பார்க்கையிலே
தைப் பொங்கல் காலத்திலே -
கண்ணே நீ
தயிரும் சோறும் திங்கையிலே
மாசி மாசக் கடைசியிலே - கண்ணே நீ
மாமன் வீடு போகையிலே
பங்குனி மாசத்திலே - கண்ணே நீ
பங்குச் சொத்தை வாங்கையிலே
சித்திரை மாசத் துவக்கத்திலே - கண்ணே நீ
சீர் வரிசை வாங்கையிலே,
வைகாசி மாசத்திலே - கண்ணே நீ
வயலைச் சுற்றிப் பார்க்கையிலே
ஆனி மாசக் கடைசியிலே - கண்ணே நீ
அடியெடுத்து வைக்கயிலே
அகஸ்மாத்தா ஆவணியில் - கண்ணே நீ
அரண்மனைக்குப் போகையிலே
ஐப்பசி மாசமெல்லாம் கண்ணே - நீ
அப்பன் வீடு தங்கையிலே
கார்த்திகை மாசத்திலும் - கண்ணே
கடவுளுக்குக் கையெடடி.

## இல்லறம்

அரிசி முளப் போட்டு
அரமனையும் சுத்தி வந்தா
அரிசி மண மணக்கும்
அரமனையும் பூ மணக்கும்
பருப்பு முளப் போட்டு
பட்டணமும் சுத்தி வந்தா
பருப்பு மண மணக்கும்
பட்டணமும் பூ மணக்கும்
வரிசை மணாளனோடு
வாய் சிரித்துப் பேசி வந்தால்
வாழ்க்கை நெய் மணக்கும்
வாசநறும் பூ மணக்கும்.

இதற்குப் பின்னரே இத்துறையில் முறையான ஆய்வு தொடங்கிற்று. மனிதனின் சடங்கு முறைகள், கதைப்பாடல்கள், பழமொழி, நாட்டுப்புறப் பாடல் முதலியவற்றைக் குறிப்பதாகக் கூறியுள்ளார். பழங் காலப் பண்பாட்டின் எச்சம் நாட்டுப் புறவியல் என் பது அவர் கருத்தாகும்.

Folklore என்பது Folk, Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் 'Folk' என்ற சொல் விவசாய மக்களைக் குறித்து, பின்னர்ப் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக் களைக் குறித்தது. பொதுவான தொழில், மொழி, சம யம் முதலியவற்றைப் பின்பற்றும் குழுவை Folk என்பர். பொதுவாகக் கிராமப்புற, படிப்பறிவில்லாத, மக்களைக் குறிக்கும். Lore என்பதற்கு 'மரபுச் செய் தித் தொகுதி' என்றும் 'வழக்காறு' என்றும் பொருள் கொள்ளலாம். Folklore என்பது நாட்டுப்புறமக்களின் அறிவு எனப் பொருள்படும். நாட்டுப்புற வழக் காற்றை Folklore என்றும் நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் ஆய்வை 'Folkloristics' என்றும் கூறலாம்.

## உழவுக் காளை

மின்னேரு எருதுக்கெல்லாம்
என்ன என்ன அடையாளம்
நெத்திக்கு சிட்டிகளாம்
நெலம் பார்க்கும் கண்ணாடி
வயலுக்குச் சல்லடமாம்
வாகுக்கை பொன்னாலே
கொம்புக்குக் குப்பிகளாம்
கொணவாலு சல்லடமாம்
தூக்கி வைக்கும் கால்களுக்கு
துத்திப் பூ சல்லடமாம்
மண்டியிடும் கால்களுக்கு
மாதளம் பூ சல்லடமாம்.

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர். ஆனால், நாட்டுப்புறவியல் இவற்றுடன் நின்று விடாமல் நாட்டுப்புற நம்பிக்கை, ஆடல், ஓவியம், பொருள்சார் பண்பாடு ஆகியவற்றையும் ஆராய்கிறது.

நாட்டுப்புற வழக்காறுகள் தலைமுறை தலைமுறையாக, வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. நாட்டுப்புறப் பாடல், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவை பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன.

## பஞ்சமும் மழையும்

ஆடு வித்து, மாடு வித்து
ஐயோ வருண தேவா!
அத்தனையும் கூட வித்து
ஐயோ வருண தேவா!
காது கடுக்குவித்து
ஐயோ வருண தேவா!
கை வளையல் கூடவித்து
ஐயோ வருண தேவா!
இச் சிக்காய் தின்ன பஞ்சம்
ஐயோ வருண தேவா!
இன்னும் தெளியலையே
ஐயோ வருண தேவா!
காரைக்காய்த் தின்ன மக்கள்
ஐயோ வருண தேவா!
காதடைச்சு செத்த மக்கள்
ஐயோ வருண தேவா!
மக்க வெதச்ச கம்பு
மச்சு வந்து சேரணுமே!
ஓடி வெதச்ச கம்பு
ஊடுவந்து சேரணுமே
கலப்பை பிடிக்குந் தம்பி

கை சோந்து நிக்கிறாங்க!
அதுக்கே மனமிரங்கு
ஐயோ வருண தேவா!
ஏர் பிடிக்குந் தம்பி யெல்லாம்
எண்ணப்பட்டு நிக்கிறாங்க
அதுக்கே இறங்க வேணும்
ஐயோ வருண தேவா!
பேயுதையா பேயுது
பேய் மழையும் பேயுது
ஊசி போல காலிறங்கி
உலகமெங்கும் பேயுது
உலக மெங்கும் பேஞ்ச மழை
ஊரிலெங்கும் பேயலே
பாசி போல காலிறங்கி
பட்டணமே பேயுது
பட்டணமே பேஞ்ச மழை,
பட்டியிலே பேயலே
துட்டு போல மின்னி
சீமையெங்கும் பேயுது
சீமை யெங்கும் பேஞ்ச மழை
செல்ல மழை பேயுது.

## களை எடுத்தல்

களை யெடுக்கும் பெரிய குளம்
கணக் கெழுதும் ஆலமரம்
கொத்தடிக்கும் கொட்டாரம்
கூறு வைக்கும் களத்து மேடு
கண்ணாடி வளையல் போட்டு
களை எடுக்க வந்த புள்ளே
கண்ணாடி மின்னலிலே
களை எடப்புப் பிந்துதடி
வெள்ளிப் புடி வளையல் - நல்ல
விடலைப் பிள்ளை கை வளையல்
சொல்லி அடிச்சவளை - நல்லா
கழட்டு தில்ல நெல்களையை.

## ஏற்றப் பாட்டு

பட்டுப் பையாம் வெள்ளிக்
குச்சாம்
தில்லாலங்கிடி லேலம்
பதினாறு வெத்திலையாம்
தில்லாலங்கிடி லேலம்
சின்னப் பையன் குடுத்த பை
தில்லாலங்கிடி லேலம்
சிரிக்கு தோடி இடுப்பு மேலே
தில்லாலங்கிடி லேலம்

## அறுவடைப் பாடல்கள்

(பெண்)
கோடை கருதறுப் பே
கொடிக்காலே சூழ்ந்திருப்பே
நாளக் கருதறுப்பே
நானும் வந்தாலாகாதோ!



(ஆண்)
கஞ்சிக் கலயம் கொண்டு
கருதறுக்க போற புள்ளா
காக்காய் அலம்புதடி
கருத்தப் புள்ளா உங்கலயம்
(பெண்)
நெல்லுக் கதிரானேன்
நேத்தறுத்த தாளானேன்
நேத்து வந்த தோழனுக்கு
நேரம் தெரியாதோ!
(ஆண்)
கருதறுப்பில கங்காணத்திலே
கமகமங்குது குமுகுமுங்குது
கன்னத்து மஞ்சள் என்னைப்பகட்டுது
முன்னே போற பொண்ணே!
உன்னைத் தாண்டி பொண்ணே
(பெண்)
ஊரோரம் கதிரறுத்து
உரலுப் போல கட்டுக்கட்டி
தூக்கி விடும் கொத்தனாரே
தூரகளம் போய்ச்சேர

கருதறுத்துக் கிறுகிறுத்து
கண்ணு ரெண்டும் பஞ்சடைச்சி
தூக்கி விடும் கொத்தனாரே
தோப்புக் களம் போய்ச் சேர
(ஆண்)
நெல்லுக் கருதறுத்து
நிமிர்ந்து நிற்கும் செவத்தபுள்ள – என்
சொல்ல மறந்திராத – நீ
சொன்னபடி நானிருப்பேன்
(பெண்)
தும்ப மலர் வேட்டி கட்டி
தூக்குப் போணி கையிலேந்தி
வாராக எங்க மாமன்
வட்டம் உதறுதற்கே
(வேறு)
நாலு மூலை வயலுக்குள்ளே
நாற்று நடும் குள்ளத்தாரா
குலுங்குதோடி குண்டஞ்சம்பா
உன்னரிவாள் என்னரிவாள்
உருக்கு வச்ச கருக்கரிவாள்
சாயப்பிடி அரிவாள்
சம்புதடி நெல்லம் பயிர்
வெள்ளிப்பிடி அரிவாள்
வீசுதடி நெல்லப் பயிர்
அறுப் பறுத்து திரித்திரிச்சு
அன்னம் போல நடை நடந்து
சின்னக் கட்டா கட்டச் சொல்லி
சிணுங்கினாளாம் பொன்னியம்மா
வீதியிலே கல் உரலாம்
வீசி வீசிக் குத்துராளாம்
கையைப் புடிக்காதீங்க
கைவளையல் நொறுங்கிவிடும்
கண்ணாடி வலைவிதொட்டு
கருதறுக்கத்தப் போற பிள்ள
கண்ணாடி மின்னலுல
கருதறுப்பு பிந்துதடி
வெள்ளிப்பிடி யருவா
விடலைப்பிள்ளை கையருவா
சொல்லியடிச் சருவா
கழட்டுதையா நெல்கருதை

**வினைச்சொல்**

ஒரு செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

படி,எழு,வணங்கு,செய் போ, பாடு...........

வினைச்சொற்கள் பெயர்ச்சொற்களாகவும் அமைவதுண்டு.

எ.டு எடுத்தல், படித்தல் வணங்குதல், கொடுத்தல் ஆடுதல்

இவ்வாறு வருவதைத் தொழிற்பெயர் என்பர்.

பெயர்ச்சொல்–வினைச்சொல் அடிப்படை வேறுபாடுகள்.

பெயர்ச்சொல்லுடன் வேற்றுமை உருபுகள் (ஐ ஒடு, கு, இன்) இணைந்து வரும்.ஆனால் அச்சொற்கள் காலத்தைக் குறிப்பிடாது.

கண்ணனைக் கண்டேன்
கண்ணனொடு சென்றேன்
கண்ணனுக்குக் கொடுத்தேன்
கண்ணனை விடச் சிறந்தவன் இராமன்
கண்ணனது வீடு
கண்ணனிடத்தில் புத்தகம் உள்ளது

இங்குக் கண்ணன் என்ற பெயருடன் ஐ, ஒ, கு, முதலான வேற்றுமை உருபுகள் சேர்ந்து வரும். ஆனால் அச்சொற்கள் காலத்தைக் குறிப்பிடாது.

அமுதா படித்தாள்

அமுதா படிக்கிறாள்

அமுதா படிப்பாள்

இங்குப் படி என்ற வினைச்சொல்லுடன் காலம் காட்டும் இடைநிலைகள் (த்த, க்கிற், ப் )சேர்ந்து வந்து மூன்று காலத்தையும் உணர்த்தின.

## ஒப்பாரி

கூட்டார்க்குச் சம்மதமோ?
சீமை அழியுதுண்ணு நான்
சிந்தையிலும் எண்ணலியே;
சீமை அழியலியே – என்
சிறப்பழிஞ்ச மாயமென்ன?
மருத அழியுதுண்ணு நான்
மனசிலேயும் எண்ணலியே!
மருத அழியலியே – என்
மதிப்பழிஞ்ச மாயமென்ன?
கடுகு சிறுதாலி
கல் பதிச்ச அட்டியலாம்
கல்பதிச்ச அட்டியலை – நான்
கழட்டி வைக்க நாளாச்சே
மிளகு சிறுதாலி
முகப்பு வைச்ச அட்டியலு
முகப்பு வைச்ச அட்டியலை – நான்
முடிஞ்சு வக்க நாளாச்சே
பட்டு கழட்டி வச்சேன்
பாதம் வரை வெள்ளையிட்டேன்
சிகப்பு கழட்டி வச்சேன் – என்
தேகமெல்லாம் வெள்ளையிட்டேன்
ஆத்துல புல்லறுத்து
அறுகம்புல்லு பந்தலிட்டு
அரும மக தாலி வாங்க – ஒங்க
ஐவருக்கும் சம்மதமோ
குளத்துல புல்லறுத்து
கோரம்பா பந்தலிட்டு
குழந்தை மக தாலி வாங்க – ஒங்க
கூட்டார்க்கும் சம்மதமோ?

**பதிப்பாசிரியர்: நா. வானமாமலை**

**வாக்கியம்**

சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் முடிவு பெற்று அமைவது வாக்கியம்.

எ.டு. கண்ணன் வந்தான்.
அமுதா நடனம் ஆடினாள்
ஆசிரியர் நன்றாகப் பாடம் நடத்தினார்.

**வாக்கிய அமைப்புகள்**

வாக்கியங்களைப் பொருள் அல்லது கருத்து அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.

**கருத்து அடிப்படை**

வாக்கியங்களைக் கருத்து அடிப்படையில் செய்தி வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், வினா வாக்கியம் கட்டளை வாக்கியம் என நான்காகப் பகுக்கலாம்.

**செய்தி வாக்கியம்**

கூறவந்த கருத்தை அல்லது செய்தியைத் தெளிவாகக் கூறுவது.

எ.டு. கண்ணண் நல்ல மாணவன்
இந்தியா கால்பந்து போட்டியில் வெற்றிபெற்றது.

## செயல்பாடுகள்

- நாட்டுப்புறவியல் என்ற சொல்லின் தோற்றம் குறித்துக் கலந்துரையாடுக.
- நாட்டுப்புறவியலில் இடம்பெறும் பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்கள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்புத் தயாரிக்க.

# பொன்னிறத்தாள் கதை

### வணக்கம்
### விருத்தம்

படைக்கு சுருபமா கிருபைக்குள்ளே யிரண மந்து

நடத்தியே முன்னூ ற்றேழு நாளும் நலம் பெற வாழ்வும் தந்து

அடைத் தென்னை குடத்தினுள்ளே ஆணெனை உருவ தாக்கி

குடத்தினில் அடைத்தீரென்னை குடமோ நோகா வண்ணம்

துறந்தென்னை வெளியிலாக்கி வைத்தீர் சிவசிவதின மறக்க மாட்டேன்

## கதைச்சுருக்கமும் காப்பும்

அணஞ்ச பெருமாள் தலைவன் அருமையாக
ஆயிழையாள் பொன்மாரி தனையும்
கலியாணம் செய்துடனே இருபேரும்தான்
காசியில் வாழ்ந்திருந்தார் சில காலமாய்
மாமறையோர் திருவருளால் மதலை தன்னை
வகுத்தார் ஏழு ஆண்மக்கள் ஒவ்வொன்றாக
ஏழு மக்கள் ஆண் மக்கள் இருக்கும் போது
ஏந்திழையாள் பொன்மாரி மனது நொந்து
ஆயிரத்தொரு பதியில் தவழச் செய்து
ஆயிழையாள் ஈன்றெடுத்தாள் ஒரு பெண் மதலை
ஈன்றெடுத்த மதலை கண்டு இனத்தார் தாமும்
இதர உலகோர் மனமகிழ்ந்து சந்தோஷமாக
பூவுலகில் கீர்த்தி பெற்ற பொன்னிறத்தாள்
புகழ் காவியம் பாட புத்திரனும் புவியிலுள்ளோரும்
பிழை பொறுத்து இக்கதையைப் புத்தியுள்ள
மனைவியர்கள் ஆராய்ந்து அறிந்து கேட்க
கரிமுகவா கடகரிவாள் முகத்து ஏழைக்
கணபதி தன்னிரு சரணங் காப்பதாமே

**வினா வாக்கியம்**

ஒருவரிடம் ஒன்றை வினவுதல் (கேட்டல்)
நீ எப்போது வந்தாய்?
சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

**கட்டளை வாக்கியம்**

முன்னால் நிற்பவரை நோக்கி ஒரு செயலைச் செய்யச் சொல்லுதல் அல்லது கட்டளை இடுதல்.

கண்ணா! நல்ல நூற்களைப் படி.
நீ போய் அதை எடுத்துக்கொண்டு வா.

**உணர்ச்சி வாக்கியம்**

உணர்ச்சி, ஆச்சரியம் அல்லது அச்சத்தை வெளிப்படுத்துகிற வாக்கியங்கள்.

ஐயோ! வலிக்கிறதே!

ஆகா! ஓவியம் எவ்வளவு அழகாக இருக்கிறது!

ஐயோ ! நாய் ஓடி வருகிறதே !

## பொன்மாரியின் திருமணம்

நாடான நாடதிலே நல்ல கடயத்து ஊரதிலே
கடயத்து ஊரதிலே காரிகையாள் பொன்மாரி
பொன்மாரி தாயாரும் போர்க் கொடியாள் இனிதிருந்தாள்
வடுவர் குல பொன்மாரியும் வாழ்ந்திருக்கும் நாளையிலே
பொன்மாரியும் தோழியரும் புகழ்ந்த தென்காசியிலே
வாழ்ந்திருக்கும் நாளையிலே வடுகர் குல பொன்மாரியை
அணஞ்ச பெருமாள் தலைவன் ஆயிழையை மாலையிட்டான்
மாலையிட்ட பொன்மாரியும் வாழ்ந்திருந்தார் இருபேரும்
வாழ்ந்திருக்கும் நாளையிலே மங்கை நல்லாள் பொன்மாரி
பன்னிரண்டு திருவயதில் பாவை நல்லாள் திருப்பூற்றாள்
உறவு முறையான் தான் கூடி உற்ற சடங்கே முகித்தார்
சடங்கதுதான் முகித்தபோது தார் குழலாள் பொன்மாரியும்
மன்னவரும் மங்கையரும் வாழ்ந்திருந்தார் சிலகாலம்
பதினாறு திருவயசில் பாலகரை ஈன்றெடுத்தாள்

## பெண்குழந்தைக்குத் தவமிருத்தல்

ஒரு பெண் மதலை வேணுமென்று பொன்மாரி தவமிருந்தாள்
தூரத்துக் கோவிலெல்லாம் தூத்து தெளித்திருந்தாள்
பழங்கோவிலானதெல்லாம் பகல் விளக்கு ஏற்றி வைத்தாள்
குளிர்ந்த மரச் சோலை எல்லாம் கோவிலென்றே கும்பிடுவாள்
தமுத்தமாகச் சோலை எல்லாரும் சந்ததி என்றே தொழுதார்
சந்ததி என்றே தொழுது சாத்தாவை கையெடுத்தாள்
நனைந்த முந்தி துவராமல் நடையில் வந்து கைதொழுதாள்
உடுத்த முந்தி குலையாமல் ஓவியமும் தவமிருந்தாள்
சாரங்க நாதருக்கு திருவுருவம் நேருவாளாம்
குமரியம்மாள் பகவதிக்கு குழலாடி நேருவாளாம்
குருத்தோலை நாதருக்கு குதிரை பொன்னால் விடவும் நேர்ந்தாள்
சிவனணஞ்ச பெருமாளுக்கு செங்கோலும் நேருவாளாம்
திருவனந்தபுர பெருமாளுக்கு இலையும் வில்லும் நேருவாளாம்

**பதிப்பாசிரியர்: நா. வானமாமலை**

## செயல்பாடுகள்

- பொன்னிறத்தாள் கதைப்பாடலைப் படித்துக் கலந்துரையாடிச் சிறுகதை வடிவில் தருக.

# ஐவர் ராசாக்கள் கதை

ராச பெருமாள் திரு மகனை
கரையேத்தும் பூங்குழலாள்
நன்னீராட்டிப் பொட்டுமிட்டு
பொட்டிட்டு நகையுமிட்டு
புதல் வனழகெல்லாம் பார்த்திருந்தார்.
முலைப்பால் முதலளித்து
முகந்து முத்திக் கொஞ்சி மொய்க் குழலாள்
கலைப்பாயின் மேல் கிடத்தி
கண்ணாளர் தொட்டில் சமையுமென்றார்
கண்ணாளர் காவலவர்
காவலனுக்குத் தான் பள்ளி கொள்ள
விண்ணாளு மதயானை
கொம்பை வெட்டி இணக்கியே சட்டமிட்டு
சட்டத்திடை உருக்குத்
தங்கமதில் தங்கமணியினால் அழுத்தி
கட்டிக் கண்ணாடி பிறை சூளக்
கடைந்துருவி நிறுத்தி
பட்டுச் சகலாத்துப்
பவள வளைகள் தான் தூக்கி
தொட்டில் சமைத் தெடுத்து
சுந்தர மாறன் முன் வைத்தனராம்
வைத்த மரியாதையை
மன்னன் அளித்தக் கம்மாளருக்கு
மெத்த உபசரித்து மகிழ்ந்திருந்தார்.
வேந்தர்கள் பொன்னின் தொட்டிலிலே
நித்தில மெத்தையிட்டு
நிரை நிரை பொன்னின் கம்பிக் கயிறும்
கொத்தாகக் குஞ்சம் மேலத் தூக்கி
குழந்தையைத் தொட்டிலில் கிடத்துவாராம்.

(வேறு)

**அமைப்பு அடிப்படை**

அமைப்பு அடிப்படையில் வாக்கியங்களைத் தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலவை வாக்கியம் என மூன்றாகப் பாகுபடுத்தலாம்.

**தனி வாக்கியம்**

ஓர் எழுவாயோ, பல எழுவாய்களோ வந்து ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது.

கண்ணன் படித்தான்.- ஓர் எழுவாய்
கண்ணனும் அமுதாவும் படித்தனர். இரு எழுவாய்கள்
சேர,சோழ பாண்டியர்கள் வெற்றி பெற்றனர். -மூன்று எழுவாய்கள்

**தொடர் வாக்கியம்**

ஓர் எழுவாய் ஒன்றிற்கு மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டு முடிவது.

அமுதா போட்டியில் பங்கு பெற்றாள்; வெற்றி அடைந்தாள்; பரிசு வாங்கினாள்.

அமுதா என்ற எழுவாய் ஒரே வாக்கியத்தில் பெற்றாள், அடைந்தாள் வாங்கினாள், என மூன்று பயனிலைகளைக் கொண்டு முடிந்துள்ளது.

கிடத்திய பஞ்சணைமீது பள்ளி கொள்ளவே
கிஞ்சுக வாய் திறந்து வஞ்சிப் பெண்கள் தாலாட்ட
கடுதனையுண்ட சொக்கர் அங்கயற்கண்ணி யருளாலே
காணியாள வந்த தொரு காவலனோ யென்பார்.
கண்ட நாடு கொண்டு பொன்னிகரை நாடு சேர்த்து
கல்லு வெட்டி நாட்ட வந்த காவலனோ யென்பார்.
சென்று அங்கு உயரும் செம்பொன் மகா மேருவினில்
பதிக்க
தெய்வ பாண்டியன் குலத்துதித்த திலகனோ என்பாரும்
தொண்டு செய்யும் அடியாரும் அஞ்செழுத்தும் வாழவே
சொக்கநாதர் அருளால் வந்த சுடரொளியோ என்பாரும்.
மீண்டு பேசும் மருவலரை வெட்டியிரை யேத்தவே
வெல்லும் பரியேற வந்த வேந்தனோ என்பாரும்
அண்டர் நாயகன் திருக்கோவில் பூசைக்கும்
ஆகமதத்திபடி நடத்தும் மாராசனோ யென்பாரும்.
திங்கள் மும்மாரி பொழிந்து பலபட்டறையும் வாழவே
தெய்வ சந்திரன் குலத்துதித்த திலகனோயென்பாரும்
எங்கள் கலத்துக்கு ஓர் ஆளியான தீரனோ
என்று தாலாட்ட பஞ்சணை மீது பள்ளி கொண்டார்.

(வேறு)

பள்ளி கொள்ளுமந்தப் பாலகனுக் கெட்டா மாதம்
பாலும் பழமும் சக்கரை சீனிதானுமாய்
வெள்ளித் தளிகையிலிட் டொன்றாகக் குழப்பியே
வேந்தன் மடியில் வைத்து அமுதூட்டி மேவினார்
நாளும் நாளு தர்மந் தழைக்கவே, சீர் விளங்க
நாலு வேதமும் நாதமிட வாலச் சந்திரன் போலவே
ஆளுக்கழகன் அதி ஞான வல்லபமாறன்
ஆண்டு நின்று தன்புவி மீது வாழவே
நீண்ட குஞ்சி முடிக்கு அஞ்சனம் மஞ்சளை பூசி
நெத்திக்கழகாய்ப் பொட்டுமிட்டு சுட்டிகட்டி
தூண்டாமணி ரெத்தினமும் முத்து மாலைகளும்
ஞால மூனகுழலுமே தார்வடமு மணிந்தார்.
வேண்டு விரலாழி வளைக் கச்சமும் கட்டி
வீரு தண்டைச் சதங்கைக் கிண்கிணியுமணிந்தார்.

**பதிப்பாசிரியர்: நா. வானமாமலை**

**கலவை வாக்கியம்**

முற்றுத் தொடராக அமைந்த ஒரு முதன்மை வாக்கியமும், எச்சத் தொடராக அமைந்த பல துணை வாக்கியங்களும் கலந்து வருவது.

பயனுள்ள நூல்களைப் படித்தும் நல்லவர்களுடன் பழகியும் வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயலவேண்டும்.

இங்கு வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயலவேண்டும் என்பது கருத்து முடிவு பெற்ற முதன்மை வாக்கியம்.பயனுள்ள நூல்களைப் படித்து, நல்லவர்களுடன் பழகி ஆகியன எச்சத் தொடராக அமைந்த துணைவாக்கியங்கள்.

**நா. வானமாமலை**

இவர் 15 ஆண்டுகளாக நாட்டுப்புறவியல் தொகுப்பாளராகவும் ஆய்வாளராகவும் பணிபுரிந்தவர். ஆயிரக்கணக்கான நாட்டுப்புறப் பாடல்களையும் கதைப்பாடல்களையும் தொகுத்துள்ளார். இவர் தொகுத்த ஆறு கதைப்பாடல்களை மதுரைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. '**ஆராய்ச்சி**' என்னும் ஆய்விதழைத் தொடர்ந்து வெளியிட்டார்.

## செயல்பாடுகள்

- இரு கதைப்பாடல்களையும் ஒப்பீடு செய்க.
- கதைப்பாடல்களில் வெளிப்படும் பெண்களின் நிலை குறித்து விவாதிக்க.
- கதைப்பாடல்கள் விழாக்காலங்களில் கூத்தாக நடிக்கப்படுகின்றன. நீங்கள் கண்ட ஏதேனும் ஒரு கலை வடிவம் குறித்து அனுபவக் குறிப்பு தயார் செய்க.
- இணையத்திலிருந்து ஏதேனும் கூத்துக்கலையைப் பதிவிறக்கம் செய்து கலந்துரையாடுக.
- வட்டாரவழக்குச்சொற்களைத் தொகுத்து அகரமுதலி தயாரிக்க.
- "ஒரு கொடம் தண்ணி ஊத்தி<br>ஒரு பூ பூத்தது<br>ரெண்டு கொடம் தண்ணி ஊத்தி<br>ரெண்டு பூ பூத்தது" - இதுபோன்ற விளையாட்டுப் பாடல்களைத் தொகுக்க.
- நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து இசையுடன் பாடுக.
- பல்வேறு வகையான நாட்டுப்புறப்பாடல்களைத் திரட்டி நடத்துக.
- நாட்டுப்புறப்பாடல்களில் விஞ்சி நிற்பது இசையா? பண்பாட்டுக் கூறுகளா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துக.
- "நாடான நாடதிலே நல்ல லண்டன் பட்டணத்திலே<br>தேசமான தேசத்திலே சிறந்த லண்டன் பட்டணத்திலே<br>பாரடக்கி அரசாண்டார் பறங்கித் துரை தன் கதையை<br>பாடுகின்றோம் இக்கதையை கமலபாதம் தான் போற்றி" - இதுபோன்ற கதைப்பாடல்களின் தனித்தன்மை குறித்துக் கலந்துரையாடுக.
- நாட்டுப்புறப்பாடல்களுக்கும் கதைப்பாடல்களுக்குமிடையே காணலாகும் வேறுபாடு குறித்து விவாதிக்க.
- நமது பகுதியில் வழங்கும் பழமொழிகளையும் விடுகதைகதைகளையும் தொகுக்க.

# பழமொழியும் நகைச்சுவையும்

## முன்னுரை

சிரிக்கத் தெரிந்த விலங்கு மனிதன். இம்மிருக இனத்திலும், தமிழ் இனத்தைப் போலப் பக்குவம் அறிந்து சிரிக்கத் தெரிந்த ஓர் இனம் உலகத்தில் வேறு எங்கும் காண முடி யாது என்பார்கள். நகைமுகம் காட்டுவது, புன்முறுவல் பூப்பது, வாய்விட்டுச் சிரிப்பது, இனிய சிரிப்பால், பிறர் பேசாத பேச்சால் பிறர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது எல்லாம் தமிழர்க்குக் கைவந்த ஒரு கலையாகும். சிரிக்கத் தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன் என்பது நம்நாட்டு முதுமொழிகளுள் ஒன்று.

## பழமொழியும் கவிதையும்

பழமொழியைத் தொல்காப்பியர் செய்யுளியலில் கூறுவதால், இதனையும் யாப்பு வகை யினுள் சேர்த்துக் கணக்கிடுகின்றனர். பழமொழியைக் கவிதை என்பார்கள். பழமொழி யை, அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் இராபர்ட் பீடர் கோபின் என்பவர் நகைச்சுவை பயக்கும் நல்லதொரு கவிதை என்றே போற்றுகின்றார். வோர்ட்ஸ்வொர்த் போன்றோர் கவிதைக்குக் கூறும் இலக்கணம் அனைத்தும் பழமொழிக்குப் பொருந்துவனவே என் பார்கள். பல்வேறு சுவைக்கு இடனாக அமைந்துள்ள பழமொழி, நகைச்சுவைக்கும் இடம் தந்து, நகைச்சுவை மேலோங்கி நிற்கவும் அமைந்து விடுகின்றது. கவிதையில் நகைச் சுவை போலப் பழமொழியிலும் இச்சுவையுண்டு.

## ஒன்பான் சுவை

தொல்காப்பியர் சுவையினை எட்டு எனக் கொண்டார். அதனை,

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப**

என்று மெய்ப்பாட்டியல் நூற்பா 33 இல் கூறுவர். இங்ஙனம் கூறப்படும் எட்டுவகைச் சுவைகளோடு, சமநிலை என்ற சுவையினையும் சேர்த்துச் சிலர் சுவை ஒன்பது என்பர். விருப்பு வெறுப்பற்ற சமநிலையாகக் கொள்வதால் சிலர் அதனைச் சுவை எனக் கொள் வதில்லை.

மனிதப்பிறவி ஒரு விந்தையானது தான். இந்தப் பிறவி எடுத்த பிறகே, மனிதனால், சுவைக்க முடிகின்றது; எதனையும் நன்றாக அனுபவிக்க முடிகின்றது. வேறுபாடு உணர்ந்து, உள்ளத்து உணர்ச்சியைச் சிரிப்பாலும் காட்ட முடிகின்றது. ஏனைய விலங்கு களைப் போல மனிதன் வெறும் இயல்பூக்கத்தால் (Instinct) மட்டும் இயங்கவில்லை.

மூளையுடன் நரம்பு மண்டலமும் கொண்டு இயங்குகின்றான். மன உணர்வு பெற்று உள்ளான். ஆறாவது அறிவு அவனுடைய தனித்தன்மைக்கும் சுவை உணர்வுக்கும் காரணமாக அமைகின்றது. மனத்தால் எண்சுவை காண்கின்றான். நாக்கால் அறுசுவை காண்கின்றான். கற்பனையால் பல சுவைகளையும் காண்கின்றான். இந்தச் சுவை உணர்வு மனிதனுக்கே உரியது. இவ்வகைச் சுவைகளுள் தலைசிறந்து விளங்குவது நகைச் சுவையே ஆகும். அதனால் தான் தொல்காப்பியனாரும் நகைச்சுவையை முதலில் வைத்து நூற்பா இயற்றினார்.

## வாழ்க்கையில் நகைச்சுவை

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று பேரறிஞர் அண்ணா கூறினார். சமயவாதிகளும் கூடக் குழந்தையின் சிரிப்பில் இறைவன் காட்சியளிப்பதாகக் கூறு வார்கள். பெற்றெடுத்த தாயின் மனம் தன் குழந்தையின் மழலைமொழி கேட்கவும் சிரிப்பொலி கேட்கவுமே ஏங்கிக்கிடக்கின்றது. தாய் தன் நகைமுகம் காட்டிக் காட்டிக் குழந்தையிடத்தில் சிரிப்பை உதிரச் செய்கின்றாள். குழந்தையின் சிரிப்பே, தாய்க்கு உண்மையான நீக்கமுடியாத மகிழ்ச்சியாக அமைந்து விடுகின்றது.

அடுத்துக் காதலர் உலகத்திற்கு வருகின்றோம். காதலே, கண்ணொடு கண்ணிணை நோக்கித் தோன்றிடும் புன்சிரிப்பில் தானே பிறக்கின்றது. சிரிப்பு இல்லையென்றால் காதல் என்பதே உலகத்தில் இல்லாமற் போயிருக்கலாம். சங்கப் பாடல்களில் அகப் பாடல்கள் அனைத்தும் இதனைத்தானே பாடுகின்றன.

இதற்குப் பின்னர், காதலைக் கைப்பிடித்துக் குடும்பம் நடத்தும் நிலை வந்த விருந்தி னரை வரவேற்கவேண்டும். திருவள்ளுவரும் இல்லறத்தைப் பேச வந்த இடத்தில், அன் புடைமைக்கு அடுத்து விருந்து போற்றும் வேளாண்மையைப் பேசுகின்றார். இந்த வேள் விக்கு அடிப்படையாக வேண்டுவது நகைமுகம் என்பதனைத் தமக்கே உரிய முறை யில் விளக்குவதைக் காணலாம். இது குறித்துப் பழமொழிகள் உண்டு. வெந்த முகத்தைக் காட்டு; வந்த விருந்தினரை ஓட்டு.

விருந்தினரை வரவேற்பதில் நாட்டுக்கு நாடு வித்தியாசம். நமது நாட்டில் அதிகமாகப் பேசாது போனாலும் நகைமுகங்காட்ட வேண்டும். புன்முறுவல் உதிர்த்து விருந்தினரை வரவேற்க வேண்டும். இல்லையேல் விருந்தினரின் முகம் வாடிவிடும்.

அடுத்து, வாழ்க்கையில் சிரிப்பு பெறும் இடத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ‘சிரித்து பகைவனை வெல்லத் தெரியாதவன் ஒரு பேதை’ என்று ஒரு பழமொழி உண்டு. ‘சிரித்து வந்த தொல்லையை ஓட்டு’ என்பார்கள். நம்நாட்டில் மட்டுமல்லாமல் உலகம் எங்கும் உள்ள சான்றோர்கள் அனைவருமே சிரிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். திருவள்ளுவர் ‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்றார். வந்த துன்பத்தின் எதிரில் சிரித்து, நான் எதற்கும் அஞ்சமாட்டேன் என்ற உன்னுடைய மனநிலையினைக் காட்டு; உரம் பெறுக; ஒளி பெறுக என்று கூறாமல் கூறியுள்ளார்.

### எள்ளல்

ஓர் அரசியல்வாதி, லஞ்ச ஒழிப்பு மாநாடு ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் பேசினார். கையூட்டு வாங்குவோரைக் கடுமையாகத் தாக்கிப்பேசினார். எல்லோரும் கேட்டு அசந்து போனார்கள். அவர் பேச்சைக் கேட்டுக் கூட்டம் முடிந்தபின்னர், ஒருவன் அவரிடம் சென்று, தம் மகனுக்கு யாரிடமாவது சிபாரிசு செய்து, நல்லதொரு வேலை வாங்கிக் கொடுங்கள் என்றான். உடனே, அவர் எனக்கு எவ்வளவு பணம் தருவாய் என்றார், அவர் பேச்சு ஊருக்கு உபதேசம்.

கணவனும் மனைவியும் நண்பர் ஒருவர் வீட்டுக்கு ஒருநாள் விருந்து சாப்பிடப் போனார்கள். இடநெருக்கடி, பந்திக்கு முந்திக்கோ, படைக்குப் பிந்திக்கோ என்பதனை மறந்தனர். மெதுவாகப் போனதால் பந்தியில் கடைசியில் தான் இடமும் கிடைத்தது. கூட்டம் அதிகமாக இருந்ததால், இவன் மனைவிக்குப் பறிமாறும் வேலை கொடுத்தார் கள். பறிமாறும் ஆள் நம் ஆளாக இருந்ததால், பந்தியில் முன்னே இருந்தால் என்ன? கடைசியில் இருந்தால் என்ன? என்று நினைத்துக் கொண்டான் கணவன். மனைவி நெய்யை ஊற்றிக்கொண்டே வந்தாள். தன் வீட்டில் செய்வது போலவே சொட்டுச் சொட்டாக நெய்யைப் போடுவாளோ என்று நினைத்த அவனுக்கு ஓர் ஏமாற்றம்! வாரி வாரி ஊற்றினாள். அயலார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டிக் கையே என்று மனத் திற்குள் நினைத்து உவகை பூத்தான். பந்தியின் கடைசியில் உட்கார்ந்ததால் ஒன்றும் இழப்பில்லையே!

ஒரு பிச்சைக்காரன் பல வீடு சென்றான். பிச்சை கேட்டான். யாரும் போடவில்லை. என்ன செய்வது என்று விழித்துக் கொண்டிருந்தான். ஓர் அம்மா வந்தார். அவனது பட்டினி நிலையை உணர்ந்து வருந்தினார். இருக்கும் பழங்கஞ்சியையும் ஊற்றிவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது பழஞ்சோறு இருந்தால்போடு பசிக்காமலிக்க வரம் தருகிறேன் என்றானாம்.

நமது நாட்டில் ஒப்பாரிவைத்து அழுவது ஒரு கலையாக வளர்ந்துவிட்டது. செத்தவ னுக்குச் சீரிட்டு அழு என்பது தமிழர்க்கே உரிய பண்பாடு. செத்த உடனே தூக்கிக் கொண்டுபோய்த் தகனம் செய்துவிட்டு மறந்துவிட மாட்டோம். பழமொழி கூறும் பண்பாடு இது. இந்த நிலையில், ஓர் ஆச்சியார் வந்தார். பாட ஆரம்பித்தார். ஒப்பாரி முடிக்க வில்லை. பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த தாய்மார்கள் சிலர் சற்றுக் கிண்டலாகக்

‘கலியாண வீட்டுக்குப்போனாலே கட்டி அழுகிறவள்

எழவு வீடு கிடைத்துவிட்டால் என்ன செய்ய மாட்டாள்’ என்றனர்.

## பழமொழிகள்

- அரைப்படி அன்னதானம் விடிய விடியச் செய்தானாம்.
- ஏண்டா விழுந்தாய் என்றால் கரணம் போட்டுப் பார்த்தேன் என்றானாம்.

- கரடிக்கற்றவனை ஏண்டா இடறிவிழுந்தாய் என்றால், அதுவும் ஒரு வித்தை என்றானாம்.
- கடல் வற்றிக் கருவாடு தின்னலாம் எனக் காத்திருந்து உடல் வற்றிச் செத்ததாம் கொக்கு.
- எள் விழுந்தால் எடுக்க மகாசேனை, ஆள் விழுந்தால் எடுக்க ஆள் இல்லை.
- கையைப் பிடித்துத் தூக்கிவிடு, பிணக்காடாக்கி விடுகிறேன்.
- இஞ்சி என்றால் தெரியாதா எலுமிச்சைப்பழம் போல் இனிப்பாக இருக்கும்.
- நாதசுரம் தெரியாதா? மத்தளம் போலக் கலகல என்று இருக்கும்.
- பஞ்சபாண்டவர் என்றால் தெரியாதா? கட்டில் காலைப்போல மூன்று என்று சொல்லி, இரண்டு விரலைக்காட்டி, ஒன்று எழுதி, அதையும் அழுத்தி விட்டானாம்.
- வீடுபற்றி எரிகின்றது; நல்ல நேரம் பார்த்துக் கிணறுதோண்டித் தண்ணீர் கொண்டுவா, எரிகின்ற நெருப்பை அவிப்போம் என்றானாம்.
- யோக்கியா, யோக்கியா வீடு பார்த்துக்கொள் என்றால், எனக்கு இருப்பது திருட்டுக்கை, வீட்டைப்பூட்டிவை என்றானாம்.
- காட்டுக்குள் இருந்து கைகாட்டும் கள்ளி, காக்கா பறக்கக் கண்டு திடுக்கிட்டுப் போனேன் என்றாளாம்.
- காக்கைக்குச் சோறு வைக்கக் காதவழி போனானாம் ஒருவன்.
- யானை காணாமல் போய்விட்டது என்று குண்டு சட்டியில் கைவிட்டுத் துழா வித் துழாவிப் பார்த்தானாம்.
- அவள் பெயர் கூந்தல் அழகி; தலை மொட்டை.
- ஒளிக்கும் சேவகனுக்கு மீசை முறுக்கிட ஒன்பது ஆளாம்.
- அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச்சொன்னால், வெங்காயம், வெண்டைக்காய் என்று பாடினாளாம்..
- மதுரையில் அடிபட்ட சூரனுக்கு மானாமதுரையில் மீசை துடித்ததாம்.
- மத்தளம் பொத்தல் என்று சிற்றெறும்புத் தோலால் மூடினானாம்.
- ஆண்டியும் ஆண்டியும் கட்டிப்புரண்டால், சாம்பலும் சாம்பலும்தான் ஒட்டிக் கொள்ளும்.

## முடிவுரை

தமிழர்கள், இறைவனாரின் திருமுகத்தில் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்புக் காண வேண்டும் என்பதே பெருநோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இறைவன் முகத்தில் காணப்படும் புன்சிரிப்பினைத் தம் வாழ்க்கையிலும் கண்டு, அந்தச் சிரிப்பி னையே ஏழையின் புன்சிரிப்பிலும் கண்டு, இறைவனைக் காணத்துடித்த தமிழ்நாட்டில், நகைச்சுவை தரும் பழமொழிகளுக்கு அளவே இல்லை. அவைகொண்டு சிரித்துப் பிறரையும் சிரிக்க வைத்து, உலகம் வாழ, நாமும் வாழ்ந்தோங்குவோமாக.

– ப. முருகன்

## செயல்பாடுகள்

- நும் பாடப்பகுதியின் வழிநின்று கருத்துக்களைத் திரட்டி வாழ்க்கையின் விமர்சனமே பழமொழிகள் என்னும் தலைப்பில் சொற்பொழிவுக்கான கருத்துக்களைத் தயார் செய்க.
- உமது பகுதியில் வழங்கும் பழமொழிகளைத் திரட்டி உள்ளடக்க அடிப்படையில் வகைப்படுத்துக.
- 'பழமொழியும் அறிவியலும்' என்ற அடிப்படையில் ஒரு கட்டுரை தயார் செய்க.
- "ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழி நேர்பொருள் மட்டுமின்றி வேறு மறைபொருளையும் தருகிறது. இதுபோன்ற வேறு பழமொழிகளைத் திரட்டுக.
- நாட்டுப்புற இலக்கியங்களில் பயின்று வந்துள்ள பேச்சு வழக்குச் சொற்களைத் திரட்டி, வரிசைப்படுத்தி, இணையான தூய தமிழ்ச் சொற்களை எழுதி ஒரு அகராதி தயார் செய்க.
- இவ்வலகின் துணைகொண்டு ஒரு 'நாட்டுப்புற இதழ்' தயார் செய்க. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தவும்.

  தலையங்கம்
  வாய்மொழிப்பாடல்கள்
  கதைப்பாடல்கள்
  பழமொழிகள், விடுகதைகள்
  நாட்டுப்புறக்கலை வடிவங்கள்

- கீழ்வரும் ஆங்கிலப் பழமொழிகளை மொழியாக்கம் செய்க.

  A crying child obtains milk.
  Empty Vessels make most sound.
  Money makes many things.
  Unity is strength.
  Barking dogs seldom bite.
  Even the elephants slips.

# தோல்பாவைக் கலைஞருடன் ஒருநாள்

**பரமசிவராவ்! இந்தக் கலையை நடத்துவதற்கு ஆட்கள் இல்லாததனால் இது அழிஞ்சு போகும்னு நினைக்கிறீங்களா?**

அதுவும் முக்கியமான காரணம்தான். அதோட இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்களுக்குத் தோல்பாவைக் கூத்துக் கதைகள் எல்லாம் தெரியவும் இல்லை. இவங்க பெரும்பாலும் ராமாயணக் கதையை நடத்துவாங்க. மயில்ராவணன் கதை, மச்சவல்லபன் போர் போன்ற கூத்துகளுக்கு இப்போ படங்களே இல்லையே. அந்தக் கதைகள் தெரியவும் தெரியாது. அதோடு இன்னொரு முக்கியமான விஷயத்த நீங்க கவனிக்கணும். இந்தக் கலையை நடத்தும் சாதிக்காரங்களின் கட்டுப்பாடு, இவங்க ஒழுக்கம், பொருளாதார நிலை, எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட போக்கு, அந்தஸ்து இல்லாத நிலை இப்படி எல்லாவற்றையும் கணக்கெடுத்த பிறகுதான் இந்த முடிவுக்கு வாறேன்.

கூத்து நடத்துறதையே இவங்க கேவலமா நினைக்க ஆரம்பிச்சிட்டாங்க. ரிக்கார்டு டேன்ஸ் ஆடுறதிலே கிடைக்கிற வரும்படியில் கால்பங்குதான் கூத்துல கிடக்குது. இன்னும் யோசிச்சுச் சொன்னா இந்த ரிக்கார்டு டேன்சாலேயே இந்தக் கலை அழிஞ்சு போகும்னு சொல்லலாம்.

**இதக் கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்.**

வள்ளியூர் பக்கம் என் மகனும், மருமகளும் ரிக்கார்டு டேன்ஸ் ஆடிக்கிட்டிருக்காங்க. ஒரு நாளைக்கு 3 – 4 பக்கா அரிசியும், 50 முதல் 100 ரூபாயும் கிடைக்கும். இதுல ரஜினி பாட்டு, கமல் பாட்டு, சரத்குமார் பாட்டுன்னு மாறி மாறி ஆடுனா ஊர்ல உள்ள இளம் பிள்ளைகளெல்லாம் போட்டி போட்டு கிட்டு கொடுக்கிற பணம் இருக்கே அது 10 நாள் கூத்து நடத்தினாலும் கிடைக்காது.



இப்ப எங்க சாதிக்காரங்கள்ள சில இளைஞர்கள் கணியான் கூத்துல பெண் வேஷம் போட்டு ஆடப் போறாங்க. இதுல நல்ல வருமானம். கணியான் சாதிய அரசாங்கம் பழங்குடி மக்களா அறிவிச்சதனால அவங்கள்ள பலபேரு அரசு வேலக்குப் போயிட் டாங்க. அதனால அங்க பெண் வேஷம் போட மகுடம் கட்டி ஆட ஆட்கள் இல்ல. எங்க ஆளுகதான் போறாக.

### தமிழகத்துல தோல்பாவைக் கூத்து கலையை நடத்துறவங்க எங்கெல்லாம் இருக்கி றாங்க?

நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவில்பட்டி, தென்காசி, ராமநாத புரம் ஆகிய நகரங்களை அடுத்த கிராமங்கள்ள புறம்போக்கு நிலங்கள்ள இவங்க குடியிருக்காங்க. நாகர்கோவிலை அடுத்த தம்மத்துக்கோணத்தில் ஒரு குடும்பமும், திருமலாபுரத்தில் 11 குடும்பங்களும், வடக்கு நுள்ளிவிளை, மகாதானபுரம் ஆகிய இடங்களில் 4 குடும்பங்களும் ஆக 16 குடும்பங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்கின்றன. திருநெல்வேலியை அடுத்த பகுதியில் 3 குடும்பங்களும், கோவில் பட்டி மந்திதோப்பில் 40 குடும்பங்களும் மதுரையிலும் அடுத்தடுத்த பகுதிகளில் 14 குடும்பங்களும் தென்காசியில் ஒரு குடும்பமும் ஆக 84 குடும்பங்கள் தமிழகத் தில் வாழ்கின்றன.

### தோல்பாவைக்கூத்து நடத்துறவங்க சுமாரா எவ்வளவு பேர் இருப்பாங்க?

ரொம்பக் குறைவான ஆளுங்க தான் இப்போ இந்தக் கலைய நடத்துறாங்க. நாகர் கோவில்ல ஆறு குடும்பங்களும், கோவில்பட்டி மதுரை பகுதியில் 5 குடும்பங்க ளும் ராமநாதபுரத்துல ஒரு குடும்பமும் ஆக 12 குடும்பங்கள்தான் இந்தக் கலையை நடத்திக்கிட்டு இருக்காங்கன்னு உத்தேசமாச் சொல்லலாம்.

### மற்றவங்க?

ரிக்கார்டு டேன்ஸ், பலூன், பேன்சி பொருள் விற்பனை இப்படித்தான். ஐந்தாறு குடும் பங்கள் கூலிவேலை செய்யுறாங்க. மண்டிகர் சாதிக்காரங்க உடலுழைப்பில் விருப் பம் இல்லாதவங்க செய்யவும் முடியாதவங்க. வலிமையும் இல்ல. இவங்களுக்கு பலூன், பேன்சி விளையாட்டுப் பொருட்கள் வியாபாரத்தில் கிடைக்கிற லாபம் அதி கம்தான். இந்தத் தொழில்ல இவங்க ஓரளவு நல்லபடியா வாழுறாங்க. தோல்பாவைக் கூத்த நடத்துறவங்க மட்டும்தான் ஜீவனத்துக்குக் கஷ்டப்படுறாங்க. இதனால இந்தக் கலை கூடிய சீக்கிரம் அழிஞ்சு போகும்.

### கதை நடத்த ஆரம்பிக்கும்போது ஏதாவது சடங்கு உண்டா?

அப்பா காலத்துல 30 – 40 வருஷங்களுக்கு முன்னால சடங்கு நடந்திருக்கு. கூத்து ஆரம்பிக்கும் முன்னால கூத்து அரங்கிற்குள் உள்ளால இலைபோட்டுப் பழம், வெற் றிலை, பாக்கு, அவல், பொறி, கடலை, சாணிப்பிள்ளையார் வைத்துச் சூடம் காட்டி கூத்து நடத்துபவர் பூசை பண்ணுவார். பிறகுதான் கூத்தை ஆரம்பிப்பார். ஒவ்வொரு நாளும் இது நடக்கும்.

### கத நடக்கிறப்போ இது மாதிரி வேற ஏதாவது சடங்கு நடக்குமா?

கிடையாது. ஆனா இராமர் பட்டாபிஷேக கதை நடக்கிறப்போ கூத்து நடக்கும் சமயத்துல ஊர்க்காரங்க இராமர் படத்துக்கு வேட்டி சீதைக்கு சேலை கொடுப்பாங்க. இராமர் காட்டுக்குப் போறப்போ – இராமர் பட்டாபிஷேகம் நடக்கிறப்போ ஊர்க்காரங்க மரியாதையா இருப்பாங்க. இதெல்லாம் ரெம்ப வருஷத்துக்கு முன்னாலே. அப்ப பாவைக்கூத்துக்காரங்களுக்கு இராமாயணம் பேருல மதிப்பு இருந்த சமயம். பாக்குற ஆளுக்கும் மதிப்பு இருந்தது.

### தோல்பாவைகளை வரையும்போது ஏதாவது சடங்குகள் உண்டா?

கிடையாது. எங்க தாத்தா காலத்திலிருந்தே இருந்ததா நினைவில்லை.

### பொதுவா கூத்து நடத்த எத்தனை பேர் வேண்டும்?

இதுக்கு கணக்கு இல்லை. அந்தக் குடும்பத்துல உள்ள எண்ணிக்கையைப் பொறுத்தது அது. கூத்து நடத்துறவரு மிருதங்கம் அல்லது கொட்டு அடிக்கிறவரு – சுதி போடுறவரு, தாளக்கட்டை, கஞ்சிறா, பின்பாட்டு இப்படி ஆக 8 – 9 பேர். ஆளு கொறஞ்ச குடும்பமுன்னா கூத்து நடத்துறவரு – மிருதங்கம் சுதி தாளக்கட்டை ஆக 4 – 5 பேர்கள வச்சு நடக்கும். எங்களுக்குப் பெரிய குடும்பமா நிறையப் பிள்ளைகள் இருந்தா நல்லதுன்னு நினைச்ச காலம் அது. எங்கள் நாணிதாலா பூசையின்போதும் நிறையக் குழந்தைகள் பெறனும்ன்னு அம்மன வேண்டிக்குவோம்.

### பாவுரா எப்படி இருக்கும்?

பாவுராவு வாயால் இசைக்கும் கருவி. பாவார் என்றும் இதைச் சொல்வார்கள். இது மராட்டியர் சொல். ஓலை மூங்கிலின் நடுவே பிளாஸ்டிக் பேப்பரை வைத்து இதைச் செய்கிறோம். ராட்சதர்கள் சண்டை போடுகிற காட்சியிலும் பாணம் ஆகாயத்தில் பறக்கிற போதும் பொதுவான சண்டைக் காட்சியிலும் இதைப் பயன்படுத்துவோம்.

### காலுல கட்டய கட்டியிருப்பிங்களா? எப்படி அடிப்பீங்க?

ராட்சதர்கள் சண்டையிடப்பட்ட சமயத்துலேயும் வேறு கோரமான காட்சியிலேயும் கட்டய அடிச்சுக் காட்டுவோம். மைக் இல்லாத காலங்கள்ள கட்டை தட்டும் வழக்கம் கூடுதலா இருந்தது. இப்போ இது மைக்குக்கு இடஞ்சலா நெனக்கிறார்கள். ஆக கூத்து நடத்துறவரு பாவுராசலங்கை, மணி, கூத்துக் காலுகட்டை ஆக மூணு இசைக் கருவிகளையும் இசைப்பாரு. இவை போக வசனம் பேசுறதும் பாவைகளை ஆட்டுறதும் இவர் வேலைதான்.

### கதை நடத்துறப்போ நீங்க பாடுற பாட்டுகளெல்லாம் மரபு வழியா பாடறதுதானா?

ஆமா. அப்பா, தாத்தா பாடுற பாட்டக்கேட்டு மனப்பாடம் பண்ணி பாடுறதுதான். நாங்க படிப்பறிவு இல்லாதவங்கதானே. புத்தகத்தப் படிச்சு எப்படிப் பாட முடியும். நாங்க பாடுற பாட்டுகளக் கேட்டு படிச்சவங்க இது கம்பராமாயணப் பாட்டுன்னு சொல்லிக் கேட்டு இருக்கேன்.

## மராட்டியப் பாடல் இடையில பாடுறிங்களே?

அந்தக் காலத்துல சில மராட்டியப் பாடல்களா இடையிடையே பாடினோம். இப்போ ஒண்ணோ ரெண்டோ பாடலப் பாடுறோம்.

## கதை ஆரம்பத்துல எந்த மாதிரிப் பாடலைப் பாடுறிங்க?

விநாயகர் சரஸ்வதி துதி, விகடராஜன் பாட்டு.

"விகடரனார் பாட்டக் கேளுங்க
நரைத்திடும் மீசை தாடி
நரசிங்கம் பல்லைக்காட்டி
கரத்திலே தடியை ஊன்றி
வீணாய் பேச்சுப் பேசி
விகடராஜன் சபைதனிலே வருணிக்கிறானே"

## கூத்து நடத்துறதுக்குன்னு எவ்வளவு நேரம் எடுத்துக்கிறீங்க?

50 – 60 வருஷங்களுக்கு முன்னால கதையை விடிய விடிய நடத்துவோம். ராத்திரி பத்து மணிக்கு ஆரம்பிச்சா விடிய விடிய நடத்தி 4 – 5 மணிக்குக் கதையை முடிப் போம். அப்போ மைக் கிடையாது. 12 கட்டயில ரொம்பச் சத்தமா பாடணும். பேசணும். இடையில கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கிடுவோம். அப்போ எல்லாம் 2 – 3 நாள் விட்டு விட்டுத்தான் கூத்து நடக்கும். ஊர்க்காரங்க எண்ணெய், கோழி, அரிசின்னு தருவாங்க. எண்ணெய் தேய்த்துக்குளி கட்டாயம் உண்டு. கோழி, ஆட்டிறைச்சிச் சாப்பாடு உண்டு. ஒரு ஊருல 30 – 40 நாட்கள் தங்குவோம். அந்தக் காலத்துல என்கூட (சுப்பையா ராவ்) கதை நடத்துறவங்கள்ள மதுரை காளமேகராவ், திருச் செந்தூர் செல்லையா ராவ், திருநெல்வேலி கணேசராவ் இவங்கள சொல்லலாம்.

## படம் குறைவா இருந்தா கதையச் சுருக்குவீங்களா?

இல்லை. பார்க்கிற கூட்டம் வசூலப் பொறுத்துக் கதைய நீட்டுறதும் சுருக்கிறதும். எங்க அப்பா கோபாலராவ் 5 பேரு இருந்தாலும் கதைய முழுதும் நடத்து வாரு. பொதுவா 1 – 2 மணிக்கூரா கதைய நடத்துற பழக்கம் இப்ப இருக்கு. அப்ப மாதிரியில்ல, இப்போ ரசனையும் ஒரு விஷயத்த நீங்க கவனிக்கணும் இந்தக் கூத்துல படத்தைவிட வசனம் – பாட்டு தமாசுதான் முக்கியம். எங்க அப்பா அந்தக் காலத்துல விடிய விடியக் கதை நடத்துறப்போ உள்ள படங்களைத்தான் இன்னும் வச்சிருக்கோம். இந்தப் படங்களை ஆட்டுற முறை சொல்ற கதை பாடுற பாட்டு எல்லாம் பழசுதான். சில தமாசு சில அட்டைப்படங்க, சினிமாப் பாட்டு எல்லாம் புதுசுதான். இதுல வாய்ச் சாமர்த்தியம், குரல மாத்றது – காலங்காலமா வர்ற கதையை உணர்ச்சியோட பேசுறது இதுக்கு எல்லாம் சேர்த்துதானே மதிப்பு. இதுல குரல மாத்திப் பேசுறது முக்கியம்.

## அப்போது கூத்து அரங்கம் இப்ப மாதிரிதான் இருந்ததா?

இல்ல. இப்ப மாதிரி இல்ல. அப்போ எல்லாமே ஓலையிலதான் கட்டுவோம். ஒரு ஊர்ல வந்து நடத்தி முடிச்சதும் அடுத்த ஊர் எதுங்கிறதா முன்னக்காட்டியே தீர்மா னிச்சுக்கிறோம். ஒண்ணோ ரெண்டோ பேர் அந்த ஊருக்குப்போய் கதை நடத்துற இடத்தைப் பார்த்து ஊர்க்காரங்கிட்டப் பேசி முடிவு பண்ணிகிட்டு வந்து விடுவாங்க. ஊர்க்காரங்களே ஓலைகளைக் கொடுப்பாங்க. சில சமயம் வந்து நடத்துறவங்களே விலைக்கு வாங்கி விடுவாங்க. கத நடத்துற இடத்தச் சுத்தி ஓலை கட்டுவாங்க. கூத்து அரங்க நல்லாவே கட்டணும். ஏன்னா பாவைக் கூத்துக்காரங்களுக்கு எல்லாமே அந்த இடம்தானே. படங்களைப் பாதுகாக்குற இடம் - குழந்தைகளைத் தூங்க வைக்கிற இடம் - அத்தியாவசியப் பொருட்களைப் பாதுகாப்பா வைக்கிற இடம் எல்லாமே அது தானே. வந்து நடத்துறவங்களின் வீடுன்னு அத வச்சு விடுவாங்க. அதனால அத நல்லாவே கட்டிருவாங்க.

ஒரு ஊரிலே கூத்து முடிஞ்சதும் ஓலைகளையும் கம்புகளையும் அந்த ஊரிலேயே கொடுத்திடுவாங்க. ஏன்னா அதே வண்டியில தூக்கிகிட்டுப் போகமுடியாது. வண்டி பாரமே சரியா இருக்கும் ஒத்தைக்காளை தானே கட்டியிருப்பாங்க.

## மைக் செட்ட பாவைக்கூத்துல உத்தேசமாக எந்தக் காலத்துலப் பயன்ப டுத்துனீங்க?

மதுரையில் 1960 வாக்கில வந்திருக்கணும். ஏன்னா ராவுக்கு ஒத்தக் குழவின்னு பட்டப்பெயர் வச்சோம். அவருதான் முதல்ல குழாய் வாங்கி மைகு வச்சு அதை நடத்தினாரு. நாகர்கோவில்ல 1968 வாக்குல நான் (பரமசிவராவ்) அண்ணன்மார் கள் ராமசந்திரராவ், கணேசராவ் ஆக மூணுபேரும் 300 ரூபாய் கொடுத்து ஒரு ஸ்பீக்கர் செட்காரங்கிட்ட இருந்து மைக், ஸ்பீக்கர் எல்லாம் வாங்கினோம்.

## மைக் வரும் முன்னால எந்த மாதிரியான விளக்கை வச்சுருந்தீங்க?

அந்தக் காலத்துல புன்னக்காயி எண்ணெய் விளக்குலதான் கூத்து நடக்கும். விளக்க மண்ணால செய்திருப்போம். இப்போ பானைகளை மூடிவைக்கிற உலை மூடிச் சட் டியிருக்கே அது மாதிரி சின்னதா இருக்கும். அதை வைக்கிறதுக்கு வீதியா வட்டமா ஒரு இரும்புத் தட்டு உண்டு. அந்தத் தட்டுக்கு மேல சாணிய வச்சு அதுக்கு மேல மண் சட்டிய வைப்போம். சாணிமேல் மண் சட்டிய வச்சா எண்ணெயைக் குடிக்காது பாருங்க. இரும்புத் தட்டுல நீளமாகக் கம்பி பொருத்தியிருக்கும். அந்தக் கம்பியின் வளைஞ்ச பாகத்தைக் கூரை மேலே கொளுத்தி வச்சிருப்பா. இந்த விளக்கு கூத்து நிகழ்த்துற அரங்குல திரைச்சீலையை ஒட்டி நேராகத் தொங்கவிட்டு இருக்கும். கூத்து நிகழ்த்துறவரின் தலைக்கு மேலா ஒரு அடிக்கு மேல இது தொங்கும். மண் சட்டி யிலே அரைப்படி எண்ணெய் விடுவாங்க. சுண்டுவிரல் அளவு உள்ள துணித்திரி கள் இருக்கும். திரிகள் எல்லாலமே திரைச்சீலையைப் பார்த்து இருக்கும். எண்ணெய் தீர்ந்ததுன்னா கூத்து நடத்துறவரே விட்டு விடுவாரு. அவரு காலுக்குக் கீழ் மூலை யில் ஒரு பானையில் புன்னைக்காய் எண்ணெயும், இன்னொரு பானையில் கள்ளும் இருக்கும். எண்ணெய் தீரத் தீர ஊர்காரங்க நிரப்பி விடுவாங்க.

இந்த விளக்குல நிறைய அபாயம் இருக்கு. இராம இராவண யுத்தம் சூர்பனகை யுத்தம், அனுமான் யுத்தம் எல்லாம் நடக்கிறப்போ பாணம் விடுறப்போ பாணம் விளக்குல பட்டு சூடான எண்ணெய் கூத்து நடத்துறவரு மேல பட்டிருக்கு. திரி கரண்டு (ஒளி குறைந்து) வர்ற சமயத்துல சாமணம் வச்சு திரியத் தூண்டி விடுவாரு. எண்ணெயும் நிரப்பிவிடுவார். அப்ப ஒரு பக்கா எண்ணெய் 1 அணா தானே. ஒரு நாள் கூத்துக்கு 2 அணா எண்ணெய் வரை ஆகும். எண்ணெய் ஊர்க்காரங்கதானே அப்ப தந்தாங்க. இந்த எண்ணெய் வெளிச்சத்துலே திரையில தோல்பாவைகள் எல்லாம் நல்லாத் தெரியும். இப்ப என்ன தான் 100 – 500 வாட்டு பல்பு போட்டாலும் அந்தப் புன்னெங்காய் எண்ணெய் வெளிச்சத்துக்கு வராது. பார்க்கிறவங்களுக்கும் கண்ணு குளுமையா இருக்கும். கூத்து நடத்துற இடத்துல கூட கூத்து நடத்துறவருக்கு, வெக்க தெரியாது. இப்ப இந்த பல்பு வெளிச்சத்துல இருக்க முடியல்ல. அதுனாலதான் கூத்து நடத்துற இடத்துல வெறும் வேட்டிய மட்டும் தாறுபாய்ச்சிகிட்டு ஒக்காந்திருக்கோம். எண்ணெய் விளக்கு இருக்கச்சிலேயே சிலபேரு பெட்ரோமாக்ஸ் விளக்கப் பயன்படுத்தினாங்க. அதுவும் கரண்டு விளக்கு மாதிரிதான். வெக்கையும் வெளிச்சமும் பெரிய வித்தியாசம் ஒண்ணும் இல்ல. இப்ப சிலபேரு பெட்ரோமாக்ஸ் விளக்கு வச்சுக்கிறாங்க.

### கூத்து நடத்துற இடத்துல உள்ள விளக்கு தவிர வேறு விளக்கு உண்டா?

உண்டு ஒரு அரிக்கன் விளக்கு டிக்கட் குடுக்கிற இடத்துல வச்சிருப்போம். கூத்து நடக்குற இடத்துலேயும் விளக்கு இருக்கும். கூத்து நடத்துற அரங்குக்கு வெளியே கடலை வியாபாரம் பண்ணுறவங்க விளக்கு வச்சிருப்பாங்க. ராத்திரி கூத்து முடிஞ்சதும் அரிக்கன் விளக்க விடியு மட்டும் எரிய வச்சிருப்போம்.

### அந்தக்காலத்துல ஒரு இடத்துல கூத்துப் போடுறதுக்கு எப்படி விளம்பரப்படுத்தினீங்க?

ஊர்ல கூத்து நடத்துகிற இடத்த கேட்கிறப்போ ஓலை கட்டுறப்போ ஊர்க்காரங்களுக்குத் தெரிஞ்சு போகும். பாவைக்கூத்து நடக்குறதுன்னு கூத்து ஆரம்பிக்கிற முதல் நாளுல சாயங்காலம் ஒரு பையன் இராமர் படத்தையோ வேறு ஏதாவது படத்தையோ பிடிச்சுக்கிட்டுத் தெருவழியே போவான். அவன் பின்னால தண்டிரா அடிச்சுக்கிட்டு ஒருவன் இன்னிக்கு இராமன் பிறப்புன்னோ வாலி வதைன்னோ கதையச் சொல்லிகிட்டு போவான். எல்லா தெருக்களிலேயும் சென்ற பிறகு கூத்து நடத்துற இடத்துக்கு வருவாங்க. அங்கே வந்து தண்டிரோவை கூத்து ஆரம்பிக்கிறதுவரை தட்டிகிட்டு இருப்பாங்க. அந்த தட்டிப்படத்தைக் கூத்து நடத்துற இடத்துக்கு முன்னால தொங்கவிட்டிருவாங்க. சிலபேரு தண்டுராவுடன் தகரக் குழாய வச்சு நடக்கிற கதயச் சொல்லிக்கிட்டுப் போவாங்க.

### இப்ப எப்படி விளம்பரப்படுத்துறீங்க?

இப்போ அப்படி விளம்பரப்படுத்துறதில்ல. சாயங்காலம் 6 மணிக்கு கூத்துப் படுதாவுல 60 வால்ட் பல்பு ஒண்ணப்போடுவோம். ஸ்பீக்கர் போட்டுடுவோம். எல்லாம்

சினிமாப்பாட்டுதான். காசட் வச்சிருக்கோம். டேப்ரிக்கார்டர் இருக்கு. மைக்குல கூத்து நடத்துறத சொல்லிகிட்டே இருப்போம்.

### தோல்பாவைக் கூத்து படங்களை அந்தக் காலத்துல எப்படித் தயாரிச்சீங்க?

ஆட்டுத்தோலுலதான் படத்தத் தயாரிக்கிறோம். ஆட்டுத்தோல சாதாரண தண்ணீருல ஊறவைப்போம். 2, 3 நாள் ஊறினதும் தோலுல உள்ள முடிகளை முழுதும் எடுத்திருவோம். தோலு துணி மாதிரி ஆயிடும். அந்தத் தோல நல்லா விரிச்சு டெம்பரா தரையில வச்சு ஆணி அடிச்சிருவோம். அப்போ தோலு கசங்காது. 2 – 3 நாளுல காஞ்சுபோகும். டெம்பரா நிக்கும். அதுக்குமேல கரித் துண்டால வரைபடம் வரைஞ்சுக்குவோம். அதுக்குப் பொறகு நிறம் கொடுப்போம். கறுப்பு நிறத்த அரிக்கன் லேம்ப் விளக்குக்கு மேல உள்ள கரிப்பொடியில வேப்பம் பசையையும் தண்ணீரையும் விட்டு நல்லப் பிசைந்து தயாரிச்சுகிடுவோம். மற்ற நிறங்களைக் கடையில வாங்கிக்கிடுவோம். எல்லா நிறங்களையும் தனித்தனியா சிரட்டையில வச்சக் கலக்குவோம். அப்பாக்காலத்துலே இருந்து ஓலைச் சாயத்தை வாங்கிப் பயன்படுத்துனதா ஞாபகம். கறுப்பு நிறங்களக் கூட இப்ப வெளியில வாங்கிக்கிடுவோம். தோல்படங்கள்ள தண்ணீர் படாம இருந்தா 100 வருஷங்களுக்கு மேலே போகும். மழைச்சமயத்துல படங்கள் திரைச்சீலையில பட்டு நிறம் போறதுக்கு வாய்ப்பு உண்டு. அந்தக்காலத்துல படங்கள வைக்கிறதுக்குன்னு ஓலைப்பெட்டி உண்டு. நீளமான பெட்டி எல்லாப் படங்களும் அந்தப் பெட்டியிலதான் இருக்கும். இப்போ மரப் பெட்டியில படங்களை வைக்கிறோம்.

### இப்ப புதுசா தோலுல படம் வரையிறீங்களா? எப்படி?

இப்ப யாரு தோலுல படம் வரையுறா. பழைய படங்களைத்தான் எல்லோரும் வச்சுக்கிறாங்க. புதுசா வேணும்மின்னா அட்டையில தயாரிக்கிறாங்க. அந்தக் காலத்துல கோவில்ல ஆடு வெட்டுனா தோலு கிடைக்கும். ஊர்க்காரங்க ஆடுவெட்டுனா தோல இனாமாத் தருவாங்க. எங்க கலியாணங்களிலேயும் ஆடு வெட்டுவோம். தோலு கிடைக்கும். இப்ப எங்க கலியாணங்கள்ள வெட்டடப்பட்ட ஆட்டையே விலைக்குப் போட்டுறோம். அதோட ஆட்டுத்தோலை வாங்குறதுக்குன்னு ஏஜன்ட் இருக்காங்க. அவங்களுக்குத்தான் கசாப்புக்கடையில தோலக் கொடுக்கிறாங்க. 10– 13 வருஷங்களுக்கு முன்னால தோலுகளை ஏஜன்ட் வாங்கி வெளிநாட்டுக்கு அனுப்ப ஆரம்பிச்ச பொறகு தோலுவெல ஏறிப்போச்சு. தோலு வியாபாரம் தனியா பெருக ஆரம்பிச்ச பொறகு நாங்க அட்டையில வரைய ஆரம்பிச்சிட்டோம். ஆனா அட்டைப் படம் எத்தினி நாளைக்குப் போகும். நாலு அஞ்சு நாள் கதை நடத்தலாம். அவ்வளவுதான். இந்தத் தோலுகளுள்ள கூட மீட் தோலையோ (உப்பு வச்ச தோல்) உரைச்ச தொக்கரையோ (ஆகாத தோல்) நாங்க எடுக்கிறதில்ல. அதுல படம் வரைஞ்சா சரியாகிக்கிடாது.

## ஒரு குழுவிடம் உத்தேசமாக எத்தனை படங்கள் இருக்கும்?

அப்படிக் கணக்கு இல்லை. அவங்க எத்தனை கதை நடத்துறாங்களோ அதைப் பொறுத்துப் படங்கள் இருக்கும். இராமாயணக் கதையை எல்லோரும் நடத்துறதால இராமாயணப் படங்கள் எல்லாமே இருக்கும். இன்னும் அரிச்சந்திரன் கதை, மயில் ராவணன் கதை, மச்சவல்லபன் போர்க் கதைகளும் நல்லதங்கா கதையையும் பொதுவா எல்லோரும் நடத்துறாங்க. அதற்குள்ள படங்களெல்லாம் இருக்கும். மதுரை பக்கம் சில பேரு கோவிலன் சரித்திரம் நடத்துறாங்க. இந்தப் பக்கம் (குமரி மாவட்டம்) பரமசிவம் ஞானசௌந்திரி கதையை நடத்துறான். சிலபேரு அய்யப்ப சாமி கதைய நடத்துறாங்க. இப்படி யாரு யாரு என்ன மாதிரி கதை நடத்துறாங் களோ அந்த மாதிரியான படங்கள் இருக்கும். இந்தப் படங்கள்ள முக்கால் பங்கு தோலு படங்க, மீதி தாளுல இராமாயணக் கதைப்படம் பெரும்பாலும் தோலுல தான் இருக்கும். மத்த கதைகள்ள அட்டைப்படம் கூடுதலா இருக்கும். அதெல்லாம் புதுசா வந்தது பாருங்க. தமாசு காட்சிப்படங்களத் தோலுல வரைஞ்சுகிறோம். அது கள்ளாம் அடிக்கடி அடிபடும். அட்டப் படம்னா சரிப்பட்டுக்கிடாது பாருங்க.

## தோல்பாவைப் படங்களை நீங்க எப்படி மதிக்கிறீங்க?

ரெம்ப மரியாதையா வச்சுக்கிறோம். அந்தக் காலத்த மாதிரி இல்லையே இப்ப எல்லாம். கூத்து நடத்துறத விட்டுட்டாங்கன்னா படங்களை அடுத்த குடும்பத்துக்கு விலைக்குக் கொடுப்பாங்க. அல்லது ஆத்துல எறிஞ்சிடணும். எரிக்க மட்டும் கூடாது. பெரும்பாலும் இலவசமாத்தான் கொடுப்பாங்க. சில குடும்பங்க படத்தை விலைக்குக் கொடுத்திருக்கு. ஒரே குடும்பத்துக்குள்ளால கொடுக்கிறது நல்லது. அடுத்த குடும் பத்துல கொடுத்தா அது மோசமாயிரும். நம்ம படங்கள நிறுத்தி வச்சு அவங்க படங்களால அடிக்கிற மாதிரி காட்டி நம்மளக் கேவலப் படுத்துவானுக. ஒருத்தரு பொம்மயச் செய்து அவரு பேரச் சொல்லி அடிக்கிற மாதிரிதான் அது. அதனால படங்களக் கூடியதும் ஆத்துலதான் விடுறாங்க.

## ஒரே படத்தை எல்லா கதைகளுக்கும் பயன்படுத்துறீங்களா?

எல்லாப் படங்களையும் அப்படிப் பயன்படுத்துறதில்லை. இராமன், லட்சுமணன், சீதை படங்களை அப்படி வேற கதைகளுக்குப் பயன்படுத்துறதில்ல. தசரதன் படத்தை நல்லதங்காளின் அண்ணன் காசிராஜனுக்கும், அலங்காரி படத்தை சீதை யின் இலங்கைத் தோழிகளுக்கும் சந்திரமதி படத்தை நல்லதங்காளுக்கும் பயன் படுத்துறோம். இராமன் படத்தை வேறு கதைகளுக்குப் பயன்படுத்தினா கிழிஞ்சு போகும்னு நம்பிக்கை இருக்கு.

## தோல்பாவைக் கூத்துல பொதுவா எந்த மாதிரி கதைகளை நடத்துறீங்க?

எங்க அப்பா தாத்தா காலத்துல இருந்து இராமாயணம் சம்பந்தமான கதைகளத் தான் நடத்திகிட்டு வாறோம். இப்ப ஒரு கதயச் சொல்லியோ எழுதித் தந்தோ நடத்தச் சொன்னாலும் நடத்துறோம்.

**இராமாயணக் கதையை எத்தனை நாள் நடத்துறீங்க?**

இதுக்குன்னு நாள் கணக்கில்ல. பொதுவா இராமாயணக் கதைய 10 பகுதிகளாப் பிரிச்சிட்டு நடத்துறோம்.

முதல் பகுதியில் இராமன் பிறப்பையும், தாடகை வதையையும் நடத்துவோம். இரண்டாம் பகுதியில் இராமன் வில்லொடிப்பும் சீதா கலியாணமும் நடக்கும். மூன்றாம் பகுதியில் இராமர் வனம் செல்ற நிகழ்ச்சிகளைக் காட்டுவோம். நாலாம் பகுதி சூர்ப்பனகை யுத்தம். இதுல கொஞ்சம் நகைச்சுவை காட்சியை அதிகமா சேர்த்துக் காட்டுவோம். ஐந்தாம் பகுதி சீதையைச் சிறை எடுத்தல். ஆறாம் பகுதி வாலி சுக்ரீவன் யுத்தம் இதுல தமாஷ் காட்சிகள் அதிகம் வரும். ஏழாம் பகுதியில் அசோகவன யுத்தமும், இலங்கை தகனமும் வரும். இது சுந்தர காண்டக் காட்சிதான். சில சமயம் இத ரெண்டு நாளாத் தொடர்ந்து கூடப் போடுவோம். எட்டாம் பகுதி திருவணை கட்டல், இதை இராவணன் முதல்நாள் போர்ன்னு விளம்பரப்படுத்துவோம். ஒன்பதாம் பகுதி கும்பகர்ணன் யுத்தம். இது நடந்த அடுத்த நாள் மயில் ராவணன் கதையும் அதற்கடுத்த நாள் மச்சவல்லவன் போர் கதையும் நடக்கும். இது இரண்டு மூணு நாளாக நடக்கும். கடைசி நாளுல பட்டாபிஷேகம். இதுல இராவணன் யுத்தம் தொடங்கி முடிய பட்டாபிஷேகம் நடக்கும். இதுக்குப் பிறகு சில ஊருகள்ள அசுவமேதயாகம் கதையும் நடக்கும்.

இராமாயணம் பத்து நாள் கதையும் மற்ற மூணு கதைகளையும் ஆக 13 கதைகளையும் தாத்தா காலத்துல இருந்து நடத்துறோம். எங்க அப்பா கோபாலராவ் காலத்துல தான் அரிச்சந்திரன் கதையும் நல்லதங்காள் கதையும் நடத்த ஆரம்பிச்சாங்க. இந்த இரண்டு கதைகளையும் நடத்த ஆரம்பிச்சு கூடிப்போனா 70 – 80 வருஷம் இருக்கலாம்.

**அரிச்சந்திரன் கதையும், நல்லதங்காள் கதையும் அந்தக் காலத்துல நாடகங்களா நடிச்சிட்டு இருந்தாங்களே.**

ஆமா. எங்க அப்பா கோபாலராவுக்கு நாடகக்காரங்களோட தொடர்பு உண்டு. தூத்துக்குடியில கதை நடத்துறப்போ அப்ப நாடகக்காரங்களோட பேசிகிட்டு இருப்பதைப் பார்த்திருக்கேன். நல்லதங்காள் கதையை எங்க அப்பாவோ பெரியப்பாவோ சித்தப்பாவோ யாரோ ஒரு ஆளு நாடகத்தப் பாத்து நடத்தியிருக்கணும்னு நினைக்கிறேன்.

**நல்லதங்காள் கூத்துல வர்ற பாட்டு, நாடகத்துல உள்ளதா?**

இல்லை. எங்க அப்பாவோ பெரியப்பாவோ யாரோ ஒரு ஆளு கட்டியிருக்கணும். எப்படி அதெல்லாம் வந்ததுன்னு இப்ப சொல்ல முடியல்ல.

**பொதுவா கதை நடத்துறப்போ இராமாயணம் முழுதையும் ஒரேயடியா நடத்துறீங்களா? விட்டு விட்டு நடத்துறீங்களா?**

ஒரு நாள் விட்டு ஒரு நாள் நடத்துவோம். நல்ல தங்காள் கதைய இரண்டு தடவைகூட நடத்துறோம். அதுக்கு நல்ல கூட்டம் சேரும். வசூலும் நல்லா இருக்கும். 2 மணிநேரம் தொடர்ந்து எப்படிச் சத்தம்போட முடியும்? அதனால விட்டுவிட்டு நடத்துறோம்.

**கதைகளை மரபு வழியா கேட்டுகேட்டு நடத்துறீங்களா? இல்ல இதுக்குன்னு யாராவது எழுதி வச்சிருக்காங்களா?**

யாரு எழுதி வச்சுக்கிறாங்க? நாங்க எங்க படிப்போம்? எங்க சாதியில முதல்ல படிச்சவன் பரமசிவம் தம்பிதான் பி. ஏ. படிச்சான். பரமசிவம் எஸ். எஸ். எல் .சி.வரை படிச்சான்.

தாத்தா அப்பா காலத்துல பேசுறத பாடுறதக் கேட்டுக் கேட்டு வர்றதுதான் 70 வருஷம் முன்பு அப்பா கூட பாட ஆரம்பிச்சேன். எனக்கு (சுப்பையா ராவ்) அப்போ 12 வயது இருக்கும். அப்பவே நிறைய மனப்பாடம் அய்யாவே சொல்லியிருக்கா. தாத்தா கிருஷ்ணராவ் கதை நடத்துறத கேட்டு வந்ததுதான்னு அப்பாவுக்குத் திறமை இருந்ததால அவரே புதுசுபுதுசா சேர்த்துச் சொன்னாரு.

**பொதுவா தமாஷ் காட்சிகளை எப்படி நடத்துறீங்க. தமாஷ் காட்சிகளுக்குன்னு கூத்து நடத்துறது உண்டா?**

தமாஷ் காட்சிகளுக்குன்னு கூத்து நடத்துறது இல்ல. கதை நடத்துறப்போ இடையில தமாஷ் காட்சிகளைப் போடுவோம். அது கதையோட சேர்ந்தும் வரும்.

சூர்ப்பனகை யுத்தம், வாலிவதை, அசோகவனக் காட்சிகள்ள கொஞ்சம் கூடுதலா தமாஷ் காட்டுவோம். இராமர் மானத் தேடிப் போறப்போ, சூர்ப்பனகை மூக்கு அறுபடுறப்போ, நல்லதங்காள் காசி நாட்டுக்கு போறப்போ, திருடர்களைச் சந்திக்கிறப்போ, நல்லதம்பி ராஜன் வேட்டைக்குப் போறப்போ இப்படியான காட்சிகள்ள தமாசு காட்ட வசதியாயிருக்கும்.

இந்த தமாசு காட்சிகளை ஊருக்கு ஊரு வித்தியாசமாகக் காட்டுவோம். கோவில் பட்டி மணியாச்சி பக்கங்கள்ள உள்ள மல்லிப்பட்டி, குறிஞ்சான் பட்டி, அக்கநாய் கன்பட்டி, மலையப்பட்டி போன்ற கிராமங்கள்ள ஆட்டுச்சண்டை தமாசு நடத்துவோம். இதுக்குக் காரணம் இருக்கு. ரெண்டு ஆடுக சண்டை போடும்.

**தமாஷ் காட்சிகளை எப்படி ஜோடிக்கிறீங்க? அது தாத்தா அப்பா காலத்துல இருந்து வர்றதா? புதுசா ஜோடிக்கிறீங்களா?**

பொதுவா தமாஷ் காட்சிகளுல வர்றவங்களா உளுவத்தலைவன், உச்சிக்குடும்பன், கருப்பாயி, வைகாசி, அமிர்தம் எல்லாரையும் சொல்லலாம். இந்த அமிர்தம் உச்சிக் குடும்பனின் மனைவி. உளுவத் தலைவனும், உச்சிக் குடும்பனும் அண்ணன் தம்பி மாதிரி, நண்பர்கள் மாதிரி. இவங்க கதையோட கதையாவும் வருவாங்க. தனியாகவும் வருவாங்க. உளுவத்தலைவன் நல்லதம்பி ராஜனின் வேலைக் காரனாட்டும் வருவான்.

இராவண தர்பார் வேலைக்காரனாகட்டும் வருவன். தனிக் காட்சிகள்ளேயும் வருவான். இவங்க தனியாவந்து கதை சொல்லுவாங்க. விடுகதை சொல்லுவாங்க, பாடுவாங்க, கரகாட்டம் நடத்துவாங்க. இராமர் கல்யாணத்துக்குக் கரகாட்டம் நடக்கும்.

சில ஊர்கள்ள சில பேரு கூத்துப்படுதாவ நீக்கிக்கிட்டு கள்ளத்தனமா கூத்து பார்க்க வருவாங்க. சில பேரு செல்லாத நாணயத்தைக் கொடுத்திட்டு வந்து பார்க்க வருவாங்க.

உள்ளூர்காரரங்களான இவங்கள நாடோடிகளான நாங்க என்ன செய்ய முடியும்? உளுவன் வாயால உச்சித்தலைவயன் வாயால ஏசுற மாதிரி ஏசுவோம்.

அதத் தமாசாக் காட்டுவோம். தமாசுல பேசுற குரல், பொம்மை, ஆட்டுற விதம் எல்லாம் ரெம்ப முக்கியம். உளுவத்தலையன் – உச்சிக்குடும்பன் சம்பாஷனையில உச்சிக் குடும்பனுக்கு ரெம்ப முக்கியம் அவனுக்கு நாக்கு திருந்தாத குரல். அதனால அந்தக் காட்சி நல்லா எடுபடும்.

**தோல்பாவைக் கூத்து சிறுவர்களுக்கான கலைன்னு சொல்றாங்களே சரிதானா?**

இல்லை. இப்பதான் சிறுவர்களுக்கான கலையா மாறியிருக்கு. சினிமா வர்றதுக்கு முன்னால எனக்கு 20 – 25 வயசு இருக்கும். அப்போ பெரியவங்கதான் அதிகமா பாவைக்கூத்து பார்க்க வருவாங்க. ஊர்க்காரரங்களே இராமாயணக்கதைய முழுதும் நடத்தணும்ன்னு கேட்பாங்க. அப்ப இந்த மாதிரி நிறையத் தமாஷ் கிடையாது. உளுவத் தலைவனும் உச்சிக்குடும்பனும் உண்டு. அவங்க தமாசும் கதைய ஒட்டிதான் போகும்.

இப்போ கதை பாதி தமாஷ் பாதி ஆயிட்டுதே. அசோகவனக் காட்சியில அனுமன் கிட்ட உளுவன் தமாஷ் பண்ற காட்சி நீண்டுகிட்டே போகுதே. அப்போ ஒசந்த சாதிக்காரங்களும் கூத்து பார்க்க வருவாங்க.

இப்ப மாதிரி கொச்சை தமாசோ கொச்சை வார்த்தையோ பேசுறதில்ல. ஊரக்கண்டு அது அப்போ கதை நல்லாவே நடக்கும் கதைக்கு முக்கியம். இடையில கதையக் குறைச்சாலே ஊர்க்காரங்க விடமாட்டாங்க. அந்தக் காலமெல்லாம் போயி கதை போயி தனி தமாசாயி சின்னப்பிள்ளைகளைத் திருப்திபடுத்துற மாதிரி ஆயிட்டது எல்லாம் காலதோஷம்.

**சரி. இந்தக் கலையின் எதிர்காலம் எப்படி இருக்கும்.**

முதல்லயே இதத்தான் நான் சொன்னேன். அழிஞ்சு போகும்னு. மற்ற கலைகளெல்லாம் அழிஞ்சு போறதுக்குள்ள காரணம்தான் இதுக்கும்.

(கலைமாமணி பரமசிவராவ், இராமச்சந்திர ராவ், திருமலாபுரம் முத்துசந்திரன் ஆகியோருடன் நடத்திய பேட்டியின் குறுகிய வடிவம்).

**பேட்டி:**
**பரமசிவராவுடன்**
**–பேரா. அ. கா. பெருமாள்**

## செயல்பாடுகள்

- இப்பாடப்பகுதியின் உதவியுடன் தோற்பாவைக் கூத்து குறித்துச் சொற்பொழிவு தயார் செய்க.

- ஒயிலாட்டம்

  - ஆண்கள் மட்டும் ஆடக்கூடியது
  - ஆண்களின் கம்பீரத்தை உணர்த்துவது
  - 10 முதல் 12 பேர் வரை எதிரெதிரோ நேர் திசையிலோ நின்று ஆடுவது
  - இராமாயணக் கதை, முருகன் கதைகள் ஆடப்படுகின்றன.
  - இக்கலை இன்று நலிவடைந்து வருகிறது

  – இக்குறிப்புகளைப் பயன்படுத்தி இன்று அழிந்து வரும் நாட்டார் கலைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்துக் கலைமேம்பாட்டுத் துறைக்கு ஒரு கடிதம் வரைக.

- நாட்டுப்புற மக்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பிற கலை வடிவங்கள் குறித்துக் கலந்துரையாடுக.

# பாம்பு பாம்பு!!

ஒருநாள் பாம்பு பிடிக்கிறவன் எங்கள் ஊருக்கு வந்தான். பெரியவர்கள் எல்லோரும் அவனைச் சுற்றிக்கொண்டு நிற்க நாங்கள் அவர்களுக்கு முன்னால் போய் நின்றோம். அவன் தோளில் ஒரு சாக்கைப் போட்டிருந்தான். அதில் விதவித மாக நான்கைந்து பாம்புகள் கிடக்க அவன் அதை எடுத்து எல்லோருக்கும் காண்பித்தான். அதோடு இதெல்லாம் விச முள்ள பாம்பு; அத அப்படிப் புடிச்சேன், இப்படிப் புடிச்சேன் என்று வீரத்தோடு சொல்லி கொண்டிருக்க அந்தப் பாம்பை பார்த்து எல்லோரும் பயந்து ஓடினார்கள்.

எங்கள் சித்தப்பா அவனிடம், நீ பாம்பு புடிச்சதுல ரொம்ப கெட்டிக்காரந்தேன், நாங்க ஒத்துக்கிடுதோம்; முதல்ல பாம்ப சாக்குக்குள்ள போடு; எல்லோரும் பயப்படுதாகல்ல என்றார். அவனும் பாம்பை சாக்குக்குள் போட்டுக் கொண் டான். பிறகு யார் யார் வீட்டில், படப்பில் பாம்பு இருக்கிறது என்றும் அவன் அந்தப் பாம்பைப் பிடித்துவிட்டால் எவ்வ ளவு தானியம் கொடுப்பது என்றும் பேசிக்கொண்டார்கள்.

எனக்கும் தம்பிக்கும் அவன் எப்படிப் பாம்பு பிடிக் கிறான் என்பதைப் பார்க்க ஆசையாய் இருந்தது. என் அம் மாவும் பாம்பு பிடிக்கக் கூலி எவ்வளவு என்று கேட்டுக் கொண்டிருந்தாள். உடனே நான் இளைய தம்பி தர்மனிடம், நானும் ராஜாவும் வீட்டுக்குள்ளே இருக்கோம். அம்மா பாம்பு பிடிக்கிறவன கூட்டிட்டு வந்தா நீ முன்னக் கூடி ஓடியாந்து எங்க கிட்ட சொல்லு. நாங்க குலுக்க கடவுக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டு அவன் எப்படி பாம்பு பிடிக்கிறான்னு பாக்கோம் என்றேன்.

தருமனும் சரி என்றான். உடனே நானும் ராஜாவும் வீட்டில் போய் நல்ல பிள்ளைகளாக இருந்தோம். வீட்டுக்கு முன்னால் காலடிச் சத்தம் கேக்கிறபோதெல்லாம் அம்மாதான் பாம்பு பிடிக்கிறவனோடு வந்து விட்டாளோ என்று குலுக்கை கடவுக்குள் ஒளிவதும் பிறகு ஏமாற்றத்தோடு வெளியே வரு வதுமாய் இருந்தோம். ரொம்ப நேரம் கழித்து தருமன் ஓடி வந்தான்.

என்னடா என்று கேட்டேன். நம்ம வீட்டுல பாம்பு பிடிக்கலையாம்; சின்னம்மா வீட்டுலதேன் பாம்பு பிடிக்கப் போறாகளாம்; பாம்பாட்டிய கூட்டிக்கிட்டு எல்லாரும் சின் னம்மா வீட்டுக்குப் போறாக என்றான். இதைக் கேட்டதும் நானும் தம்பியும் குறுக்கு வழியாகச் சின்னம்மா வீட்டிற்கு

**வினைவகை வாக்கியங்கள்**

வாக்கியங்களில் வினைகள் முற்றுக்களாகவோ எச்சங்களாகவோ இடம்பெறும்.
கண்ணன் வந்தான்.-முற்று
கண்ணன் வந்து.-எச்சம்

இவ்வாறு வரும் முற்றுக்களின் எச்சங்களின் அடிப்படையில் வாக்கியங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன
1) உடன்பாட்டு/எதிர்மறை வினா வாக்கியங்கள்.
2) செய்வினை/செயப்பாட்டுவினை வாக்கியங்கள்.
3) தன்வினை/பிறவினை வாக்கியங்கள்.

**உடன்பாட்டு வினை/ எதிர்மறை வினை**

உடன்பாட்டு நிலையில் உள்ளவை உடன்பாட்டு வினைவாக்கியங்கள். எதிர் மறையில் வருபவை எதிர்மறை வினை வாக்கியங்கள்.

கண்ணனை எல்லோருக்கும் தெரியும். - உடன்பாடு
கண்ணனைத் தெரியாதவர்கள் இல்லை.-எதிர்மறை
இங்கு ஒரு கருத்து இருநிலைகளில் கூறப்பட்டுள்ளது.

**செய்வினை/ செயப்பாட்டு வினை**

| |
|---|
| கண்ணன் நன்கொடை அளித்தான் - செய்வினை. |
| கண்ணனால் நன்கொடை அளிக்கப்பட்டது.<br>நன்கொடை கண்ணனால் அளிக்கப்பட்டது.<br>செயப்பாட்டுவினை |
| செய்வினை வாக்கியங்கள் எழுவாய் செயப்படு பொருள் பயனிலை என்ற வரிசையில் அமையும்-<br>செயப்பாட்டுவினை வாக்கியங்களில் செயப்படுபொருள் எழுவாயாக அமையும். |

ஓடினோம். சின்னம்மா வீட்டில் தானியம் போடுவதற்காக இரண்டு மரிசல்கள் இருந்தன. அது நாலு ஐந்து மூடை தானியம் பிடிக்கும். கொல்லைப்புறமாகச் சின்னம்மா வீட்டிற்குள் போய் மரிசலில் ஏறி உட்கார்ந்து கொண்டோம். வீடு லேசான இருட்டாய் இருந்தது. எப்போதும் அப்படித்தான், வீடு என்பது தானியம் போடுவதற்கும் வப்பு சொப்புகளைப் பத்திரப்படுத்துவதற்கும் தானே தவிர மனிதர்களுக்காக இல்லை.

பாம்பாட்டியும் எனது சின்னம்மாவும் வர அவர்களைச் சுற்றி ஒரு கூட்டமே வந்தது. எங்களை யாருமே பார்க்கவில்லை. பாம்பாட்டி நடு வீட்டிற்குள் வந்து நின்றுகொண்டு சுற்றிலும் பார்த்தவாறு வாசம் பிடித்தான். பிறகு சின்னம்மாவிடம் நாளுபட்ட கட்டுவிருசன் வீட்டுக்குள்ள இருக்கு. நானு ஊத்தம் கொடுத்துப் புடிக்கும் போது அது சீறிக்கிட்டு வரும். உங்களால தாக்குப்புடிக்க முடியாது. அதனால எல்லாரும் வெளிய இருங்க என்று சொல்லிவிட்டான்.

என் சின்னம்மா பயந்த குரலில் பதறினாள். ஆத்தாடியோ! இம்புட்டு நாளும் கட்டுவிருசனுக்குள்ளதேன் குடி இருந்திருக்கோம் பொலுக்கோ. பகையாளிக்குள்ளனாச்சிலும் குடி இருந்துரலாம். பாம்புக்குள்ள குடியிருக்கலாமா? எய்யா, நீ மவராசனா இருப்பே, முத அந்த பாம்ப புடி, பெறவு வீட்டுக்குள்ள இருக்க பூச்சி பொட்டு அம்புட்டயும் ஒண்ணு இல்லாம அள்ளி உன் சாக்குல போட்டுட்டு போ, நானு கண்ணும் கயித்தலயும் கங்கடா பாலகனுமா வீடு நிறைய புள்ளைகள வச்சிருக்கேன். ஏதும் ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிருச்சின்னா... அம்புட்டுத்தேன். நானு பூமியில இருந்தே புண்ணியமில்ல...

சரி சரி, நீரு விசாரப்படாம வெளியே போரும், நானு அம்புட்டு உசுப்பிராணியவும் புடிச்சி கொண்டு வாரேன் என்று அவன் சொல்லவும் சின்னம்மா வெளியேறினாள். பாம்பாட்டி கதவை அடைத்தான். இப்போது அவனுக்குத் தெரியாமல் நாங்களும் எங்கள் பார்வையில் அவனுமாக இருந்தோம். மீண்டும் ஒருமுறை சுற்றிலும் பார்த்துவிட்டு பீடியைப் பற்ற வைத்தான். தீக்குச்சி வெளிச்சம் வீட்டிற்குள் இருந்த பொருள்களை அடையாளம் காட்டியது. பிறகு அவன் தன் சாக்குப் பைக்குள் இருந்த இரண்டு பாம்புகளை எடுத்து வெளியில் விட்டான். அவை ஊர்ந்துகொண்டு மூலை தேடிப் போக அவன் ஆ... ஊ... என்று கத்தியவாறு அவற்றைப் பிடிக்க, நாங்கள் அவனுக்கு மிச்சமாய் கத்தினோம்.

சின்னம்மா பாம்பாட்டி சாக்குக்குள்ள இருந்த பாம்ப புடிச்சி வீட்டுக்குள்ள விட்டுட்டான்...

**தன்வினை/ பிறவினை**

ஒரு செயலைத் தானாகச் செய்வது தன்வினை.
ஒரு செயலைத் தானாகச் செய்யாமல் பிறரைக் கொண்டு செய்யவைப்பது பிற வினை.

கண்ணன் உண்டான்.
அமுதா ஆடினாள்.
-தன்வினை

கண்ணன் உண்பித்தான்.
அமுதா ஆடச் செய்தாள்.
-பிறவினை

**வாக்கிய உறுப்புகள்**

சாதாரணமாக ஒரு வாக்கியத்தில் எழுவாய்-பயனிலை-செயப்படு பொருள் என மூன்று உறுப்புகள் அமையும்.

எ.டு. கண்ணன் வீட்டைத் திறந்தான் என்ற வாக்கியத்தில்
கண்ணன்- எழுவாய்
திறந்தான்- பயனிலை
ட்டை-செயப்படுபொருள்

உடனே கதவைத் திறந்து எல்லோரும் உள்ளே ஓடி வந்தார்கள். நாங்களும் மரிசலி லிருந்து இறங்கி வெளியே வந்தோம்.

பாம்புகள் வீட்டுக்குள் ஊர்ந்து கொண்டு அலைய இந்தச் சத்தத்தில் நிறைய கூட்டம் கூடி விட்டது. நாங்கள் எல்லோரிடமும் பாம்பாட்டியின் திருட்டுத்தனத்தைச் சொல்ல ஆள் ஆளுக்கு அவ னைப் பிடித்துக் கொண்டார்கள். அவனால் எது வுமே செய்ய முடியவில்லை. பரக்கப் பரக்க விழித் தவாறு வேர்க்க விறுவிறுக்க நின்று கொண்டிருந் தான்.

எனது அம்மாவிடம் சின்னம்மா சொன் னாள். எக்கா, உம் புள்ளகள கண்ணுல காங்க விடாம அடிச்சுயே, அதுக எம்புட்டு கெட்டிக்கார புள்ளைகன்னு இப்ப பாத்தியா? அதுக மட்டும் இப்ப இம்புட்டுக் கருத்தா வீட்டுக்குள்ள ஒளிஞ்சிக் கிட்டு இவன் களாணித்தனத்த பாக்காம இருந்தா ஊரெல்லாமில்ல இவன் பாம்பு புடிக்கேன்னு ஏமாத்தி ஒரு மூட தானியத்த அள்ளிட்டுப் போயி ருப்பான் என்று சொன்னாள். எல்லாரும் என் அம் மாவிடம் ஆமா ஆமா உன் பிள்ளைக கெட்டிக் காரப்புள்ளைக, அதுகள நீதேன் போட்டு அடிச் சிக் கொல்லுதே என்று கூட்டுச்சேர்ந்து சொல்ல எனக்கும் தம்பிக்கும் சந்தோசமென்றால் சொல்லி முடியாது.

**–பாரததேவி**
**நிலாக்கள் தூரதூரமாய் – நாவல்**

**வினா வகை**

- **அறிவினா**

  தாம் அறிந்த ஒன்று பிறருக்குத் தெரிகிறதா என ஒப்பிட்டுப் பார்ப்பது அறிவினா.

- **அறியா வினா**

  தான் அறியாத ஒரு பொருளைஅறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது அறியாவினா.

- **ஐயவினா**

  ஐயத்தைப் போக்கிக் கொள்ள வினாவுதல் ஐயவினா ஆகும்.

- **கொளல் வினா**

  தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும்பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா கொளல்வினா.

- **கொடை வினா**

  இல்லாதவருக்கு ஒரு பொருளைக் கொடுத்தற்பொருட்டு வினாவுவது கொடைவினா.

- **ஏவல் வினா**

  ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதல் பொருட்டு வினவப்படுவது ஏவல் வினாவாகும்

**பாரததேவி**

இவர் தன் அனுபவத்தை நாவலாக வடித்துள்ளார். தமிழில் உள்ள தன் வரலாற்று நாவல்களுள் முக்கியமானது இவர் நாவல். இவர் கி. ராஜநாராயணனின் தூண்டுதலால் எழுத்துலகுக்கு அறிமுகமானார். இவரது முதல் படைப்பு இது.

## செயல்பாடுகள்

- இது போன்று நகைச்சுவைக் கதைகளைத் திரட்டி வகுப்பில் வாசிக்கவும்.
- நகைச்சுவைத் துணுக்குகளை எழுதுக
- கருத்துப் படங்களைத் திரட்டி அவற்றிற்கான அடிக்குறிப்பையும் எழுதுக.

- பாடப்பகுதியில் வரும் வினா வகைகளை வகைப்படுத்துக.
- கீழ்வரும் வினாக்கள் எந்த வகை வினா என்பதை எடுத்து எழுதுக.

  திருக்குறளை எழுதியவர் யார்? (ஆசிரியர் மாணவரிடம் வினவிய வினா)

  உன்னிடம் வேறு சட்டை இல்லையா?

  அங்கே தெரிவது மனிதனா? கம்பமா?

  பத்தாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகம் உளதா?

  சென்னைக்குச் செல்லும் பாதை எது?

  இந்தப் பாடத்தைப் படித்து வா.

**மரபுத்தொடர்**

அகராதிப் பொருளைத் தராமல் வழிவழியாக (மரபு முறையாக) வேறு பொருளைத் தரும் சொல் தொகுதி மரபுத்தொடர் எனப்படும்)

- இந்தத் தொடர்களின் பொருளை வாக்கியத்தில் அமைக்க.

  வயிற்றிலடித்தல்

  கால் கழுவுதல்

  செவிமடுத்தல்

  செவிசாய்த்தல்

  தாலி பெருகிற்று

  நாடு நீங்கினார்

  தலையிலடித்தல்

  கேட்டு கேள்வியில்லாமல் நுழைந்தான்

# அலகு 5
# பழமையும் இனிமையும்

இலக்கியம் உண்மை, நன்மை, அழகு என்ற மூன்று பொருள்களையும் ஒரு சேர உணர்த்துகின்றது. தத்துவமும் விஞ்ஞானமும் உண்மையை மட்டுமே உணர்த்து கின்றன. நீதி நூல்கள் நன்மையை மட்டும் உணர்த்துகின்றன. ஆனால் இலக்கியம் ஒன்றுதான் நன்மையோடு கூடிய உண்மையை அழகுபட உணர்த்துவதுடன் அறம், அறிவு, அழகுணர்வு ஆகியவற்றைத் தந்து உள்ளத்துக்கும் அறிவுக்கும் விருந்து செய்து வாழ்க்கைக்கு வழிகாட்டி யாக அமைகின்றது. இத்தகைய தன்மைகளை ஒருங்கே பெற்ற பழந்தமிழ் இலக்கியங்களின் வகைகளையும் தனித்தன்மைகளையும் மாணவர் களுக்கு எடுத்துரைப்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்

- இலக்கியத்தைச் சுவைக்கும் கூறுகளை அடையாளம் காணல்.
- பல்வேறு காலகட்ட இலக்கிய வளர்ச்சியை அட்டவணைப்படுத்தல்.
- இலக்கிய வகைகளைப் பகுப்பாய்வு செய்து விளக்கக் கட்டுரைகள் தயார்செய்தல்.
- இலக்கியத்திற்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள தொடர்புகளை ஒப்பிடுதல்.

# எட்டும் பத்தும்

## அன்புடை நெஞ்சம்

வெறும் வெளித்தோற்றங்களை வருணிக்கும் கவிஞனைவிட மனவியல்பை விவரிக்கும் கவிஞனே சிறந்தவனாகப் போற்றப்படுவான். நெஞ்சின் இயல்பையும், அதில் தோன்றும் பலவித உணர்வுகளையும், அதனால் வெளிப்படும் எண்ணங்களையும் பாங்காகக் காட்டுவதே சங்கவிலக்கியப் பாடல்களின் அடிப்படையெனலாம். ஒருவன் ஒருத்தியரிடைத் தோன்றும் காதலையும், அக்காதல் வளரும் அன்புடை நெஞ்சங்களையும், அக்காதலால் மகிழும் மகிழ்ச்சியையும் பிரிவால் நேரும் துன்பத்தையும் காட்டுவதில், இப் பாடல்கள் தலைசிறந்து விளங்குகின்றன. உள்ளத்தெழும் அகவுணர்வுகளைப் பாடுவதால், இப்பாடல்களுக்கு அகப்பாடல்கள் எனப் பெயர் வழங்குவர். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலியன இவ்வகையைச் சாரும், அன்புடை நெஞ்சத்தை விளக்கும் காட்சிகள் பலவற்றை இப்பாடல்களால் நாம் அறிகிறோம்.

தலைவன் ஒருவனும் தலைவியொருத்தியும் சந்தித்து உள்ளம் ஒன்றுபட்டு உவகை கொள்ளுகின்றனர். அவ்வுவகையில் அவர்கள் பாடி மகிழ்வது அந்த உள்ளம் ஒன்றுபட்ட நிலையைத்தான் என்பதைக் குறுந்தொகைப் பாட்டு ஒன்று விளக்குகிறது. உன்னுடைய தாயார் எவரோ, என்னுடைய தாயார் எவரோ, அவர்களுக்குள் இதற்கு முன் எந்த உறவும் ஏற்பட்டதில்லை; அதைப்போலவே உன்னுடைய தந்தைக்கும் என்னுடைய தந்தைக்கும் இதற்கு முன் எந்த உறவும் இருந்ததில்லை. நீயும் நானும் முன் உறவு கொண்டவர்கள் அல்லர். எனினும் நம்முடைய உள்ளம் அன்பால் ஒன்றுபட்டுப் பிணைக்கப்பட்டுள்ளன. வானத்திலிருந்து வையகத்தில் விழும் மழைத்துளிகள் செம்மண்ணில் கலந்து செங்குழம்பாகிவிட்டால், அவற்றைத் தனித்துப் பிரித்துக் காணமுடியாதவாறு போல இனி ஒன்றுபட்ட நம் உள்ளத்தைப் பிரிக்கமுடியாது; அன்புடை நெஞ்சம் தாமாகக் கலந்துவிட்டன" என்று கூறுகின்றான்.

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே** (குறுந்தொகை, 40)

என்று தம் அன்புடை நெஞ்சம் ஒன்றுபட்ட செய்தியைப் பண்பு குன்றாமல் பாடுகிறான்.

மற்றொரு குறுந்தொகைப் பாடல், தலைவன் தலைவியர் வாழ்வில் காணும் அன்புடை நெஞ்சத்தைக் காட்டுவதோடு, அதனை விளக்க விலங்குகளின் வாழ்வில் காணும் அன்புடை நெஞ்சத்தையும் உடன் சுட்டுகிறது. ஒரு தோழி தலைவன் வரும் வழிய

ருமையை அவனுக்குக் கூறி அக்கொடிய வழியில் அவன் வருவதால் தலைவி நெஞ்சம் துடிப்பாள் என்ற செய்தியை அவனுக்குத் தெரிவிக்கிறாள். அதை விளக்க, அவன் நாட்டில் உள்ள பெண் குரங்கின் அன்பு உள்ளத்தையும் அதன் செயலையும் சேர்த்துக் கூறுகிறான்.

ஆண் குரங்கு இறந்துவிட்டது என்ற செய்தியைப் பெண்குரங்கு அறிகிறது. இனித் தனித்து வாழ்ந்து கைம்மை நோன்பு நோற்க விரும்பாத மந்தி தன் குட்டிகளைத் தன் சுற்றத்திடம் ஒப்படைத்து விட்டுப் பெரிய மலையின் உச்சியில் ஏறிக் கீழே விழுந்து உயிர்விடுகிறது. இச் செய்தியைக் கூறி அத்தகைய பண்புமிகு அன்புடை நெஞ்சத்தை யுடைய மந்தி வாழும் நாடனே! என்று அவனை விளித்துக் கூறுகிறாள். அதனால் தலைவியும் அவன் நடு இரவில் வருவதை அஞ்சுகிறாள் என்று அவள் நடுங்கும் நெஞ்சத்தைக் காட்டுகிறாள். மக்களின் அன்புடை நெஞ்சத்தைக் காட்ட விலங்குகளின் அன்பான வாழ்வைப் புலவர்கள் காட்டுவதற்கு இப்பாடல் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கு கிறது.

**கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்**
**கைம்மை யுய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்புகழ் கிளைமுதற் சேர்த்தி**
**ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்**
**சாரல் நாட நடுநாள்**
**வாரல் வாழியோ வருந்துதும் யாமே** (குறுந்தொகை. 69)

மந்தியின் அன்புடை நெஞ்சின் இயல்பைக் காட்டித் தலைவியின் நெஞ்சு அதைவிட நெகிழ்வும் பிரிவாற்றாமையும் உடையது என்று உணர்த்துகிறாள்.

அன்பால் பிணைக்கப்பட்ட நெஞ்சங்கள் நடத்தும் இல்லற வாழ்க்கை இன்பமும் நிறை வும் கொண்ட வாழ்வாகும் என்பதை இவ்வகைப்பாடல்கள் உணர்த்துகின்றன.

திருமணமான பிறகு ஒரு தலைவனும் தலைவியும் வாழ்க்கை தொடங்குகின்றனர். அவள் உணவு இட அதனை உண்டு மகிழ அவன் விழைகிறான். அவளுக்கும் அவனுக்குத் தன் கையால் முதன்முதலில் உணவு பரிமாற வேண்டும் என்ற ஆவல் எழுகிறது. விரைவில் உணவு அட்டு அவனுக்கு இடவேண்டும் என்ற ஆர்வம் அவளை உந்துகிறது. புளிக்குழம்பு செய்யும்பொருட்டு அக்குழம்பினைக் கூட்டி வைக்கத் தன் கையால் துழாவி அதனை அமைக்கும் ஆர்வத்தால், அப்படியே தான் அணிந்து கொண்டிருந்த புடைவையில் கையைக் கழுவாமல் துடைத்துக்கொண்டு, அக்குழம்பைத் தாளிதம் செய்து, அக்குய்ப்புகை அவள் கண்களில் படியத் தானே துழாவி அட்ட புளிக்குழம்புச் சோற்றினை அவனுக்கு இட்டு, ஆர்வமும் அன்பும் பெருக அவன் முன்னால் நின்று அவன் பாராட்டுதலை எதிர்பார்க்கிறாள். அவள் குறிக்கோளெல்லாம் அவ்வுணவை உண்ணும் அவன் வாயிலிருந்து 'இனிது' என்ற சொல்லைக் கேட்பதாக இருக்கிறது. அவள் துழந்து அட்ட உணவு இனிதாக இருக்கிறது என்று அவன் கூறும் சொற்கள் அவள் உள்ளத்து மகிழ்ச்சியை மிகுதிப்படுத்துகின்றன. புதுமண வாழ்வால்

பொலிவுபெற்ற அவள் அழகிய முகம் நுட்பமாக அச் சிறுமகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது. அவ்வன்புடை நெஞ்சங்கள் நடத்தும் அகவாழ்வு இச்சிறுநிகழ்ச்சிகளால் பொலிவு பெறுகின்றது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கமழத்**
**தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒள்நுதல்** (குறுந்தொகை, 167)

மற்றொரு தலைவன் தனக்கும் அவளுக்கும் நேர்ந்த ஊடல் தீர்வதற்கு விருந்தினர் வருகையை எதிர்பார்க்கிறான். விருந்தால் அவள் உவந்து முறுவல்கொள்ளும் முகத்தைக் காணும் காட்சியை எதிர்நோக்கும் ஆவலில் அவர்கள் அன்புடை நெஞ்சம் சித்திரிக்கப்படுகின்றன. விருந்து வந்தால், அவள் அவனோடு அவர்களை வரவேற்க முறுவல் கொண்டாள். அதனால் அவள் மகிழும் முகத்தைப் பார்க்கமுடியுமே என்று அவாவுகிறது அவன் நெஞ்சு.

கணவனோடு பிணக்குக் கொண்ட காரணத்தால், கதவைத் தாழிட்டுக்கொண்டு தனியே சமையலறையில் தன் கடமையில் கண்ணுங் கருத்தும் செலுத்தியவளாய் அவனிடம் பேச மனமில்லாதவளாய் விறுவிறுப்பாகத் தன் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிறாள் ஒரு தலைவி. அவள் வாளைமீனைக் கழுவி அறுத்து வகைப்படுத்திச் சமையல் செய்யத் தொடங்குகின்றாள். கண்களில் புகைபடிய, நெற்றியில் வியர்வை துளிர்க்க, அவற்றைத் தன் புடைவையில் துடைத்துக் கொண்டு, அவனிடம் பேசாமல் சமையலறையில் தன் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறாள். அவள் முகத்தில் புன்னகை தவழுமா என்று எதிர்பார்த்து நிற்கிறான். புன்னகை தவழவில்லை யென்றாலும் புன் முறுவலாவது தோன்றக் கூடாதா என்று ஏங்குகிறது அவன் நெஞ்சம். “முன்னெல்லாம் வரும் விருந்தினர் இப்பொழுது வரக் கூடாதா? அவர்கள் பொருட்டாவது அவள் முகம் மலருமே! அம்மலர்ந்த முகத்தை அப்பொழுதாவது பார்க்க முடியுமே! எங்கள் ஊடலும் மெல்லத் தணியுமே” என்று அவன் அன்புடை நெஞ்சம் எதிர்பார்க்கும் காட்சியை நற்றிணைப் பாடல் ஒன்று காட்டுகிறது!

**தடமருப்பு எருமை மடநடைக் குழவி**
**தூண் தொறும் யாத்த காண்தகு நல்லில்**
**கொடுங்குழை பெய்த செழுஞ் செய் பேதை**
**சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப**
**வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்**
**புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்**
**பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்**
**அந்துகில் தலையின் துடையினள் நப்புலந்து**
**அட்டி லோளே அம்மா அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று**

**சிறியமுள் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம்காண் கம்மே** (நற்றிணை. 120)

முள் போன்ற சிறு எயிறு தோன்ற அவள் முகத்தில் புன்முறுவல் தோன்ற வேண்டும் என்று அத்தலைவன் எதிர்பார்க்கிறான். துகில் தலைப்பால் நெற்றியில் தோன்றும் சிறு வியர்வைகளைத் துடைத்துக்கொண்டு, அந்த அட்டில் இடத்தைவிட்டு அக லாமல் அவனோடு புலந்து வெறுத்து இருக்கிறாள். அத்தகைய நிலையில் அவள் மனம் சிறிது வேறு வகையாகத் திரும்பினால் நலமாக இருக்குமே யென்று கருதுகி றான். அந்த வீடு எருமையும் அதன் கன்றும் தூண்தோறும் கட்டப்பட்டு அழகாக விளங்குகிறது. அந்த நல்ல இல்லில் வாளை மீனை வகைப்படுத்தி அட்டில் தொழி லில் ஈடுபடும் தலைவியின் நிலை இவ்வாறு வருணிக்கப்பட்டிருகிறது. அவள் அன்புடை நெஞ்சத்தில் ஏற்பட்டிருக்கும் சிறு வெறுப்பை அவன் உள்ளம் மாற்ற அவாவும் நிலைமையை இப்பாடல் காட்டுகிறது.

ஒருவரை ஒருவர் பிரிவதால் ஏற்படும் ஆற்றாமையால் அல்லலுறும் நெஞ்சின் துயரைச் சங்கத்துச் சான்றோர் காட்டுவதில் வல்லவராக விளங்கினர் என்பதைப் பாலைத் திணையில் வரும் பாடல்கள் அறிவுறுத்தும். தலைவன் பொருள் காரண மாகவோ போர்வினை காரணமாகவோ பிரியும் பிரிவுக்குப் பாலை என்றும். அவ் வொழுகலாற்றைப் பாலைத் திணை என்றும் கூறுவர். இப்பாலைத்திணைப் பாடல் கள் அன்புடை நெஞ்சங்கள் பிரிவால் உறும் அல்லலை அழகுபடக் கூறுகின்றன.

செய்வினை முடிக்கச் சேண் தூரஞ் சென்றுவிட்ட தலைவன் காதல் நெஞ்சு ஒரு புறம், கடமை உணர்வு ஒரு புறம் என இவ்விரு நிலைகளால் அலைக்கப்பட்டுக் கரை காண முடியாமல் திகைக்கின்றான். நெஞ்சு அவளிடத்தில்கொண்ட விழைவால், விரைவில் வீடு திரும்ப வேண்டும் என்ற வேட்கையை மிகுதிப்படுத்துகின்றது. அவனுடைய அறிவு கடமை பெரிது என்றும், அதனால் செய்வினை முடித்துவிட்டு வீடு திரும்புதலே சிறப்பு என்றும் அறிவுறுத்துகிறது. அறிவுக்கும் உணர்வுக்கும் இடையே நடக்கும் மனப்போராட்டத்தின் நடுவில் உடம்பு அகப்பட்டு மெலிந்துவிடு கின்றது. இந்நிலை வலிய மருப்புடைக் களிறு இரண்டு இருபுறம் தனித்தனியே நின்று தேய்ந்த பழங்கயிறு ஒன்றன் இருபுறத்தையும் பற்றி இழுக்க, அது மெலிந்து அறுந்து போகும் நிலைக்கு உவமிக்கப்பட்டுள்ளது. களிறுகளால் ஈர்க்கப்படும் தேய்புரிப் பழங்கயிற்றின் நிலையைப் போல் இருவேறு உணர்வுகளால் அலைக் கப்பெற்று மெலிந்த தலைவன் உடல் நலிந்து விடுகிறதென்று கூறப்படுகிறது. தலைவன் நெஞ்சில் எழும் அலைகளின் அலைப்பால் மெலியும் அவன் உடலை, அறுந்து விழும் தேய்ந்த பழங்கயிற்றுக்கு உவமைப்படுத்துகின்றார்.

**புறந்தாழ்வு இருண்ட கூந்தற் போதின்**
**நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்**
**உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்**
**செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்**
**செய்வினை முடியாது எவ்வம் செய்தல்**

**எய்யா வையொடு இளிமதலைத் தருமென**
**உறுதி தூக்கத் தூங்கி அறிவே**
**சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை**
**ஒளிறேந்து மறுப்பிற் களிறுமாறு பற்றிய**
**தேய்புரிப் பழங்கயிறு போல**
**வீவது கொல்என் வருந்திய உடம்பே** (நற்றிணை, 284)

என்று மனப்போராட்டங்களைத் தக்க உவமை கொண்டு விளக்கும் நிலையைப் பார்க்கின்றோம். அன்புடை நெஞ்சம் தாங்கும் அல்லலை இவ்வுவமை அழகுபட உணர்த்துகிறது.

தலைவியைப் பிரிந்த தலைவனின் தனிமை நெஞ்சம் மேலே விவரிக்கப்பட்டவாறு போலவே மற்றொரு புலவர் தலைவனைப் பிரிந்து தனிமையால் வாடும் தலைவி யின் நெஞ்சத்தின் தன்மையைப் புலப்படுத்துகின்றார். தலைவன் உடனிருந்தபோது உவகைகொண்டு வளமான வாழ்வைப் பெற்ற தலைவி, அவன் அவளைப் பிரிந்து விட்ட காரணத்தால் தனிமையுறுகிறாள்; அவள் நெஞ்சு அவன்மாட்டுச் சென்றுவிட்ட காரணத்தால் உணர்வு குன்றி உடம்பை மட்டும் வீணுக்காகப் பேணுவது போன்ற உணர்வால், வாழ்வில் வெறுப்பும் சலிப்பும் கொள்கிறாள். அவள் அடைந்த தனிமை நிலைமைக்கு வேறோர் தனிமை நிலைமை உவமையாகக் கூறப்படுகின்றது. வெஞ்சின வேந்தனின் வெம்பகையால் அலைப்புண்ணல் அஞ்சி, மக்கள் தாம் வாழும் பேரூரை விட்டு அகன்றுவிட, அதனைக் காக்கும் தனிமகன் ஒருவன் தனிமைத் துயராலும் விருப்பற்ற உணர்வாலும் வாழ்க்கையை வெறுத்து, அவ்வுடலுக்கு உணவு அளிப்பதையும் மறுத்து, வாழ்வைச் சுமையாகக் கருதி நாட்களைக் கடத்தும் நிலை யைப் போன்று இவள் வாழ்வு அமைந்திருப்பதாகக் கூறுகிறாள். பாழ் காத்திருக் கும் தனிமகன் உடலை விருப்பின்றிப் பேணுமாறு போல இவ்வுடம்பைக் காக்க வேண்டியிருப்பதாகத் தலைவி கருதுகிறாள்:

**நெஞ்சம் அவர்வயின் சென்றன ஈண் டொழிந்து**
**உண்டல் அளித்துஎன் உடம்பே விறற்போர்**
**வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி**
**வாழ்வோர் போகிய பேரூர்ப்**
**பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே** (நற்றிணை, 153)

வாழ்வோர் போய்விட்ட காரணத்தால் வெறுமையுற்ற பேரூராகிய பாழிடத்தைக் காக்கும் தனிமகனைப் போன்று, நெஞ்சு நீங்கிவிட்ட காரணத்தால் தனிமையுறும் உடம்பு உணர்வற்றுக் கிடக்கிறது என்று உணர்த்துகிறாள். இவ்வாறு பிரிவால் அன்புடை நெஞ்சங்கள் படும் அல்லலைப் பாலைத்திணைப் பாடல்கள் உணர்த்தக் காண் கின்றோம்.

முல்லைத் திணைப் பாடல் ஒன்று, இல்லிருந்து ஆற்றித் தலைவன் வருகையை எதிர்பார்க்கும் தலைவியின் ஆவலுள்ளத்தை அணிபட எடுத்துக் காட்டுகின்றது. கார்காலம் வருவதற்குள் செய்வினை முடித்து வீடுதிரும்பி வருவதாகச் சொன்ன தலைவன் குறித்த காலத்தில் வீடு திரும்பவில்லை. காரோ வந்தது; அவன் தேர்

மட்டும் வரவில்லை. அந்த நிலையில் கார்காலத்து முல்லை மலர்கள் பூக்கத் தொடங்கி விட்டன. முல்லை முகைகளைப் பற்களாகக் கொண்டு கார்காலம் அவள் தனிமையைப் பார்த்துச் சிரிப்பது போல இருக்கிறது என்று தலைவி கூறுவதாக ஆசிரியர் அமைக் கிறார். வினைமுடித்து வரவேண்டிய தலைவன் வராததால் உலகமே அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோல இருக்கிறது. இளமை பாராமல் வளம் விரும்பிப் பிரிந்து சென்ற தலைவர் எவணரோ என ஏங்கும் தலைவியின் நெஞ்சு, முல்லை மலரைப் பார்த்து மகிழாமல், அவை கார்காலம் வந்துவிட்ட செய்தியை அறிவிப்பனவாக உணர்கிறது. முல்லை மலர்ந்தும் அவன் ஒல்லையில் வரவில்லையே என்று அவள் ஏங்குகிறாள்:

**இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவணரோ வெனப்**
**பெயர்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை யிலங்கெயி றாக**
**நகுமே தோழி நறுந்தண் காரரே** (குறுந்தொகை, 126)

என்று அவள் அன்புடைய நெஞ்சம் அவன் வராமையால் அடைந்த கவலையைக் காட்டுகிறது. அந்தக் கவலையை இயற்கை நிகழ்ச்சியான மலரின் மலர்ச்சியோடு தொடர்புபடுத்திச் சொல்வது அணிநயம்பட அமைந்துள்ளது. “முல்லையின் முகை என்னைப் பார்த்து நகைக்கின்றதே” என்று தலைவி சொல்லும் இக் கூற்றில் அவனுக்காக ஏங்கும் அவளுடைய அன்புடை நெஞ்சம் வெளிப்படுகின்றது.

இல்லிருந்து நல்லறம் ஓம்பும் இல்லாளின் இனிய முகத்தைக் காண ஆவலுறும் தலைவனின் அன்புடைய நெஞ்சை நற்றிணைப் பாடல் ஒன்று காட்டுகிறது. அவர் கள் அன்பு அவர்கள்பால் மட்டும் பரவாமல் பெற்ற மகனிடத்தும் உற்ற விருந்தின ரிடத்தும் பரவுகிறது. இச் செய்தியை இப்பாடல் நன்கு காட்டுகிறது. கார்காலம் வந்து விட்டதை உணர்ந்து தலைவன் குறித்த காலத்தில் வீடுதிரும்ப விழைகிறான். அதனால் தேரை விரைவில் செலுத்துமாறு பாகனை ஏவுகிறான். வீட்டில் விடியற்காலையில் தன் மனைவி குழந்தையை எழுப்பி இன்னுரையாடும் இனிய சொற்களைக் கேட்க அவன் அவாவுகிறான். தலைவி விருந்து விரும்புவள் ஆதலின், அவன் விரைவிற் சென்று, விருந்தினரை ஏற்று இல்லறம் சிறப்புற நடைபெறச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறான். அதனால் அவன் மனம் தலைவியை மட்டும் நாடாமல் மகனிடத் தும் இருவரும் இருந்து வரவேற்கும் விருந்தினரிடத்தும் பரவுகிறது என்று அறிய முடிகிறது.

**செல்க பாக! நின் செய்வினை நெடுந்தேர்;**
**விருந்து விருப்புறூஉம் பெருந்தோள் குறுமகள்**
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
**பூங்கண் புதல்வன் தூங்குவயின் ஒல்கி**
**வந்தீக எந்தை என்னும்**
**அந்தீம் கிளவி கேட்க நாமே** (நற்றிணை, 221)

குழந்தையையும் தாயையும் ஒருசேரக் காண வேண்டும் என்று அவன் அன்பு நெஞ் சம் அவாவுகின்றது. இல்லறத்தின் மாட்சியை நன்குணர்ந்த தலைவன் விருந்தினரை

வரவேற்பதில் தலைவி கொண்டுள்ள விருப்பைக் குறிப்பிடுகின்றான். தான் இல் லாமல் அவள் தனியாக விருந்தினரைப் போற்ற முடியாதே என்பதால், விரைவில் செல்ல வேண்டும் என்று அவன் விரும்புகிறான். பண்பட்ட அவன் உள்ளம் தன் அன்பை எதிர்பார்க்கும் மனைவியிடத்தும், இருவரும் வளர்க்கும் அன்புச் செல்வ மாகிய குழந்தையிடத்தும் அவர்கள் இருந்து போற்றும் விருந்தினரிடத்தும் சுற்றி வளர்ந்துள்ளமையை இப்பாட்டு காட்டுகின்றது.

பலநாள் பிரிந்து இருந்த தலைவிக்குத் தலைவனின் வருகையில் ஒரு புதுமை காண்பது இயல்பு. அதனால் விருந்து விருப்புறும் தலைவி என்பதற்குத் தலைவனின் புதிய வருகையை எதிர்பார்க்கும் தலைவி என்று கொள்ளினும் அமையும். 'தலைவியின் ஆவல் நிறைந்த நெஞ்சு மகிழ, நீ விரைவில் தேரைச் செலுத்து' என்று தலைவன் கூறுவதாகவும் கொள்ளலாம். தலைவியின் ஆவல் நெஞ்சையும் மகனோடு மகிழ்ந்து பேசும் அன்புக் காட்சியைக் காண அவாவும் தலைவனின் நெஞ்சையும் இப் பாடல் வெளிப்படுத்துகிறது என்றும் கூறலாம்.

அன்புடைய நெஞ்சம் என்பது தலைவன் தலைவியரிடை மட்டும் நிலவுவதொன் றன்று என்பதையும், ஏனையவரிடத்தும் அவ்வன்பு நெஞ்சம், உடனிருப்பதால் மகிழ்ச்சியையும் பிரிதலால் துயரத்தையும் தரவல்லது என்பதையும் சங்கப்பாடல் களே அறிவுறுத்தும், மகளைப் பெற்று வளர்த்த தாய், தன் மகள் தன் ஆருயிர்த் தலைவனோடு அருஞ்சுர வழியில் உடன்போக, அதனால் அவளை நாடித் தேடி அமைந்து மனஞ்சோர்ந்து கூறும் கூற்றில், பெற்ற மனத்தின் அன்புள்ளம் வெளிப் படுகிறது.

தலைவி ஒருத்தி தான் விரும்பும் தலைவனோடு வேற்றூர் சென்று விடுகிறாள். வீட்டில் அவளை வளர்த்த தாய் அவள் சென்ற இடமெல்லாம் தேடி, வருவாரை யெல்லாம் அவர்கள் சென்றவிடம் தெரியுமா என்று வினவுகின்றாள். அவர்கள், பெண்கள் தம் தலைவரோடு உடன்போவது இல்லறத்தின் நல்லறம்தான் என்றும், யாழிலே பிறக்கும் இசை யாழுக்குரியதாகாமல் கேட்பவர்க்கே உரியது போலவும், கடலிலே பிறக்கும் முத்து அணிபவர்க்கே உரியது போலவும், மலையிலே பிறக் கும் சந்தனம் துய்ப்பவர்க்குப் பயன்படுவது போலவும் பிறந்த அகத்தைவிட்டுத் தலைவன் அகம் செல்வதுதான் பெண்களின் இயல்பு என்றும், இன்ன பிற கூறி அவலத்தை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துகின்றனர். அந்த அவலத்தை ஆற்றுதல் ஒல்லாது என்று அவள் வெளிப்படுத்தும் கருத்தில் அன்பு நெஞ்சத்தின் ஆழத்தைக் காண முடிகிறது.

"எனக்கு இருப்பது ஒரே மகள். அவளும் நேற்று வீரமிக்க தலைவனோடு பெரு மலையில் அரிய வழி கடந்து சென்று விட்டாள். இனி நீங்கள் 'அவலத்தைத் தாங்கு' என எளிதில் கூறிவிடுகின்றீர்கள். அஃது எவ்வாறு ஒல்லும்? அறிவால் ஆராய்ந்து எளிது என்று கூறுவதையெல்லாம் உணர்வால் எளிதில் ஏற்றுக்கொள்ள இயல்வ தில்லை. என் குறுமகள் விளையாடிக் கொண்டிருந்த நொச்சி மரத்தையும் அதனரு கில் உள்ள வீட்டுத் திண்ணையையும் கண்டால், அவள் இல்லாத காரணத்தால் வெறு மையான காட்சி ஈந்து அவலத்தைத் தருகிறது; என் உள்ளம் வேகிறது. அவளின்

றித் தனித்திருக்கும் அந்த இடங்களைக் கண்டு அத் தனிமைக் காட்சியைத் தாங்க என் உள்ளத்திற்கு ஆற்றலில்லை. அவள் பயின்ற இடமெல்லாம் இப்பொழுது வெறுமையுற்றிருக்கின்றது" என்று கூறுகிறாள்.

**ஒருமகள் உடையேன் மன்னே அவளும்**
**செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு**
**பெருமலை அருஞ்சுரம் நெருநற் சென்றனள்**
**இனியே, தாங்குநின் அவலம் என்றிர் அதுமற்று**
**யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடை யீரே**
**உள்ளின் உள்ளம் வேமே உண்கண்**
**மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்**
**அணியியல் குறுமகள் ஆடிய**
**மணியேர் நொச்சியுந் தெற்றியும் கண்டே** (நற்றிணை, 184)

"கண்ணிலுள்ள மணிப்பாவை வெளியே வந்து நடை கற்பது போல அழகாக நடந்து விளையாடிய அச் சிறுமகள் இப்பொழுது அகன்றுவிட்டதால் கண்களில் ஒளியிழந்து நிற்கிறேன்" என்ற கருத்தை, 'மணிவாழ் பாவை நடை கற்றன்ன என் அணியியல் குறுமகள் ஆடிய' என்ற தொடரில் அமைத்துள்ளமையை அறிகின்றோம். "அக் குறுமகள் இப்பொழுது பெருமகளாகி விட்டதுதான் என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அத்தகைய அறிவு எங்ஙனம் வந்ததோ" என்றெல்லாம் எண்ணி அலமந்து வருந்தும் அன்னையின் அன்புடைய நெஞ்சம் அவளைக் குறுமகள் என்ற தொடரால் குறிக்கின்றது.

இவ்வாறு அன்புடை நெஞ்சத்தின் பண்புமிக்க எண்ணங்களையும் அவற்றால் தோன்றும் செயல்களையும் சங்கப் பாடல்கள் அறிவுறுத்தும் அழகை நாம் அப்பாடல்கள் கொண்டு அறியமுடிகிறது. அவை உணர்வின் ஓவியங்களாக அமைந்து, நெஞ்சில் எழும் அலையோசைகளாக நம் செவியில் படுகின்றன.

**-குறுந்தொகைச் சொற்பொழிவு**

## செயல்பாடுகள்

- சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார்களா? என்பதை “அன்புடை நெஞ்சம்” என்று கட்டுரையின் துணை கொண்டு விவாதிக்க.

- “மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து”

  இப்பாடலைப் படித்து அன்றைய மக்களின் விருந்தோம்பல் பண்புடன் இக்கால விருந் தோம்பல் பண்பையும் ஒப்பிட்டுச் சொற்பொழிவு தயாரிக்க.

# இசையும் வசையும்

பாறுபடப் பறைந்த பல்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணம் தின் குறுநரி நிணம்திகழ் பல்ல,
பேஎய் மகளிர் பிணம் தழூஉப் பற்றி,
விளர்ஊன் தின்ற வெம்புலால் மெய்யர்
களரி மருங்கின் கால்பெயர்த்து ஆடி
ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடு முன்னினரே, நாடு கொண் டோரும்;
நினக்கும் வருதல் வைகல் அற்றே
வசையும் நிற்கும்; இசையும் நிற்கும்;
அதனால், வசைநீக்கி இசை வேண்டியும்,
நசைவேண்டாது நன்று மொழிந்தும்,
நிலவுக் கோட்டுப் பலகளிற்றொடு,
பொலம்படைய மாமயங்கிட,
இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு
அருகாது,
'கொள்' என விடுவை ஆயின், வெள்ளென,
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டு நீடு விளங்கும்நீ எய்திய புகழே.

(புறநானூறு, 359)



**எழுவாய்**

ஒரு வாக்கியத்தில் அமையும் வினையை / தொழிலை யார் செய்தார் அல்லது எது செய்தது என்பதற்கான விடையே எழுவாய்.இது பெரும்பாலும் வாக்கியத்தின் முதலில் வரும். எழுவாய் பெயர்ச் சொல்லாகவே இருக்கும்.
எ.டு. கண்ணன் கடவுளை வழிபட்டான்.

இங்கு வழிபடுதல் என்ற வினையை அல்லது தொழிலை யார் செய்தார் என்று வினவினால் கண்ணன் என்ற பதில் கிடைக்கும். எனவே கண்ணன் எழுவாய்.

"யானை புலியைக் கொன்றது" - என்பதில் கொன்றது எது என்று கேட்டால் யானை என்று பதில் கிடைக்கும். இங்கு யானை எழுவாய்.

**புறநானூறு**

சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூற்களுள் ஒன்று புறநானூறு. சங்க இலக்கியப் பாடல்கள் அகத்திணைப் பாடல்கள், புறத்திணைப் பாடல்கள் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. அகப்பாடல்கள் இல்லறவாழ்வு குறித்தது, காதல் வாழ்வைப் பாடுவது. புறத்திணைப் பாடல்கள் இல்லின் புறத்தே நிகழும் புற ஒழுக்கம் குறித்தது. வீரம், கொடைச்சிறப்பு, வெற்றிச்சிறப்பு குறித்துப் பாடுவது. புறம் பற்றிய நானூறு பாடல்களின் தொகுதியே புறநானூறு. நம் பாடப்பகுதியான புறப்பாடலின் திணை - காஞ்சி, துறை - பெருங்காஞ்சி. அந்துவன் கீரனைக் காவட்டனார் பாடியது.

# நிலையாமை



### மன்னன் பெருமை

வரை மருளும் உயர் தோன்றல
வினை நவின்ற பேர் யானை
சினம் சிறந்து களன் உழக்கவும்
மா எடுத்த மலிகுரூஉத் துகள்
அகல் வானத்து வெயில் கரப்பவும்
வாம் பரிய கடுந் திண்தேர்
காற்று என்னக் கடிது தொட்பவும்
வளம் மிகு மற மைந்தர்
தோள் முறையான் வீறு முற்றவும்
இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருது அவரைச் செருவென்றும்
இலங்கு அருவிய வரை நீந்தி
சுரம் போழ்ந்த இகல் ஆற்றல்
உயர்ந்து ஓங்கிய விழுச் சிறப்பின்
நிலம் தந்த பேர் உதவி
பொலந்தார் மார்பின் நெடியோன்!

(46 – 61 )

### போரில் அழிந்த பகைவர் நாடு

உறு செறுநர் புலம் புக்கு அவர்
கடி காவின் நிலை தொலைச்சி
இழிபு அறியாப் பெருந்தண் பணை
குரூஉக் கொடிய எரி மேய
நாடு எனும் பேர் காடு ஆக
ஆ சேந்த வழி மா சேப்ப
ஊர் இருந்த வழி பாழ் ஆக
இலங்கு வளை மட மங்கையர்

#### பயனிலை

எழுவாய் என்ன செய்தார் அல்லது என்ன செய்தது என்ற கேள்விக்கு விடையாக வருவது பயனிலை.

கண்ணன் என்ன செய்தான்?
வழிபட்டான்
யானை என்ன செய்தது.
-கொன்றது.
எனவே வழிபட்டான், கொன்றது என்பவை பயனிலை ஆயிற்ன. பயனிலை பெரும்பாலும் வாக்கியத்தின் இறுதியில் வரும். அது வினைச் சொல்லாகவே(முற்று வினை/ வினைமுற்று) இருக்கும்.

#### செயப்படுபொருள்

பயனிலைச் சொல்லுடன் யாரை அல்லது எதை என்று வினவினால் கிடைக்கும் பதிலே செயப்படுபொருள். கண்ணன் கடவுளை வழிபட்டான் என்பதில் யாரை வழிபட்டான் என்று கேட்டால் கடவுளை என்று பதில் கிடைக்கும். யானை புலியைக் கொன்றது

துணங்கை அம்சீர்த் தழூஉ மறப்ப
அவை இருந்த பெரும் பொதியில்
கவை அடிக் கடு நோக்கத்துப்
பேய் மகளிர் பெயர்பு ஆட
அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்
நிலைத்து ஆற்றும் குழூஉப் புதவின்
அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ
கொழும் பதிய குடி தேம்பிச்
செழுங் கேளிர் நிழல் சேர
நெடுநகர் வீழ்ந்த கரி குதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரல
கழுநீர் பொலிந்த கண் அகன் பொய்கை
களிறுமாய் செருந்தியொடு கண்பு அமன்று ஊர்தர
நல்ஏர் நடந்த நசை சால் விளை வயல்
பல்மயிர்ப் பிணவொடு கேழல் உகள
வாழாமையின் வழிதவக் கெட்டு
பாழ் ஆயின நின் பகைவர் தேஎம்.

(152 - 175)

**நிலையாமையை உணர்த்தல்**

உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே
முழங்கும் கடல் ஏணி மலர்தலை உலகமொடு
உயர்ந்த தேஎத்த விழுமியோர் வரினும்
பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக்கு எழுக என்னாய் விழுநிதி
ஈதல் உள்ளமோடு இசை வேட்கு வையே
அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ
கொன் ஒன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்
கேட்டிசின் வாழி கெடுக நின் அவலம்
கெடாது நிலைஇயர் நின்சேண் விளங்கு நல்இசை

(197 - 209)

என்பதில் எதைக் கொன்றது என்று கேட்டால் புலியை எனப் பதில் கிடைக்கும்.எனவே இங்குக் கடவுள், புலி ஆகியவை செயப்படுபொருள் ஆயிற்ன.செயப்படுபொருள் பெரும்பாலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே அமையும். இதுவும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும். இதனுடன் வேற்றுமை உருபு இணைந்தோ இணையாமலோ வரலாம்.

கண்ணன் கடவுளை வழிபட்டான் என்பதில் கடவுள் என்ற பெயருடன் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு இணைந்து கடவுளை என வந்தது.

கண்ணன் வீடு கட்டினான் என்பதில் வீட்டை என வரவேண்டியது வேற்றுமை உருபு பெறாமல் வீடு என வந்தது.

எல்லா வாக்கியங்களிலும் செயப்படு பொருள் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியங்கள் அமையலாம்.

கண்ணன் பாடம் படித்தான்- செயப்படுபொருள் (பாடம்) உண்டு.

கண்ணன் படித்தான்.- செயப்படுபொருள் இல்லை.

**தோன்றா எழுவாய்**

எழுவாய் இல்லாமலும் வாக்கியங்கள் அமையலாம்.

எ.டு. வீட்டைக் கட்டினான் என்பது ஒரு வாக்கியம். ஆனால் இதில் எழுவாய் இல்லை இவ்வாறு வருவதைத் தோன்றா எழுவாய் என்பர்.

பருந்து பறக்கல்லாப் பார்வல் பாசறைப்
படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து வேண்டு புலத்து இறுத்த
பனைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரை பொருது இரங்கும் களை இரு முந்நீர்த்
திரை இடு மணலினும் பலரே உரை செல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந் தோரே!

(231 - 237)

**-மதுரைக்காஞ்சி**
**- மாங்குடி மருதனார்**

**மதுரைக்காஞ்சி**

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் காஞ்சியாகிய நிலையாமை ஒழுக்கத்தைக் கூறிய பாடல், பத்துப்பாட்டுள் ஒன்று, இதனைப் பாடியவர் சங்கப்புலவர் தலைவரான மாங்குடி மருதனார். பத்துப்பாட்டில் 782 அடிகளை உடைய நீண்ட பாடல் இதுதான். எனவே தான் இது பெருகு வளமதுரைக்காஞ்சி எனச் சிறப்பிக்கப்பெற்றது. இப்பாடல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மதுரையைச் சித்திரிக்கிறது. அதோடு பாண்டியன் படையெடுப்பு, போர் நிகழ்ச்சிகள், பகை நாடுகளைப் பாழாக்குதல், வேந்தர் எழுவரை வெற்றி கொள்ளல், மன்னனின் ஆட்சிச் சிறப்பு போன்றவற்றையும் விளக்குகின்றது.



## செயல்பாடுகள்

- போரினால் ஏற்படும் தீமைகளைக் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு தயார்செய்க.
- போரினால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒரு படக்கண்காட்சி நடத்துக.
- விழிப்புணர்வு முகாமின் சார்பாக நடத்தப்படும் கருத்தரங்கத்தில் போரும் சமாதானமும் என்னும் தலைப்பில் கருத்தங்கக் கட்டுரை தயார் செய்க.
- இணையத்தின் உதவியுடன் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து அகம், புறம் என வகைப்படுத்தியுள்ளதன் காரணங்களைக் குறித்துக் கலந்துரையாடுக.

# சுடரொளி

## திருக்குறள்

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்தும் எய்தாப் பழி

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

அழிவில் அவை நீக்கி ஆறு உய்த் தழிவின் கண்
அல்லல் உழப்பதாம் நட்பு

**திருக்குறள்**

பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்று. உலகப்பொதுமறை என்று போற்றபடும் அறநூல். பாவகையால் பெயர் பெற்றது. பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**அசை**

எழுத்துகளால் ஆக்கப்பட்டுச் சீருக்கு உறுப்பாக வருவது அசை எனப்படும். இது இரண்டு வகைப்படும். 1. நேரசை 2. நிரையசை

**சீர்**

ஒரு அசை தனியாகவும் இரண்டும் இரண்டுக்கு மேலாகத் தொடர்ந்தும் வருவது சீர். நான்கு அசைகள் வரையிலும் ஒரு சீராக அமைவதுண்டு.

**தளை**


நின்றசீரின் இறுதி அசையுடன் வரும் சீரின் முதலசை ஒன்றுபோல அல்லது மாறுபட்டு வருவது தளை எனப்படும்.

**அடி**

மேற்கூறிய தளைகள் ஒன்றும் பலவும் சேர்ந்து வருவது அடி.

**தொடை**

பல அடிகளிலும் பல சீர்களிலும் எழுத்துகள் ஒன்று போல் வருவது தொடை ஆகும். இது எதுகைத் தொடை மோனைத் தொடை என இருவகைப்படும்.



### ❖ நான்மணிக் கடிகை

இன்னாமை வேண்டின் இரவு எழுக! இந் நிலத்து
மன்னுதல் வேண்டின் இசை நடுக! தன்னொடு
செல்வது வேண்டின் அறம் செய்க! வெல்வது
வேண்டின் வெகுளி விடல்

**நான்மணிக்கடிகை**

நான்கு நவமணிகளால் ஆய கழுத்தில் அணியும் ஆபரணம் என்பது பொருள். மனத்தில் கொள்ளும் அணியாக நான்மணிக்கடிகை உள்ளது. நான்கு மணியான கருத்துக்களை ஒவ்வொரு பாடலிலும் கொண்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் விளம்பிநாகனார். இவர் காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டு. இந்நூலில் மிகைப் பாடல்கள் மூன்றுட்பட 104 வெண்பாக்கள் உள்ளன. திருக்குறள் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

### ❑ திரிகடுகம்

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக்கு அணிகலம் நாண் உடைமை; நண்ணும்
மறுமைக்கு அணிகலம் கல்வி – இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள.

**திரிகடுகம்**

கடவுள் வாழ்த்து உட்பட 101 பாடல்கள் கொண்டது. இதன் ஆசிரியர் நல்லாதனார். ஆதன் என்னும் பெயர் சங்க காலத்து இயற்பெயர்களில் ஒன்று. இவர் திருநெல்வேலி மாவட்டத்துத் திருத்து என்னும் ஊரினர். கி.பி. 5–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

### ⌘ சிறுபஞ்ச மூலம்

குளம் தொட்டு காவு பதித்து வழி சீத்து
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி, வளம் தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சொர்க்கம் இனிது.

**சிறுபஞ்சமூலம்**

இந்நூல் 104 பாடல்களை உடையது. ஆசிரியர் காரியாசான். கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

### ◆ நாலடியார்

பொற்கலத்துப் பெய்த புலி உகிர் வாண் புழுக்கல்
அக்காரம் பாலோடு அமரார் கைத்து உண்டலின்
உப்பு இலிப் புற்கை, உயிர்போல் கிளைஞர்மாட்டு
எக் கலத்தானும் இனிது.

**நாலடியார்**

நான்கு அடிகளையுடைய பாடல்களின் தொகுப்பு தான் இந்நூல். சமணமுனிவர்கள் எழுதிய 400 பாடல்களின் தொகுப்பு. இதைப் பிற்காலத்தில் பதுமனார் என்ற புலவர் திருக்குறளைப் போல் அறம் (13) பொருள் (24) இன்பம் (3) என முப்பால்களாக நாற்பது அதிகாரங்களில் வகுத்துப் பாகுபாடு செய்தார். நிலையாமை பற்றிய பாடல்கள் மிகுதி. செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை இவற்றைக் கூறிய பின்பு இவை காரணமாக விரைவில் அறம் செய்க எனக் கூறுகிறது.

## பழமொழி

தாயானும் தந்தையாலானும் மிகவு இன்றி
வாயின் மீக்கூறுமவர்களை ஏத்துதல்
நோய் இன்று எனினும் அடுப்பின் கடை முடங்கும்
நாயைப் புலியாம் எனல்

**பழமொழி**
ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழியையும் அமைத்துப் பாடப்பெற்ற நூல். இது நானூறு வெண்பாக்களையுடையது. திருக்குறள், நாலடியார் போன்று மதிக்கப்பெறும் நூல். இந்நூலை இயற்றியவர் முன்றுறை அரையனார்.

## இனியவை நாற்பது

குழவி தளர் நடை காண்டல் இனிதே
அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே
வினையுடையான் வந்து அடைந்து வெய்து உறும் போழ்து
மனன் அஞ்சான் ஆகல் இனிது.

**இனியவை நாற்பது**
இனிய கருத்துக்களைக் கூறும் நாற்பது வெண்பாக்களை உடையது இந்நூல். இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். பதினெண்கீழ்க்கணக்கு நூற்களான அற இலக்கியங்களுள் ஒன்று.

## ஏலாதி

கடம் பட்டார் காப்பு இல்லார் கைத்து இல்லார் தம்கால்
முடம் பட்டார் மூத்தார் மூப்பு இல்லார்க்கு உடம்பட்டு
உடையராய் இல்லுள் ஊண் ஈத்து உண்பார் - மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

**ஏலாதி**
கடவுள் வாழ்த்துடன் 81 பாடல்களை உடைய நீதி நூல். ஆசிரியர் கணித மேதாவியார். இவர் தம் நூலில் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய அறங்களை வலியுறுத்துவது போல், எளியோர்க்கு உணவும் உடையும் வழங்குவதன் சிறப்பை எடுத் துரைக்கிறார். மேலும் இல்லறம், துறவறம், வீடுபேறு ஆகிய மூன்றையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.



- கல்வி, ஒழுக்கம், நட்பு ஆகிய அறக்கருத்துக்களை வலியுறுத்தும் பாடல்களைப் பதி னெண்கீழ்க்கணக்கு நூற்களிலிருந்து திரட்டிக் கலந்துரையாடுக.
- குழந்தைகள் தினத்தையொட்டி வகுப்பில் வெளியிடும் மலருக்காக 'வாழ்வும் இனி மையும்' என்ற தலைப்பில் அறநூல்களின் துணைகொண்டு சிறுகட்டுரை தயார் செய்க.

- வாழ்வை மேம்படுத்த உதவுவது அற இலக்கியமா? பக்தி இலக்கியமா? விவாதிக்க.

- இப்பாடலின் துணை கொண்டு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை வரிசைப் படுத்துக.

  "நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
  பால்கடுகம் கோவை பழமொழி – மாமூலம்
  இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே
  கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

- "அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
  செல்வச் செவிலியால் உண்டு"

  அரு – நிரை
  ளென் – நேர்
  னும் – நேர்
  அன் – நேர்
  பீன் – நேர்
  குழ – நிரை
  வி – நேர்
  பொரு – நிரை
  ளென் – நேர்
  னும் – நேர்
  செல் – நேர்
  வச் – நேர்
  செவி – நிரை
  லியால் – நிரை
  உண்டு – காசு

இது போன்று ஒரு குறட்பாவை அசை, சீர்பிரித்து எழுதி வரவும்

- "கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றென
  கைம்மை உய்யாக் காமர் மந்தி
  கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
  ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்
  சாரல் நாட! நடுநாள்
  வாரல்; வாழியோ! வருந்தும் யாமே!"

  (குறு. 69)

  இப்பாடலில் வரும் படிமத்தைக் கண்டறிந்து எழுதுக.

- படிமம், குறியீடு வெளிப்படும் பாடல்களைத் தொகுக்க.

# அகரமுதலி

அக்காரம் - சர்க்கரை
அஞ்சி - பயந்து
அட்டில் - உணவு
அணங்கு - அச்சுறுத்தும் பெண்
அரந்தை - துன்பம்
அரிவை - பெண்
அவலம் - துன்பம்
அல்லல் - துன்பம்
ஆறு - வழி
இசை - புகழ், ஒத்துக்கொள்
இழை - ஆபரணம், நூல்
இலங்குதல் - ஒளிவிடுதல்
ஈகை - கொடை
உகிர் - நகம்
ஊன் - மாமிசம்
எயிறு - பல்
எவ்வம் - துன்பம்
ஒல்கி - சோர்வுற்று
ஒல்லை - விரைவு
ஒல்லுதல் - உடன்படுதல்
ஒழுங்கீனம் - ஒழுங்கின்மை
கன்னல் - கரும்பு
கதி - வழி, புகலிடம்
கரி - யானை
களரி - உவர்நிலம்
களிறு - யானை
கா - சோலை
கிளைஞர் - உறவினர்
குழவி - குழந்தை
கையூட்டு - இலஞ்சம்
கொணர - கொண்டுவர
ஸகலம் - முழுவதும்
சலிப்பு - சோர்வு
செறுநர் - பகைவர்
சேய் - குழந்தை
துகில் - ஆடை
துணங்கை - ஒரு வகை கூத்து
தேம் - தேசம்
நனி - மிகுதி
நிணம் - கொழுப்பு, மாமிசம்
நிபந்தனை - கட்டுப்பாடு
நெடி - சில்வண்டு
பதர் - பயனின்மை
புலால் - இறைச்சி
புழுக்கல் - சோறு
பறழ் - குட்டி
புற்கை - கஞ்சி, சோறு
புன்னகை - புன்சிரிப்பு
பொருது - போரிட்டு
மதலை - குழந்தை
மந்தி - பெண்குரங்கு
மருளுதல் - பயப்படுதல்
மறமைந்தர் - வீரர்
மாந்தர் - மக்கள்
முகில் - மேகம்
மேவுதல் - அடைதல்
மொய் எழுதுதல் - நன்கொடை அளித்தல்
வசை - பழி
வறியார் - இல்லாதவர்
விழுமியோர் - சிறந்தவர்
விளர் - வெட்கம்
வெகுளி - கோபம்
வேட்கை - ஆசை, விருப்பம்
வேளிர் - குறுநில மன்னர்
வைகல் - தங்குதல், விடியற்காலம்